THAYAGAM

24 . 9 . 93


75¢

உண்மை:5
தேடல்:12

# தாயகம்

# வடக்கில் தாக்குதலுக்கு ஆயத்தம்

## வரும் ஜுன் மாதம் முன் இராணுவத்தீர்வு காண முடிவு



★விமானத் தாக்குதலில் 15 பேர் பலி

★விலைவாசி உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

★தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் முடிகின்றன

★அமிர் கொலைக்கு புலிகள் உரிமை கோரினர்

# EVERGREEN
## IMPORT & DISTRIBUTORS

**TEXTILES, GIFTS, EVERSILVER ITEMS & BOOKS**

**566 A Parliament St**
(Parliament/Wellesley)
**(416) 964-8601**
**324-9345**
**968-9545**

வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன், மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின் பிரபல
எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.

இலங்கை, இந்தியப்
பத்திரிகைகள், சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடிவினியோகமும் உண்டு.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- சாறி வகைகள்
- அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

தாயகம்

'உண்மையைத் தேடி'

# தாக்குதலுக்கு முஸ்தீபு அவசர ஆயுதக் கொள்வனவு வடக்கில் துருப்புகள் குவிப்பு

அடுத்த மாதத் தொடக்கத்திற்குள் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்தும் நோக்கில் அரசாங்கம் வடபகுதியில் இராணுவத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக முதலில் மன்னாரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல பகுதிகளில் இராணுவம் வாபஸ் பெறப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

திருகோணமலையிலிருந்து கப்பல்கள் மூலம் இராணுவத்தினர் தீவுப்பிரதேசங்களில் நிலை கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பாரிய அளவில் ஆயுதங்களும் உபகரணங்களும் வந்திறங்கியுள்ளன.

இராணுவத் தலைமைப்பீடத்தினருடன் ஜனாதிபதி கலந்து கொண்ட கூட்டத்தில் தற்போதைய பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்று கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார். இதுவரையும் இருந்த இழுபறிகள் இல்லாமல் படையினர் யுத்தத்தை நடத்திச் செல்ல கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டிருந்தது. தற்போது படைத் தளபதிகளிடம் அதிகளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பத்தாயிரம் பேரை சேர்த்து தற்போது பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கடற்படைக்கும் விமானப்படைக்கும் ஆட்சேர்ப்பு தொடங்கப்பட்டிருக்கிறது.

பல பீரங்கிப் படகுகள் உட்பட சுமார் ஆயிரம் கோடி ருபா பெறுமதியான ஆயுதங்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளன. இந்த வருட இறுதியில் வரவேண்டிய இந்த ஆயுதங்களை உடனடியாக பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. பிரான்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் கொழும்பில் உள்ள நிறுவனம் ஒன்று நான்கு படகுகளை இந்த மாத இறுதிக்குள் நிர்மாணித்து வழங்கும்.

4ம் பக்கம் பார்க்க..

# அமிர் கொலைக்கு புலிகள் உரிமை கோரினர்

நான்கு வருடங்களுக்குப் பின்னர் அமிர்தலிங்கத்தைக் கொன்றது தாங்களே என புலிகள் உரிமை கோரியுள்ளனர். தமிழ் மக்களின் போராட்டத்திற்கு அமிர் துரோகமிழைத்து விட்டதாகவும் இதனால் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அமிரைக் கொன்ற விசு எனப்படும் ராசையா அரவிந்தனை புலிகள் மேஜர் பதவிக்கு உயர்த்தியுள்ளனர். அமிரைக் கொன்ற போது இவர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தார்.

அமிர் கொல்லப்பட்ட போது கொழும்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த பாலசிங்கம் அதற்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்திருந்தார். தன்னுடைய சுயலாபத திற்காக போராட்டத்தை பயன்படுத்தியதாகவும் இதனால் இவர் தமிழர்களின் தலைவராக கருதப்பட முடியாதவர் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

முன்பு விசு தமது இயக்கத்திலிருந்து விலகி விட்டார் என்று புலிகள் தெரிவித்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் வெளிவரும் புலிகளின் ஈழநாதம் என்ற பத்திரிகையில் 'துரோகத்திற்கு தண்டனை வழங்கியவர் விசு' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று வெளி வந்திருந்தது.

அதில் 'எங்கள் தேசிய விடுதலையை தமது சொந்த நலனுக்காக விற்ற துரோகிகளுக்கு

4ம் பக்கம் பார்க்க..

# காமினி இணைப்பு பற்றி குழப்பமான செய்திகள்

காமினி குழு அரசுடன் இணைவது பற்றி குழப்பமான செய்திகள் வெளிவந்துள்ளன. ஒரு புறத்தில் அடுத்த மாத ஆரம்பத்தில் இவை இணையும் என்றும் அடுத்த பட்ஜட்டுக்கு முன்னர் இந்த இணைப்பை நடத்த வேண்டும் என ஜனாதிபதி விரும்புவதாகவும் செய்தி ஒன்று கூறுகிறது. காமினி இணைவதற்கு வசதியாக ஒரு எம்.பி தனது பதவியை ராஜினாமா செய்ய முன்வந்துள்ளார் என்றும் அவரது இடத்திற்கு காமினி வருவார் என்றும் கூறப்படுகிறது. காமினிக்கு அமைச்சரவையிலும் இடம் கிடைக்கலாம் என்றும் அச்செய்தி கூறியது.

ஆனால் மறுபுறத்தில் இன்னொரு பத்திரிகைச் செய்தியில் காமினி மற்ற எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மகாஜன எக்சத் பெரமுன, ஈ.பி.ஆர்.எல்.எஃப் போன்ற கட்சிகளுடன் காமினி பேசியதாகவும் அநுராவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த ஆவலாய் இருப்பதாகவும் கூறிய அச்செய்திகள் தற்போதைய நடவடிக்கைகளை சுதந்திரக்கட்சி நடத்தி தலைமை வழங்காததால் புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று காமினி கருதுவதாகவும் கூறுகிறது.

## ஏடு இட்டோர் இயல்

# வீர புரான் அப்புவும் இராணுவத் தீர்வும்

குடாநாடு மீதான பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இராணுவம் தயாராகி வருவதாக செய்திகள் கூறுகின்றன. அத்துடன் இராணுவத்தின் கட்டுப்பாட்டு நிர்வாக முறையை மாற்றிய ஜனாதிபதி தற்போது படைத்தளபதிகளுக்கு விசேட அதிகாரங்களைக் கொடுத்துள்ளார். அத்தோடு பயங்கரவாதப் பிரச்சனை தான் இலங்கையில் உள்ளது, இனப்பிரச்சனை அல்ல என்பதை திரும்பத் திரும்பக் கூறுவதுடன் பயங்கரவாத நடவடிக்கைகளை அடக்குவதற்கான கால எல்லையைக் கொடுத்ததுடன் அதில் வெற்றியீட்டினால் பதவி உயர்வுகள் காத்திருக்கின்றன, தோல்வியடைந்தால் 'உங்கள் கழுத்துக்கள் வெட்டப்படும்' என்றும் கூறியதாக செய்திகள் கூறுகின்றன.

அரசாங்கத்தின் புதிய நிலைப்பாட்டுக்கான காரணம் என்ன? நாங்கள் முன்பு குறிப்பிட்டபடி அரசு கட்டிலில் யார் இருந்தாலும் அவர்கள் இனவாதத்தால் இலகுவில் பீடிக்கப்பட்டு விடுவார்கள். தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப் போய் தங்கள் பதவிகளை இழக்க யாருக்கும் துணிவும் இல்லை. இதனால் தான் ஜனாதிபதி அடுத்த தேர்தல் வரை எந்த அரசியல்தீர்வுக்கும் தயார் இல்லை என்று முக்கிய அமைச்சர் ஒருவர் கூறியதாக செய்தி கூறுகிறது. மிதவாதி என்று புகழப்பட்ட ஜனாதிபதியின் போக்கில் ஏற்பட்ட மாற்றமும் வருகின்ற தேர்தலை ஒட்டியது தான்.

அரசியலில் திடீரென்று 'தலைமை அழுத்தப்பட்ட' ஜனாதிபதி தனக்கென விசுவாசிகள் கூட்டத்தையோ, தலைமைத்துவத்துக்கான வசீகரத்தையோ கொண்டிருக்கவில்லை. எதிர்பாராத விதமாக கிடைத்த பதவியை எப்படியாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் அவர் தனது கவனத்தையும் செலவிடுகிறார். பிரேமதாசாவின் ஆதரவாளர்களை ஒதுக்கி அடக்கி வைப்பதுடன் தனக்கான ஆதரவு தேடும் பணியிலும் இறங்கியிருக்கிறார். காமினியை கட்சிக்குள் கொண்டு வர முயல்கிறார். இவை கட்சிக்குள் தனது செல்வாக்கை நிலைப்படுத்துவதற்கான முயற்சி. தற்போதைய சூழ்நிலையிலும் வசீகரத்தன்மையுள்ள யாரும் கட்சிக்குள் இல்லை.

மறுபுறத்தில் தேர்தல் ஒன்று வரும் போது சிறிமாவுடன் ஒப்பிடும் போது ஜனாதிபதியின் வசீகரம் குறைவானது. இதனால் எழுந்தது தான் இந்த திடீர் இனவாதம்.. சிங்கள, பௌத்தத்தின் தலைவனாக தன்னை அடையாளம் காட்டி தீவிர தமிழ் எதிர்ப்புணர்வைக் காட்டுவதன் மூலம் வாக்குகளைக் கைப்பற்றும் நோக்கமே அன்றி இதில் வேறெதுவும் இல்லை.

தன்னுடைய அதிகாரங்களை கைவசம் வைத்துக் கொள்வதற்காக அரசியலமைப்பு ரீதியாகவும் இவர் முயன்று வருகிறார். இதனால் தான் தனக்கு பதவி மீது ஆசை இல்லை என்ற பிரமையை உருவாக்கி சகல அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்ற நான் தயார் என்கிறார். ஆனால் உண்மையில் அதற்கான காரணம் ஜனாதிபதி தேர்தல் ஒன்று நடைபெற்றால் சிறிமாவின் வசீகரம் முன் தான் நிற்க முடியாது என்ற பயமாகத் தான் இருக்க வேண்டும். இதற்கு அடிப்படையாக அரசியலமைப்பில் ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று மாற்றினால் தான் தேர்ந்தெடுக்கப படுவது உறுதியானது என்று அவர் நம்புகிறார். இல்லாவிடில் தமிழ் மக்களின் வாக்குகள், தொண்டமானின் வாக்குகள், முஸ்லிம்களின் வாக்குகள் என்பன பல சிக்கல்களைக் கொடுக்கக் கூடும்.

இதனால் தான் தற்போது விழித்துக் கொண்ட எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி முறையை மாற்றுவது பற்றிய கருத்தில் தற்போது கொஞ்சம் பின்னடிக்கின்றன. ஆனாலும் ஜனாதிபதியின் 'பயங்கரவாதப் பிரச்சனை' பற்றிய கருத்துக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கத் தவறியுள்ளன.

இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கு கிழக்கில் அமைதியை ஏற்படுத்தி தேர்தலை நடத்துவதுதான் தனது திட்டம் என்று கூறும் ஜனாதிபதியின் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும்? ஜே. ஆர் காலம் தொடக்கம் பயங்கரவாதத்தை அளிக்க பல்வேறு காலக்கெடுக்கள் விதிக்கப்பட்டுத் தான் இருக்கின்றன. 'பயங்கரவாதத்தை அழிக்க பேயுடனும் ஒப்பந்தம் செய்வேன்' என்று இஸ்ரேலைக் கொண்டு வந்து, 'அமைதியை ஏற்படுத்த' இந்தியப்படைகளைக் கொண்டு வந்து எதுவித பலனும் இருக்கவில்லை. பின்னர் பிரேமதாசா புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் பலன் கிட்டவில்லை. தற்போது இவர் இராணுவ நடவடிக்கை என்கிறார். 'ஈழம் தவிர்ந்த எல்லாம் தருகின்ற' பிரேமதாசவின் பேச்சுக்கு இவரது பயங்கரவாதம் பற்றிய பேச்சு மிகவும் முரணானது.

கொப்பேகடுவ இறந்ததன் பின்னர் பாரிய தாக்குதல்கள் எதுவும் நடைபெறவில்லை. இராணுவமும் கடற்படையும் பல்வேறு இழப்புகளை சந்தித்த வண்ணம் இருக்கின்றன. கொப்பேகடுவ காலத்தில் பிடிக்கப்பட்ட பிரதேசங்களைத் தவிர வேறு புதிய பிரதேசங்கள் எதுவும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. தீவுப்பகுதி, மாதகல் பிரதேசங்கள் என்று பல பிரதேசங்கள் அப்போது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தன. இறுதியாக குனையேட ஊடிரவேனடிறடே என்ற பெயரில் குடாநாடு மீது இறுதித் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்பாக கொப்பேகடுவ கொல்லப்பட்டார்.

ஜே.ஆர் காலத்தில் லலித் பாதுகாப்பு அமைச்சராய் இருந்த போது இராணுவத் தலைவர்களில் பலர் ஜே. ஆருக்கு நெருக்கமானவர்கள். இதனால் பல நடவடிக்கைகள் 'கட்டவிழ்த்து விடப்பட்ட' நிலையில் நடைபெற்றன. பிரேமதாச பதவிக்கு வந்ததும் இராணுவத் தலைவர்களின்

விசுவாசத்தின் மீது சந்தேகம் கொண்டதனால் அவர்களுக்கிடையில் வேறுபாடுகளை வளர்த்து 'பிரித்தாளும் தந்திரத்தை' கையாண்டு கொண்டிருந்தார். இதனால் தான் யார் தளபதியாவார் என்ற ஊகங்களை நீண்ட காலத்திற்கு விட்டு பின்னர் கொப்பேகடுவவை விட்டு சிசில் வைத்தியரத்தினவை தளபதியாக்கினார். பின்னர் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கும் இராணுவத் தலைமைப்பீடத்திற்கும் இடையில் அதிகாரங்களை அடிக்கடி மாற்றி இரு சாராருக்கும் இடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்துவதால் தான் சௌகரியமாக இருந்து கொண்டார்.

இந்த தலைமைப்பீட மோதல்கள் காரணமாக பல இராணுவ நடவடிக்கைகள் இழுபட்டு தோல்விகளைத் தழுவிக் கொண்டன. அதையும் மீறி கிடைத்த பல வெற்றிகளும் சில இராணுவத் தலைவர்களின் தனிப்பட்ட ஆர்வம் காரணமானதே.

முழுமையான இராணுவ நடவடிக்கை ஒன்று நடைபெறுவதால் ஏற்படக் கூடிய மக்கள் இழப்பால் வரக்கூடிய வெளிநாட்டு கண்டனங்கள் காரணமாக அரசியல் தீர்வு காணப் போவதாக அரசியல் உயர் மட்டங்கள் பேசுவதால் இராணுவத் தலைவர்கள் கூட பொறுமையிழந்து 'அரசியல் தீர்வு தான் சரியானது' என்று கூறும் அளவுக்கு சென்று விட்டன. இதனால் ஒரு புறத்தில் இராணுவத் தீர்வும் மறுபுறத்தில் அரசியல் தீர்வும் என்று இரண்டு வேறுபட்ட தீர்வு நோக்கிய முயற்சிகள் நடைபெற்றன. எது முதலில் வெற்றி பெறுகிறதோ அதை பற்றிக் கொள்வோம் என்ற நோக்கம் அரசுக்கு இருந்திருக்கக் கூடும்.

இராணுவத் தலைமைப் பீடங்களில் இருந்த ஊழல், அரசியல் தீர்வு முயற்சிகளால் ஏற்படும் உற்சாகக் குறைவு, இராணுவம் அடைந்த தோல்விகளால் ஏற்படும் பாதிப்பு, பாதிப்புகள் குறித்து அரசின் அசிரத்தை என்று பல காரணிகள் கீழ் மட்டங்களில் முழுமையான அர்ப்பணிப்பை வழங்கியதில்லை. இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் இராணுவத்தை விட்டு தப்பியதற்கும் காரணம் இதுவே.

புதிய இராணுவ நடவடிக்கைளுக்காக ஆட்சேர்ப்பும் அவசர ஆயுதக் கொள்வனவும் புதிய முஸ்தீபுகளுக்கு பலம் சேர்க்கும் நோக்குடன் தான்.

ஆனால் இது எவ்வளவு தூரம் வெற்றி பெறும்? அத்துடன் சாத்தியமானதா? Air Superiority எனப்படும் வான்பலம் இருந்தும் கூட இராணுவத்தால் இன்னமும் வெற்றியை அடைய முடியவில்லை. ஆயுத பலமும் ஆட்பலமும் வெற்றியைத் தீர்மானிப்பன அல்ல. யுத்த தந்திரோபாயமே முக்கியமானது. எந்த யுத்தத்திலும் 'இதயங்களையும் மனங்களையும் வெற்றி கொள்கின்ற' முயற்சியே முதன்மையானது. மக்கள் குடியிருப்புகளின் மீது குண்டுவீசுவதோ, அப்பாவிப் பயணிகளைக் கொல்வதோ அவர்களின் எண்ணிக்கையை பயங்கரவாதிகளின் மரணமாகக் காட்ட முடியுமே தவிர மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்ள வழிவகுக்காது.

கைப்பற்றப்பட்ட வவுனியா, தீவுப்பகுதி என்பவற்றில் இராணுவம் 'பொதுத்தொடர்பு' வேலைகளில் ஈடுபட்டாலும் மற்ற இடங்களில் நடைபெறும் தாக்குதல்களால் அவை வலுவிழந்து போகின்றன.

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை கட்டுப்பாட்டில் வைக்க போதிய ஆட்பலம் இல்லை. கைப்பற்றப்பட்ட மன்னார் பிரதேசங்களில் இருந்து இராணுவம் வெளியேறி விட்டது.

அத்தோடு இராணுவத்திற்கு என வசீகரமான தலைமை இல்லை. கொப்பேகடுவவின் வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படவில்லை. தற்போதைய இராணுவத் தளபதிகள் பலரிடம் சலிப்புத் தன்மையே தவிர உற்சாகம் எதுவும் இல்லை. முழுமையான எச்சரிக்கை இருந்தும், ஜானகி புர தாக்குதலின் போது தளபதி கொழும்பில் நின்றிருக்கிறார். சிசில் வைத்தியரத்தினவும் ஒய்வுகாலத்தை எதிர்நோக்கியிருக்கிறார். இந்த நிலையில் போரை முன்னெடுத்துச் செல்ல இவர்களால் முடியுமா என்பது சந்தேகமே.

இராணுவ நடவடிக்கையோ அரசியல் நடவடிக்கையோ இரண்டிலும் அரசு தெளிவாக இல்லை. முழுமையான இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு முழுமையாக இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட வேண்டும். ஆனால் அதனால் ஏற்படும் பாதிப்புகளால் வரும் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் திராணியில் அரசும் இல்லை.

இந்த இராணுவ நடவடிக்கை என்ன நோக்கில் நடைபெறுகிறது? பயங்கரவாத நடவடிக்கை என்றால் புலிகளுக்கு எதிரானது என்று வைத்துக் கொண்டாலும் விமானத் தாக்குதலின் போது பெரும்பாலும் கொல்லப்படுவது அப்பாவி மக்களே. பொதுமக்களை விடுத்து புலிகளை மட்டும் கொல்வதற்கான Smart bombs என்று எதுவும் இல்லை.

ஒருவேளை இராணுவத் தாக்குதலால் குடாநாட்டை கைக்குள் கொண்டு வர முயலலாம். அதில் இராணுவமும் பலத்த அழிவை ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். ஆனால் குடாநாட்டை கைக்குள் கொண்டு வருவது தான் பிரச்சனைக்கு தீர்வு என்று அரசு நினைத்தால் அது முட்டாள் தனம். இவ்வாறான தாக்குதல்கள் புலிகள் தான் தமிழ் மக்களின் பாதுகாவலர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தும்.

புலிகளிடமிருந்து மக்கள் ஆதரவை அன்னியப்படுத்துவதற்கு சரியான அரசியல் தீர்வினாலேயே முடியும். இராணுவத் தாக்குதல் எதிர்விளைவையே ஏற்படுத்தும்.

இப்படி எத்தனையோ இறுதித் தாக்குதல்கள் வந்து போயிருக்கின்றன. எங்களுக்கும் எத்தனையோ இறுதி யுத்தங்கள் வந்து போயிருக்கின்றன. எதுவுமே நடைபெறவில்லை.

ஒருவேளை சரியான அரசியல் தீர்வு ஒன்றுடன் இணைந்த இராணுவத் தாக்குதல் வெற்றி அளிக்கக் கூடும்.

தேர்தல் நடைபெறும் வரை இவ்வாறான பிரமையை ஏற்படுத்தும் நோக்கமாகக் கூட இது இருக்கலாம். வளைகுடா யுத்தத்தின் பின் ஹீரோவான புஷ் போல தானும் புலிகளை அடக்கிய வீரனாகக் காட்டி தேர்தலில் வெல்லும் நோக்கமாயிருந்தால், தன்னை 'வீர புரான் அப்புவாகக்' காட்டும் டிங்கிரி பண்டாவின் முயற்சி தோல்வியில் தான் முடியும்.

## மாத்தயா சிறையில்

மாத்தயாவின் கைது பற்றி மேலும் பல தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. குடாநாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில் மாத்தயாவுக்கு ஆதரவான தமது குடும்ப அங்கத்தினர் ஒருவர் புலிகளால் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மாத்தயா முதலில் ஒரம் கட்டப்பட்டு அங்குள்ள புலிகளின் புனர்வாழ்வு முகாம் ஒன்றைக் கவனிக்கும் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டிருந்ததாகவும் ஒருநாள் அவரை அங்கிருந்து கைது செய்து சென்றதாகவும் செய்திகள் கூறுகின்றன. அவருடன் அவரது நெருங்கிய ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். தற்போது அவர் சிறை வைக்கப்பட்டு அங்கு தாக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மாத்தயாவுக்கு ஆதரவாக கதைத்த ஒருவர் கைது செய்யப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டதாகவும் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது தப்ப முயன்ற போது சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

## செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் மன்னிப்புக் கோரினர்

செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் மன்னிப்புக் கேட்டுள்ளதாக செய்திகள் தெரவிக்கின்றன. பிரபாகரனின் கட்டளையின் பிரகாரம் பாலசிங்கம் இந்த மன்னிப்பைக் கோரியதாக அச செய்திகள் தெரிவித்தன.

கடந்த மாத இறுதியில் புலிகள் பருத்தித்துறைக் கடலில் வைத்து ட்வோரா படகு ஒன்றைத் தகர்த்தது தெரிந்ததே. அதைத் தாக்குவதற்காக நான்கு கப்பல்களில் புலிகள் சென்றிருந்தனர் என்றும் அவர்களின் பயணம் ஆரம்பித்த இடம் செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறை அலுவலகத்திற்கு அருகாமையில் என்றும் கூறப்படுகிறது.

அப்போது செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலிருந்த அதிகாரி தனது ரேடியோ சாதனத்தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்ட புலிகள் அவர் தங்கள் நடவடிக்கை பற்றி தகவல் கொடுப்பதாக நினைத்து அவரைத் தாக்கியதுடன் அங்கிருந்த அண்டெனாவும் சேதப் படுத்தப்பட்டது.

ஆனால் அந்த அதிகாரி தனது வழமையான தொடர்புகளையே அப்போது கையாண்டதாகவும் இதனால் அவரிடம் மன்னிப்புக் கேட்டதாகவும் கூறப் படுகிறது.

## யூரியா கடத்த முயன்றவர் தேடப்படுகிறார்

யாழ்ப்பாணத்திற்கு யூரியா அனுப்ப முயன்ற வர்த்தகர் ஒருவர் தற்போது கொழும்புப் பொலிசாரால் தேடப்படுகிறார். வடபகுதிக்கு செல்லும் கப்பலில் அமோனியா பசளை என்று கூறி யூரியாவை அனுப்ப இவர் முயன்றதாகவும் யூரியா வடபகுதிக்கு கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டதால் இது சட்ட விரோதமானது என்பதால் இவர் தேடப்படுவதாகவும் கூறப்படுகிறது.

யூரியா வெடிகுண்டுகள் தயாரிக்கப் பயன்படுவதாக இலங்கை அரசினால் கருதப்படுகிறது. தற்போது இந்த

5ம் பக்கம் பார்க்க...

## மீன்பிடிக்கான தடை தளர்த்தப்பட்டது

வடக்கு கிழக்கு கரையோரங்களில் மீன் பிடிக்க இலங்கை அரசு விதித்த தடை தற்போது தளர்த்தப்பட்டுள்ளது. கச்சதீவுப் பகுதி இலங்கைக்கு கையளிக்கப பட்ட போது அப்பகுதியில் இரு நாட்டு மீனவர்களும் மீன் பிடிக்க அனுமதி வழங்குவதாக இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. இதனால் இந்த உடன்படிக்கையை ஆதாரம் காட்டி இந்தியா தெரிவித்த ஆட்சேபத்தினால் தற்போது இந்த தடை கச்சதீவை அண்டிய பகுதிகளில் தளர்த்தப்பட்டிருக்கிறது.

## யுத்தம்...

விமானப்படையும் விமானங்களை பெறவிருக்கிறது.

இந்த உத்வேகத்துடன் புதிய தாக்குதலுக்கு இராணுவம் தயாராவதாக தெரிகிறது. முதலில் விமானத் தாக்குதல் பல இடங்களில் நடைபெற்றிருக்கின்றது.

இவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்கொள்ள புலிகளும் தயாராகியுள்ளதாக கூறப்படுகிறது. யுத்தத்தை எதிர்கொள்ள தயாராகுமாறு புலிகள் மக்களுக்கு சுவரொட்டி மூலம் அறிவித்துள்ளனர். அச்சுவரொட்டிகளில் யுத்தம் தொடங்கினால் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பங்கர்கள் அமைப்பதற்காக பனை மரங்கள் தறிப்பதற்கு தற்போது புலிகளிடம் அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது என தகவல்கள் கூறுகின்றன.

## அமிர்...

தண்டனை வழங்கப்பட்டே ஆக வேண்டும், துரோகிகளுக்கான தண்டனையை விரிவு படுத்தாவிடில் தமிழீழ மண்ணில் மரணங்கள் தொடர்கதையாக இருக்கும், தனி நாட்டுக் கோரிக்கையை தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று ஒரு காலத்தில் கூறியவருக்கு தனி நாட்டுக்கான போராட்டத்தை காட்டிக் கொடுப்பது தற்கொலை க்கு ஒப்பானது, துரோகத்தனமானது என்று வரலாறு கூறிற்று என்று கூறப்பட்டுள்ளது.

# வானொலி நிலையத்திற்கான எதிர்ப்பு வலுக்கிறது

இரணவிலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வொய்ஸ் ஓஃப் அமெரிக்காவின் ஒலிபரப்பு நிலையத்திற்கு அப்பகுதியில் வாழும் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பது தெரிந்ததே. இந்த நிலையத்தின் நிர்மாணத்திற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். சிலாபத்திலிருந்து இரணவில வரை இந்த ஊர்வலம் நடைபெற்றது. அங்கு நிலையத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பலத்த பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

இதனல் அமெரிக்க தூதுவரகத்தின் தகவல்பிரிவு பத்திரிகை யாளர்களை அங்கு அழைத்துச் சென்றது.

இந்த ஒலிபரப்பு நிலையம் அமைப்பதற்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்று எதிர்ப்புத் தெரிவிப்போர் கூறியுள்ளனர். ஆனல் இலங்கை அரசே இந்த ஒப்பந்தத்தை வெளியிட முடியும் என்றும் ஆயினும் அதை வெளியிடுவதில் தங்களுக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை என்றும் தகவல் அதிகாரிகள் பத்திரிகையாளருக்கு கூறியுள்ளனர்.

இருபது வருட குத்தகைக்கு வருடாந்தம் நாற்பதாயிரம் டொலர்படி இந்த நிலையம் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 35 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்படும் இந்த நிலையத்தின் நிர்மாணிப்பு வேலைகள் 94ம் ஆண்டு முடிவடையும்.

நானூறு அடி உயரமான கோபுரங்கள் மூன்று நிர்மாணிக்கப் படுகின்றன. கிழக்கு ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, ரஷ்யா, சீன, தூரகிழக்கு ஆகிய நாடுகளுக்கு ஒலிபரப்புச் செய்ய இந்த கருவிகள் பயன்படுத்தப்படும்.

எக்கலவில் ஏற்கனவே சிறிய நிலையம் ஒன்று இருந்த போதும் தங்கள் உபகரணங்களை நவீனமயப்படுத்தும் நோக்குடன் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 413 ஏக்கர் தென்னம் தோட்டத்தில் இந்த புதிய நிலையத்தை அமைக்க தீர்மானிக்கப் பட்டது. புதிய நிலையம் கட்டி முடிந்ததும் எக்கலவில் உள்ள பழைய நிலையம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திற்கு ஒரு ரூபாய்க்கு விற்கப்படும்.

இந்த ஒலிபரப்புக் கருவிகளால் கதிரியக்கப் பாதிப்புகள் ஏற்படும் என்ற குற்றச்சாட்டை மறுத்த அதிகாரிகள் எல்லைக்கும் அன்டெனக்களுக்கும் இடையில் 300 மீற்றர் தூரம் இருப்பதாக குறிப்பிட்டனர்.

ஆயினும் இத்தோட்டத்தில் உள்ள ஏழாயிரம் தென்ன மரங்களில் பாதிக்கு மேல் தறிக்கப்பட உள்ளன.

# நாட்டைப் பிரிக்க விடமாட்டேன் என்கிறர் ஜனதிபதி

தற்போதைய பிரச்சனை பயங்கரவாதப் பிரச்சனை என்ற தனது கருத்தை வலியுறுத்தி ஜனதிபதி இன்னெரு தடவை உரையாற்றியிருக்கிறர். ஹிங்குரான் கொடையில் நடைபெற்ற ஐ.தே.கட்சி பிரதேச சபை உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றிய ஜனதிபதி 'நான் இருக்கும்வரை நாட்டைக் கூறுபோட அனுமதிக்க மாட்டேன், தீவிரவாதிகள் நாட்டைப் பிரிக்க முயல்கிருர்கள். இது இந்த ஜன்மத்தில் நிறைவேருது. அவர்கள் இந்தப் பிரச்சனையை பெரும் பிரச்சனையாக உலகத்திற்கு காட்டுகிருர்கள். நாம் யாழ்ப்பாண மக்களுக்கு எதைக் கொடுக்கவில்லை? தொழில், மொழி, மின்சாரம், பல்கலைக்கழகம் ஆகியவற்றை கொடுத்தோம். எனது பிரதான செயலாளர்கள் தமிழர்களான பாஸ்கரலிங்கமும் சண்முகலிங்கமுமே' என்று கூறியுள்ளார்.

இந்த நாட்டைப் பிரிக்க நாம் இடமளிக்க மாட்டோம், இந்த பிரச்சனை புரையோடிப் போன புண்ணுக இருக்கிறது, இதை சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்த வேண்டும், இதற்காக பொதுமக்கள் பேச்சைப் போன்றே செயலிலும் ஒத்துழைக்க வேண்டும், நாட்டில் இனவாதப் பிரச்சனை இல்லை, யாழ்ப்பாண மக்கள் எம் பகுதியில் எம்முடன் ஐக்கியமாக வாழ்கிருர்கள். தொழில்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்கிருர்கள். தமிழ் மக்கள் கொழும்பில் வாழ்கிருர்கள். நாம் தமிழர்களுடன் ஒன்றுக வேலை செய்து பழக்கப் பட்டவர்கள். யாழ்ப்பாண மக்களுடன் எங்களுக்கு கோபம் எதுவும் இல்லை.

நாம் 2500 வருடங்களாக சகோதரர்களாக வாழ்ந்தோம். இனவாதத்தை தீர்க்க யுத்தம் தேவையில்லை, நாட்டைப் பிரிக்கவே யுத்தம் தேவை

மேற்கண்டவாறு ஜனதிபதி உரையாற்றினர்.

## யூரியா...

பொருட்களை ஏற்றிச் செல்ல அனுமதித்த அதிகாரிகள் மீதும் விசாரணை நடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் பணியாற்றும் ஒருவர் இந்தப் பைகளில் யூரியா இருப்பதைக் கண்டு கடற்படையினருக்கு தகவல் கொடுத்ததை அடுத்தே இந்த முயற்சி முறியடிக்கப் பட்டிருந்தது.

# அடுத்த வருடமே அகதிகள் வருகை

இந்தியாவிலிருந்து நாடு திரும்ப விரும்பும் அகதிகள் விபரங்கள் சேகரிக்கப் படுகின்றன. இந்தியாவிலிருந்து ஏற்கனவே முப்பதாயிரம் பேர் நாடு திரும்பியுள்ளனர்.

இனிமேல் அகதிகள் அடுத்த வருடம் மே மாதம் அழைத்து வரப்படுவர். இவர்கள் மன்னருக்கே வருவார்கள். மன்னரில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஏற்கனவே வந்த அகதிகளில் சிலர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 15 பேர் பலி

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விமானத்தாக்குதல்களில் பதினைந்து பேர் வரை கொல்லப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் புலிகள் நடத்திய ஊர்வலம் ஒன்றில் விமானங்கள் குண்டுவீசியதால் ஐம்பது பேர்வரை காயமடைந்திருக்கிறார்கள்.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவில் திலீபன் நினைவாக நடத்திய விழா ஒன்றில் அங்கு சுமார் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் கூடியிருந்தனர். அப்போது வந்த புகாரா விமானங்கள் தாழப் பறந்து ஒன்பது குண்டுகளை வீசின. மக்கள் பாதுகாப்புக்காக அப்போது சிதறியோடினர். காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டிருக்கின்றனர்.

அப்போது புலிகள் கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

விளையாட்டரங்கு ஒன்றின் மீது நடைபெற்ற குண்டுவீச்சில் 12 பொதுமக்களும் மூன்று புலிகளும் கொல்லப்பட்டனர் என்றும் அங்கிருந்து வந்தவர்கள் கூறினர்.

## எதிர்ப்பு ஊர்வலம்

பெலியத்தையில் விலைவாசி உயர்வை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நடத்திய ஊர்வலம் மீது பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததுடன் வான் நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை சுதந்திரக்கட்சியின் சார்பில் மகிந்த ராஜபக்ச இந்த ஊர்வலத்தை ஒழுங்கு செய்திருந்தார். 3500 பேர் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்தில் யாரும் காயமடையவில்லை. அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிராக பத்து லட்சம் கையொப்பம் வாங்கும் திட்டம் அப்போது தொடங்கப்பட்டது.

## கைதிகள் கோரிக்கை

புலிகளால் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் பொலிசார் தற்போது ஐவர் ஐவராக தனித்து அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. தங்களை விடுவிக்கும்படி இவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.

## தெரிவுக்குழு கலைகிறது

தெரிவுக்குழு எந்த நியாயமான தீர்வும் காணுமல் முடிவுக்கு வருகிறது. 43 பேர் கொண்ட இந்தக் குழு அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும். கடந்த செவ்வாய் நடைபெற்ற கூட்டத்தில் இருபது பேரே கலந்து கொண்டனர். யாராவது அதன் அறிக்கையில் மாற்றம் செய்ய விரும்பின் அக்டோபர் 15ம் திகதிக்கு முன் தெரிவிக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கைப் பிரிக்கும் இந்த குழுவின் திட்டத்தை எதிர்த்து தமிழ் குழுக்கள் பகிஷ்கரித்து வருகின்றன.

## ராஜினி நினைவு தினம்

ராஜினி திரணகம கொல்லப்பட்ட நான்காவது நினைவு தினம் கடந்த 21ம் திகதியாகும். 21.9.89 இவர் புலிகளால் கொல்லப்பட்டிருந்தார். முறிந்த பனைமரம் என்ற பெயரில் இவரும் சேர்ந்து எழுதிய நூல் இலங்கை இனப்பிரச்சனையில் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்திருந்தது.


# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust, starter, Shocks, Altenater, Clutch
Radio, Transmission, Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil



# பிறந்த நாள் வாழ்த்து

# உலகநாதன் யசோதா




யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த
திரு.திருமதி உலகநாதன் சீதா தம்பதிகளின்
செல்வப் புதல்வி யசோதா 25-09-93 சனிக்கிழமை
மாலை 5.00 மணிக்கு தனது எட்டாவது
பிறந்தநாளை கனடாவில் உள்ள
805 Dovercourt Rd ல் உள்ள மண்டபத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.
(Bloor & Dovercourt- OSSINGTON SUBWAY
க்கு அருகாமையில்)

இவரை அப்பா, அம்மா,
அண்ணன்மார், தம்பிமார்,
தமிழீழத்தில் உள்ள அப்பப்பா,
அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா,
குஞ்சி சித்தப்பா குடும்பத்தினர்,
றஞ்சித் சித்தப்பா குடும்பத்தினர்,
காந்தி மாமா குடும்பத்தினர், சிறி
சித்தப்பா குடும்பத்தினர்,
குலேந்திரன் மாமா, ராசமலர்
அத்தை அம்மா குடும்பத்தினர், சவுதி
றஞ்சித் சித்தப்பா, பாஸ்கரன்
சித்தப்பா, சுவிஸ் நாகேஸ் மாமா,
ராதன் சித்தப்பா, சிங்கப்பூர்
செல்வராணி சித்தி, பாரிஸ்
யோகேந்திர மாமா, கனடா
இரத்தினம் அப்பப்பா, பரமேஸ்வரி
அப்பம்மா, பிறேமா அத்தை மாமா,
மச்சான், மச்சாள், குணா அண்ணா,
துரைசிங்கம் மாமா, மகா அத்தை,
செட்டிமாமா குடும்பத்தினர் மற்றும்
உற்றார் உறவினர்கள் நண்பர்கள்
அனைவரும் செல்வியைப் பல்லாண்டு
காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.
தகவல்; K,உலகநாதன் (516 1839)


# GOOD BYE BALDNESS

**முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி**



ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

**பரீட்சித்துப்பாருங்கள்**
**TRY FIRST**

**பலர் இச்சிகிச்சை மூலம்
பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922–0478

சொந்த நாட்டை விட்டு சொந்தங்களை விட்டு கனடா நாட்டில் வாழ்கிறோம் நாங்கள் எல்லோரும் பட்டும் படாமலும் ஒட்டியும் ஒட்டாமலும் மற்றவர் பிரச்சனை மற்றவருக்கு, எங்கள் பிரச்சனை எங்களுக்கு என்று தகுந்த நேரங்களில் கூறி சுழன்று கொள்ளும் ஒரு வாழ்க்கை. நாமெல்லாம் ஆறறிவுள்ள மானுடஜென்மங்கள், நாங்கள் வாழ்வது மனித உரிமைகளை மதிக்கும் கனடா நாட்டில். எங்கள் புகழோ காந்தீயம் காத்த காந்தி தாத்தா பெருமையுடன் கூடியது. என்ன இருந்து என்ன பயன்.... மனித உயிரின் பெறுமதி எறும்பிலும் அற்பமாகப் போய் விட்டது.

வாழ்கைச் சக்கரத்தில் இருப்பது இரண்டே சாதிகள் ஆண், பெண் என்ற பெருமைக்குரிய சாதிகள். ஒரு சாதி இல்லாவிடில் மற்றதன் பெருமை தெரியவராது. இரண்டும் சேரா விட்டால் மனித வர்க்கமே இல்லை. ஆனால் இதை எல்லாம் சிந்தித்துப் பார்க்காத எம்மவர் சமூகத்தில் முக்கிய பங்கை ஆற்றும் பெண்ணின் உணர்வுகளை அழிப்பதிலும் அடக்கி ஒடுக்குவதிலும் தாம் மும்முரமாக இருக்கிறார்கள்.

வேலையில் பிரச்சனை, மேல்அதிகாரி திட்டி விட்டார், நண்பனுடன் தகராறு, போன காரியம் நிறைவேறவில்லை, எல்லாவற்றிற்கும் மனைவியோ, தாயோ, சகோதரியோ மகளோ தான் யாரில் என்ன கோபம் என்றாலும் அதை அவரிடம் காட்டும் துணிவு இல்லாததாலோ அல்லது வேலை போய் விடும், தன் நற்பெயர் கெட்டு விடும் என்ற காரணத்தாலோ பேசாமல் இருந்து விட்டு, வீட்டில் வந்து அவ்வளவு நேரமும் அவர்கள் கடமையை செய்து கொண்டிருக்கும் பெண்கள் மேல் காட்டுவார்கள். இது கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டிலும் நடந்து கொண்டிருக்கும் சாதாரண சம்பவமாக போய் விட்டது. அவர்கள் என்ன சொன்னாலும் பெண் வாய் திறந்து எதிர்த்து ஒன்றும் சொல்லாமல் சிரித்த முகத்துடன் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள் பெண்ணும் தங்கள் போல் உணர்ச்சிகள் உள்ளவர் தான் என்று அவர்களுக்கு ஏன் புரிவதில்லை. சில சம்பவங்களை நோக்கும் போது சிலருக்கு ஐந்தறிவுதான் இருக்கிறது என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

அடியையும், உதையையும்,

# பெண்களுக்காக பெண்களால்.....

## "விழிப்பு" பெண்கள் அமைப்பு

வேண்டாத பேச்சும் அவமரியாதைகள் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு இருந்த அவள் தாங்க முடியாவிட்டால் தன் நெருங்கிய நண்பியிடமோ பெற்றோர் சகோதரியிடமோ தன் பிரச்சனையை சொல்ல எத்தனிக்கிறாள் அப்போதாவது அவளுக்குரிய பாதுகாப்பும் உரிமைகளும் கிடைக்கிறதா? இல்லை! ஏன்?

சமூகம் என்றும் கலாச்சாரம் என்றும் கண்களால் போடப்பட்டிருக்கும் தந்திரங்கள் அதற்கு தடையாக இருக்கின்றன. ஒரு ஆணை விட்டு ஒரு பெண் தனியே வாழ முடியாது என்ற பாடத்தை புகட்டி ஆணைச் சார்ந்து வாழ பெண்ணை பழக்குகிறார்கள், அப்படியும் தனியே வாழ வெளிக்கிடும் பெண்ணுக்கு கலாச்சாரம் குடும்பப் பெயர் என்ற பல காரணங்கள் கூறி அவளின் முடிவு பிழை என்பதாக நியாயப்படுத்த முயல்கிறார்கள் ஏன் அவளால் தனியே வாழ முடியாது? ஒரு ஆண் பெண்ணை மிருகத்தனமாக தாக்கும் போது அவளது குடும்பப் பெற்றோருக்கும் கலாச்சாரத்திற்கும் ஏதும் நடந்ததா? அவனை திரும்பவும் மனிதனாக கருதி மதிக்கும் சுற்றமும் நண்பரும் பெண் படும் கஸ்டங்களை உணராதது ஏன்? உணர்ந்தும் பாராமுகமாய் இருப்பது எந்த மனித இனத்தில் சேர்த்தி? அண்ணனாக இருக்கலாம், தம்பியாக இருக்கலாம் உற்ற நண்பனாக இருக்கலாம் அவன் மிருகத்தனமாக நடக்கும் போது அதைச் சுட்டிக் காட்டாத நீங்களும் ஒரு வகையில் அவனின் கொடுமையை ஆதரித்தவர்கள் ஆகிறீர்கள். தனிமனிதனொருவன் நடத்தை, சமூகத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

பக்கத்து வீட்டில் அடி விழுந்தது பற்றியும் சண்டை நடந்தது பற்றியும் லிஃப்டிலும் டெலிபோன் அடித்து தெரிந்தவர்களிடம் சொல்லும் ஒவ்வொரு மனிதரும் அந்த பெண்ணுக்கு உதவி செய்ய எத்தனிப்பதில்லை. மனித உயிர்களும் உணர்வுகளும் எங்கள் கலாச்சாரத்தில் அவ்வளவு அற்பமாகவா போய் விட்டது? உங்களை அந்த பெண்ணின் நிலையில் வைத்து ஒரு நாளாவது யோசித்தீர்களா?

அடியின் கடைசிக் கட்டமாக அவள் கொலை செய்யப்பட்டாலோ அல்லது தற்கொலை செய்தாலோ அந்த சாவிற்கு நீங்களும் ஒரு வகையில் துணை போவதாக உணரமாட்டீர்களா? நீங்கள் முதலே ஏதாவது ஒரு உதவி செய்ய முற்பட்டிருந்தால் சிலவேளை நீங்கள் அந்த உயிரை காப்பாற்றி இருக்கலாம் அல்லவா. உங்களால் காப்பாற்ற முடிந்த ஒர் உயிரை காப்பாற்ற தவறுகிறீர்கள்? அதற்கும் சமூகம் என்று சொல்லி தப்பிக்கும் காரணம் தான் கூறப்படுகிறது.

சமூகம் என்று மூன்றாம் மனிதரை சுட்டிக் காட்டுவது போல் காட்டி தப்பி விடாதீர்கள், சமூகம் என்பது நாங்கள் தான் எங்கள் சுயநலம் தான் சமூகம் என்ற போர்வையுடன் உலாவுகிறது. மற்றவரின் பிரச்சனை எமக்கெதற்கு என்று சொல்லும் நாங்கள் பக்கத்து வீட்டில் நடப்பதை வரிக்கு வரி மறக்காமல் மற்றவருக்கு சொல்லுகிறோம். ஆனால் சாட்சி என்று கேட்டவுடன் பின்னுக்கு நிற்கிறோம். ஏன்? பொலீஸ் கோட் என்று ஏன் அலைவான் என்ற சுயநலத்தால் நாளை உங்களுக்கு ஏதும் நடந்தாலும் இது நடக்கப் போகிறது என்ற உண்மையை மறைத்து பொய் கதைகள் பரப்பப்படும். கொஞ்சநாளில் பொய் தான் உண்மையாக மாறி எல்லோர் வாயிலும் அலசப்படும். கண்ணால் கண்டது மாறி எல்லோர் நம்பும்படியான கதைகள் பெண்ணைப் பற்றி பரபரப்படுகின்றன உண்மைகளை கூட அப்படியே விழுங்கிவிடும் சக்தி பரப்பப்படும் கதைகளுக்கு இருக்கிறது என்று அனுபவத்தில் எல்லோரும் அறிந்தும் கூட பத்திரிகைகளும் இவற்றை பரப்புவதில் போட்டி போடுகின்றன.

டொரன்டோவில், கணவன் அல்லது சேர்ந்து வாழ்பவரால் அவமதிக்கப்படும், துன்புறுத்தப்படும் தமிழ் பெண்களில் மிகச் சிலரே தஞ்சம் கோரி பெண்களுக்கான தஞ்ச விடுதிகளுக்கு செல்கின்றனர்.

இவர்களில் 86% க்கு அதிகமானோர் பெற்றோர் இனத்தவர் நண்பர்களின் வற்புறுத்தலினாலும் துணைவர் இனிமேல் அவ்வாறு நடக்காது என (அழுது) சத்தியம் செய்வதை நம்புவதாலும் மீண்டும் பழைய சூழலுக்கே செல்கின்றனர். சிலர் துணைவரின் நடத்தை மாறாது என நன்றாக உணர்ந்தும், பிரிந்து வாழத் தலைப்பட்டால் தானும் பிள்ளைகளும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு விடுவார்களென்ற பயத்தினால் மீண்டும் பேயின் குகைக்குள் இதுதான் விதியென நுழையத் தலைப்படுகிறார்கள்.

தாங்கமுடியாத சூழலில், இவ்வுலகில் தனக்குதவ எவருமில்லை, நிலைமை சாவில்தான் மாறும் என எண்ணத் தொடங்கும்போது தற்கொலை ஒரேயொரு வழியாகத் தெரிகிறது. சுற்றத்தார் அறிந்தும் அறியாதது போல் நடப்பதும் நண்பர்கள் "எமக்கேன் வீண் வம்பு" என வாளாவிருப்பதும், மூத்தோர் விதியில் பழிபோட்டு கண்மூடி பிரார்த்திப்பதும் தினம் நடக்கும் நிஜங்கள். இவற்றையெல்லாம் வலுப்படுத்துவதுபோல் (சவப்பெட்டிக்கு இறுதி ஆணி அறைவது போல்) தமிழ் சினிமா கதை, பத்திரிகைகள் மூலம் எம்மை வந்தடையும் கருத்துக்கள் தன் நலனை பேணத் தலைப்படும், மனித உரிமைகளை நிலைநாட்ட விழையும் பெண்ணுக்கு தலையில் ஒங்கி அடித்து, எது நடப்பினும் வாய்மூடி சகிப்பவளே நல்ல மனைவி (பெண்) என்ற எண்ணம் நிலைபெறச் செய்கின்றன.

நீங்கள் கருதுவதுபோல் நாங்கள் எல்லோரும் உணர்ச்சி அற்ற மனிதர்கள் இல்லை, உதவி செய்ய வேண்டும் என்றுதான் நினைக்கிறோம், ஆனால் என்ன எப்படி செய்வது என்று தெரியவில்லை என்று எம்மில் சிலராவது யோசிக்கத் தலைப்பட்டால் வயிற்றில் பாலை வார்த்தீர்கள்.

சமூக நலனில் அக்கறையுடைய தனிநபர் அல்லது அமைப்பு என்ற முறையில் நீங்கள் பொறுப்புள்ள பிரஜையாகவும், மனித நேயத்துடனும் செயல்பட சில வழிகள்:

தனிநபரெனின்:

* பெண்களுக்கெதிரான வன்முறை பற்றி வாசித்து கலந்துரையாடி புரிந்துகொள்ள முயற்சியுங்கள்.

* தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஏற்றுக்கொள்ளும் பாணியில் அமையும் நிகழ்ச்சிகள் கட்டுரைகளை எதிர்த்து அபிப்பிராய கடிதங்கள் எழுதுங்கள்.

* பெண்களுக்கான பாதுகாப்பு திட்டங்களை ஆதரியுங்கள். பிறருடன் கலந்துரையாடி ஆதரவை வளம் பெறச் செய்யுங்கள்.

* கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் பெண்களை அவமதிக்கும் கலாச்சார விழுமியங்களை மீளாயுங்கள்.

பெண்ணொருவர் துன்பப்படுவதை அறிந்தவராயின்

* நேரடியாக கண்டு அல்லது கேட்டால் போலீசை கூப்பிடுங்கள்.

* பெண்ணின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்காத முறையில், உதவி பெறக்கூடிய தொலைபேசி இலக்கங்கள், அமைப்புகள் பற்றி அவளுக்கு தெரிவியுங்கள்.

* வன்முறைக்கு அவள் பொறுப்பாளியல்ல என்பதை வலியுறுத்துங்கள்

* உயிர் போனாலும், வெளியில சொல்லாதிருப்பதே தமிழ் பெண்ணிற்கு அழகு என்று மட்டும் கூறாதீர்கள்.

நீங்கள் ஒரு சமய வழிகாட்டி, சமூகத்தில் மதிக்கப்படும் முதியவர் அல்லது குடும்ப ஆலோசகராயின்:

* பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய ஆய்வுகள், நடைமுறைகள், சேவைகள் பற்றி அறிந்துகொள்ள முயற்சி எடுங்கள்

* தன் அனுபவம் பற்றி கூறி உதவிகோரும் பெண்ணுக்கு ஆதரவாக உதவிபெறும் வழிகளை எடுத்துக் கூறுங்கள்.

* இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய சமயங்களின்படி பெண்களுக்கெதிரான எந்த மனித உரிமை மீறல்களும் கண்டிக்கப்படுகிறது என குடும்பங்களுக்கு எடுத்து கூறுங்கள்.

* எவருக்கும் இன்னொருவரை (மனைவி, காதலி, சகோதரி, தாய், மகள்) சொல், செயலால் துன்புறுத்த உரிமையில்லை என்பதை வலியுறுத்துங்கள்.

* பிறருடன் தொடர்பு கொள்ளவிடாமல், கூட்டங்கள் வழிபாடுகளுக்குத் தனியே வரவிடாமல் கட்டுப்பாடு விதிக்கும் குடும்ப சூழலில், ஆண், பெண், இருவருடனும் தனித்தும், இணைந்தும் மேற்கூறியவைகளை தெளிவாக்குங்கள்.

* கணவன் எது செய்தாலும் அது பலாத்காரமாயிருப்பினும் தாங்குவதே மனைவியின் உயர்ந்த பண்பு என உரையாற்றாதீர்கள்.

நீங்கள் ஒரு வைத்தியர், உடல்நல சேவையாளர் அல்லது சமூக சேவையாளராயிருப்பின்:

* பெண்களுக்கெதிரான வன்முறை பற்றி விளங்கிக் கொள்ளுங்கள்

* சமூகத்தில் பெண்களுக்கு உதவக்கூடிய சேவைகளைப் பற்றி விசாரித்து விபரங்களை பெண்கள் பார்வையில் படக்கூடிய இடங்களில் வையுங்கள்.

* உடல்காயங்களுடன், மயக்கம், தலையிடி, காரணமின்றி வலி போன்ற உள்காயங்களுடனோ வந்தால், துன்புறுத்தலுக்கு பெண் பொறுப்பாளி அல்ல என்றும், தம்மை பேணவும், குழந்தைகள் நலன் பேணவும் முயற்சிகள் எடுப்பது முக்கியம் என்றும் எடுத்துக் கூறுங்கள்.

* சட்டரீதியாக பெண் நடவடிக்கை எடுக்கும்போது உங்கள் அவதானங்கள், சிகிச்சை குறிப்புகளை சட்டத்தரணிக்கு தரத்தயார் என பெண்ணிற்கு தெரிவியுங்கள்.

* குடும்ப வைத்தியர் அல்லது இந்த குடும்பத்தை அறிந்தவர் என்ற நோக்கில், விடயம் வெளியில் தெரியாமல் மறைப்பதுதான் உங்கள் கடமையென்றெண்ணி, உதவிசெய்ய பின்னிற்காதீர்கள்: அல்லது உதவிகோரும் பெண்ணை பின்வாங்கச் செய்யாதீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு: பாக்டேல் சமூக சட்ட சேவை நிலையம் 531 2411

தென் ஆசிய பெண்கள் நிலையம் 537 2276


**Antony Brothers**
**Fashion House**
1484 Queen St West
சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள், பரிசுப் பொருட்கள் அனைத்தும்
ஒரே இடத்தில் மலிவு விலையில்

# முகம் தொலைக்கும் மனிதர்கள்

இந்த நெருடல் அதீதமாகவிருக்கின்றது. அது ஒரு சாதாரண நிகழ்வுதானு அல்லது என்னைப் போலவே வேறு பலரது உணர்வுகளையும் உலுக்கிப் பார்க்கும் அசாதாரண நிகழ்வு தானு என்று இப்போதைக்கு என்னால் கணிப்பிட்டு விட முடியாது.

இன, மத, மொழி, சாதி, கலாச்சார, வெறிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட புறப்பார்வை ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற பகீரத முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவன் நான். இருப்பினும் ஒரு சாதாரண மனிதனது வரட்டுச் சிந்தனைகள் அவ்வப்போது என்னுள் தலைநீட்டி பார்ப்பதையும் தவிர்த்துக் கொள்ள முடிவதில்லை.

இந்த நிகழ்வு பற்றிய என் மன கொந்தளிப்பும் இப்படியான ஒன்று தான்.

சில வாரங்களுக்கு முன் மதம் மாற்றம் பற்றிய கட்டுரையொன்றை தாயகத்தில் அசைத்திருந்தேன்.

உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழர் சமூகத்தில் நடந்து கொண்டு வரும் இந்த தீவிர மதம் மாற்றம் பற்றி அலட்டிக் கொள்வதால் நான் மதவெறி பிடித்து சிந்தனை தளத்தை சுருக்கிக் கொண்டு விடுவதாகவும் விரல் காட்டப்படலாம். அதனால் தான் இதை ஒரு நெருடல் என்றேன்.

தமிழர்க்கு ஆயிரம் மதங்கள் இருந்து விட்டு போகட்டும். அவை அபினிகளாக இல்லாமல் ஒழுக்கங்களை போதிக்கும், சிந்தனைகளை தூண்டிவிடும், சமதர்மங்களை வலியுறுத்தும் நெறிகள் என்ற வரம்புக்குள் செழித்துக் கொண்டால் அது போதுமானது.

உலகில் ஏனைய இனங்களைப் போலவே தமிழருக்கென்று தனித்துவமான முகம் ஒன்று உண்டு. இந்த மதத்தை மாற்ற எத்தனிக்காத வரைக்கும் எந்த மதங்களும் தமிழரை ஆட்கொள்ளட்டும பிரச்சனை இல்லை.

நான் சொன்ன நிகழ்வு அப்படியல்ல.

ரொரன்டோவில் சமீபத்தில் நடந்த இந்த மதமாற்ற நிகழ்வொன்றின் போது சொல்லப்பட்ட விடயம் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "பொட்டு வைக்கும் பழக்கம் வேசிமகளுக்குரியது" என்று இந்தியாவிலிருந்து வருகைத் தந்த ஒரு மதபிரசாகர் சொன்னதாக மதம் மாறிய பெண்மணி ஒருவர் தெரிவித்தாராம்.

எச்சரிக்கை இதை கேட்டு உணர்ச்சி வசப்பட்டு விடாதீர்கள்

என்ன பின்னணியில் இவர் இதைச் சொன்னுர் என்று எனக்கு தெரியாது. எப்படியான வார்த்தை பிரயோகங்களுடன் இது சொல்லப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. அவர் உண்மையிலேயே அதைச் சொன்னுரா என்பதும் எனக்குத் தெரியாது.

தனது பிரசாரங்களில் தனது பக்த கோடிகளை உண்மையான, நேர்மையான வாழ்வை மேற்கொள்ளுமாறும் அது வேறெந்த மதங்களை விடவும் தன் மதத்தை தழுவுவதனால் தான் முடியும் என்றும் இவர் சொல்கிருர். இந்த பெண் இவரை அறுதியாக நம்புகிருர். அதனால் இவர் பொய் சொல்லியிருக்க முடியாது. அதனால் தான் இந்த பிரசாரகர் இதைச் சொல்லியிருக்கலாம் நான் நம்புகின்றேன்.

மதம் மாறுவதில் எனக்கு பிரச்சனை ஒன்றும் இல்லை. ஏன் முகத்தை மாற்ற முயற்சிக்க வேண்டும்?

இந்த குறிப்பிட்ட மதத்துக்குரியவர்கள் பொட்டு வைக்கக் கூடாது என்பது கட்டளையானல் அதைச் சொல்வதில், இடுவதில், பின்பற்றுவதில் விருப்பு வெறுப்பு அவரவர்களுடையது. அதற்காக இல்லாத பொல்லாத கீழ்த்தரமான ஏமாற்று வழிகளையா கையாளவேண்டும்?

இந்த பிரசாகரர் ஒரு முன்னுள் பிராமணராம். வேத உபநிடதங்களில், தென்னிந்திய கலாச்சாரங்களில் இவர் கரை கண்டவராம். மிகப் பெரிய அறிவாளியாம். நல்ல பேச்சாற்றல் கொண்டவராம். இத்தனை அம்சங்களையும் கொண்ட ஒரு அறிவாளி சொல்வதனுல் மதம் மாறுபவர்களும் அதை அப்படியே நம்புகிருர்கள்.

குருக்கள் எதைச் செய்தாலும் குற்றமில்லைதான். அது போகட்டும். இருக்கு, யசுர், சாமம், அதர்வண வேதங்களில் இவரது மதம் பற்றி நிறைய இருக்கின்றதாமே? யாராவது படித்தீர்களா?

திருவள்ளுவர் ஒரு கிறிஸ்தவராம் அவர் காலத்தில் வாழ்ந்த யாராவது இருக்கின்றீர்களா?

எல்லாமே இந்த அறிவாளி சொல்கிருர். பக்தகோடிகள் மதம் மாற்றச் சடங்குகளை சம்பிரதாயமாக்குகிருர்கள். தாலிகளை அறுத்துக் கொள்கிருர்கள். தங்கள் முகங்களையே தொலைத்துக் கொள்கின்ருர்கள்.

"எந்த விதமான கலாச்சார தென்றல்களும் என் வீட்டு சாளரத்தினூடு சுயமாக வந்து வீசி போகட்டும். என் வீட்டு தென்றலை அடித்து செல்லாமல் இருந்தால் போதும். " என்று காந்தியடிகள் சொன்னது நினைவுக்கு வருகின்றது.

என் நாவுக்கு தமிழுணவும், என் காதுக்கு தமிழிசையும், என் சிந்தனைக்கு தமிழ் மொழியும், எனக்கென்று ஒரு முகத்தை தந்த கலாச்சாரமும் என்றுமே எனக்கு தேவை.

நான் முகத்தை தொலைத்து விடுவதாலல் இவை வாழாமல் போய்விடும் என்பதில்லை. அவற்றிற்கு வயது ஆயிரமாயிரம் வருடங்கள். யாரோ முகத்தை தொலைக்க வேண்டும் என்பதற்காக அவற்றின் மீது சேற்றை வாரி வீசுவதையும் அனுமதிக்கப் போவதில்லை.

இது மதச்சார்பான வெறியின் வெளிப்பாடல்ல. பொய்களின் ஊர்வலம் ஒன்று போகின்றது. போய் பாருங்கள் முகமில்லாத மனிதர்களை.

ஊர்வலம் வளர்ந்து கொண்டு போகின்றது!!

**அசை** — **சிவதாசன்**

# குடும்ப உறவும் சிக்கல்களும்

## அருண்

ஆணினதும் பெண்ணினதும் மனங்களின் சங்கமத்தில் பிறப்பெடுப்பதுதான் தாம்பத்தியம் என ஆன்றோர் சொல்லி வைத்திருப்பினும் இந்தச் சிறப்பாய் அமைய வேண்டுமே! மனங்கள் தானே. இவை மனிதன் பிறக்கும்போதே வடிவமைத்தா அனுப்பப்பட்டது? சிப்பியில் முத்துப்போல சேர்வை கொண்டதுதானே. இத்தகைய இரண்டு ஒன்றாய் சேர்வதாய் இருந்தால் எத்தனை பிசகுகள் நேரலாம்! இந்தப் பிசகுகளின் சாற்றையே இங்கு பகிர்ந்து கொள்வோம்.

கணவன்: "சுகந்தனின் கலியாணத்துக்கு ஏதும் கொடுக்கவேண்டும். காசுக்கு எங்க போறது?"

மனைவி: "என்னப்பா! முந்தாநாள்தான் சம்பளம் எடுத்தனீங்கள். அதுக்குள்ளே கையை விரிக்கிறீங்கள்"

கணவன் "என்னப்பா மடத்தனமாகக் கதைக்கிறீர். எங்களுக்கு என்னென்ன செலவெண்டு தெரியாதா உமக்கு!" (கொஞ்சம் கோபமாய்)

மனைவி: "எனக்குத் தெரியுமே. நீங்கள்தான் எல்லாம் கவனிக்கிறீங்கள். எனக்கெப்படித் தெரியும்? அது எனக்குத் தேவையுமில்லை"

இந்தச் சம்பவத்தில் கணவன் மனைவி இல்லறத்தில் சமபங்கெடுக்காமை துல்லியமாகத் தெரிகிறது. குடும்பத்தில் கணவன் மட்டும் உழைத்தல் கணவன் மனைவி இருவரும் ஏகமனதாய் முடிவெடுக்கவேண்டிய விடயம். அத்துடன் செலவுகள். மொத்த வருமானத்தில் ஒவ்வொரு மாதமும் துண்டுவிழும் தொகை. அதை நிவர்த்திக்கும் வழிகள் போன்றன கணவன் மனைவி இருவரும் (முடிந்தால் விபரம் தெரிந்த பிள்ளைகளும்) அறிந்திருத்தல் அவசியம். பல குடும்பங்களில் மனைவிக்கு இவை தெரிவதில்லை. அதை அவர்கள் அறிவதற்கும் முயல்வதில்லை. கணவனும் அறியப்படுத்த முனைவதில்லை. மனைவி ஏன் வீணாக சங்கடப்படவேண்டும் எனும் கோதாவில் அதை அவர்களுக்கு எட்டாது மறைப்பதுமுண்டு. இதனால் கணவனே தனித்து குடும்பச் சுமையை சுமக்க பிரயத்தனப்படுகையில் அவன் மீறிய சுமையைப் பகிர்ந்து கொள்ள முடியாமையால் உதவியற்று தனியே அல்லற்படவேண்டிவரும்.

கணவன் மட்டும் உழைக்கும் இத்தகைய குடும்பத்தில் வரவு செலவு பற்றி அக்கறை காட்டாத மனைவி மக்கள் அநாவசிய செலவுக்காக அடம் பிடிப்பதால் கணவன் (தகப்பன்) வார மாத இறுதிகளில் திணறவேண்டிவரும். சில சமயங்களில் எப்படியும் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கையில் இவர்களின் அநாவசியச் செலவுகளுக்கு இணங்குவதால் சில அவசிய செலவுகளுக்கு கடனாளியாக நேரலாம். இது அவனை பதட்டப்படவும் ஆத்திரப்படவும் வியூகம் அமைக்கும். இத்தகைய பதட்டநிலை தணிந்து கொள்ள சிரமமாகும் தறுவாயில கணவன் மனைவி, தகப்பன மகவ, பிணக்கின் தோற்றுவாயாகலாம். இது தொடரும் போது கணவன் "மனக் கொந்தளிப்பு" நிலையில் உலாவ வழிசமைக்கிறது. வரவு செலவு என்னும் தரவுகள் மனைவி மக்களுக்கு தெரியப்படுத்தப்படின் அநாவசியச் செலவின் விளைவுகளை அவர்கள் உணர்வதுடன் அவற்றைத் தவிர்க்கவும் பழகிக் கொள்வர். அவசியச் செலவுகளே மொத்த வருமானத்திலும் கூடுதலாகவுள்ள குடும்பங்களில் துண்டு விழுந்தொகையைச் செப்பனிட மனைவி மக்கள் அவசியசெலவுகளிலேயே சில விட்டுக்கொடுப்புகளையும் சில சகிப்புத்தன்மையும் மேற்கொள்வதன் சிறு வருமானங்களை தேடிக்கொள்வதால் சில நிதி நெருக்கடிகள் நிவர்த்திக் குள்ளாகலாம்.

ஒரு புடவைக்கடையில்...

கணவன்: "இந்தச் சட்டையைத்தான் எடுக்கப் போறீரா?"

மனைவி: "ஓம். ஏன் நல்லாத்தானே இருக்குது. உங்களுக்குத்தான் ஒண்டும் தெரியாது.........."

மணவன்: "(கோபமாக) ஓம். எனக்குத் தெரியாதுதான். இப்படி பட்டிக்காட்டுத் தனமாக எடுக்க எனக்குத் தெரியாதுதான்"

மனைவி: "இது நான்தானே போடப் போகிறேன். பட்டிக்காடாய் இருந்தால் இருக்கட்டும். அப்படி யாரும் நினைத்தால் நினைக்கட்டும்."

கணவன்: "நான் விருப்பாததை நீர் எப்படி போடுவீர்? திமிர்தானே. மற்றப் பொம்புளைகள் புருஷன் விருப்பப்படிதான் நடக்குதுகள்."

(வாக்குவாதம் சூடாகிறது)

என்னதான் பொருத தங்கள் பார்த்தாலும் தம்பதியிடையில் விருப்பங்கள் ஒத்துப்போவது அரிது. இந்நேரங்களில் இருவரில் யாரோ ஒருவர் பிடிவாதத்தை தளர்த்திக் கொள்வது நலம். ஆனால் அதைப் பெண்தான் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. ஆயினும் ஏன் பிரச்சனையை வளர்க்க வேண்டுமென அதிகபட்சம் பெண்களே நோவைத் தக்க வைத்துக்கொண்டு தம் நியாயத்தை கைவிடுகின்றனர். மேற்சம்பாசணை போல் முரண்டு கொள்வதால் வாக்குவாதங்கள் விபரீதமாய் முடியலாம். இரு முரணான விருப்பங்களில் இருந்து இருவரும் சற்றுத் தளர்ந்து "பரவாயில்லை" என்ற ஒத்த விருப்பத்துக்கு இணக்கம் கொள்ளலாம். இரு சாராரினதும் விட்டுக கொடுப்பினால் வாக்குவாதம் தவிர்க்கப்படலாம். இவை சுமுக உறவுக்கு கை கொடுக்கும்.

சாதாரணமாக ஒரு திரைப்படம் பார்ப்பதிலேயே இத்தகைய முரணான கருத்துக்கள் தம்பதிகளின் பிடிவாதத்துக்குள்ளாகலாம். திரைப்படக் கருத்து அல்லது காட்சி ஒருவருக்கு சிறப்பானதாயும் மற்றவருக்கு சீரணிக்கமுடியாததாயும் இருக்கலாம். இங்கே அவரவர் அடுத்தவர்

12ம் பக்கம் பார்க்க..

## ஜெயந்தீஸனின் குட்டிக் கதைகள்

# கவிதை

இலக்கியவெறி ஒரு பக்கம் பெண்ணிலைவாத வெறி இன்னொரு பக்கமுமாக உதைத்துத் தள்ள நான் ஓர் புரட்சிகரமான முடிவினை எடுத்தேன். அதாவது புகலிடத்தில் கவிதைகள் எழுதும் எல்லாப் பெண்களது கவிதைகளையும் தொகுத்து மொத்தமான ஒரு புத்தகமாகப் போட்டுவிட வேண்டுமென்பதுதான் அது. இந்த முடிவு கனிந்து வரும்போது சாஹித்ய மண்டலம் என்னைக் கூப்பிட்டு "பெண்ணிலைவாத வித்தகர்" என்ற பட்டத்தைத் தட்டத்தில் தூக்கித் தரும் என்ற கனவு வேறு.

எனது றூமிலிருந்த எல்லாப் புத்தகங்களையும் தூக்கி கவிதைகளைத் தொகுக்க வெளிக்கிட்டேன். கண் மூடி விழிக்கு முன்னரேயே ஒரு மொத்தப் புத்தகத்துக்கான கவிதைகள் சேர்ந்துவிட்டன. அப்பாடா! பெண்கள் எத்துனை வேகத்துடன் எழுதித் தள்ளியிருக்கின்றூர்கள் என வியந்து கொண்டேன். பெண்களினது கவிதைகள் தொகுப்பாகையால், அதற்கு நான் முன்னுரை எழுதுவது நல்லதல்ல என நினைத்துக் கொண்டு, விடிந்தவுடன் தொகுப்பைத் தூக்கிக் கொண்டு கவினை ரம்யா வீட்டிற்கு ஓடினேன். கண்ணை மூடிக்கொண்டு எனது முயற்சியைப் பாராட்டிய ரம்யா, கண்ணைத் திறந்து தொகுப்பில் ஒரு நோட்டம் விட்டா... "ஐயோ! உம்மை ஆரையோ ஏமாத்திப்போட்டினம்" என ஒவெனக் கதறி விட்டு, "உந்தப் புத்தகத்தை உமக்குத் தொகுத்துத் தந்தது ஆர்?" எனக் கேட்டா. "நான் தான்" என்றவுடன் தனது உதடுகளைத் திறந்து இந்த நற்சிந்தனையை உதிர்த்தா:

"உதெல்லாம் பெம்பிளையள் எழுதின கவிதையள் இல்லை...."

"அப்ப......?"

"ஆம்பிளையள் பெம்பிளையளின்றை பேரிலை எழுதின கவிதையள்....... பாரும் இந்தக் கவிதையை, இதை எழுதினது கமலேஸ்வரியில்லை, என்ரை அவர்..." என்றவுடன் நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். மயக்கம் தெளிந்து விழித்தபோது அவவின் கையில் ஒரு தொகுப்பு. "இதெல்லாம் என்ரை கவிதையள். இதைப் புத்தகமாப் போட்டுத் தாரும்" எண்டா. நான் மீண்டும் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன்.

## குடும்ப உறவில்...

மனநிலையை அனுசரித்து சுமுகம் கொள்ளலாம். பின் களிப்பான மனநிலையில் இருக்கையில் அவரவர் தம் கருத்துக்களை மற்றவருக்கு விளக்கி ஆரோக்கியமான விமர்சனங் கொண்டு இசைவான முடிவுக்கு வரலாம். அதாவது சூழ்நிலையை அனுசரித்து வாழ்நிலையை மேம்படுத்திக்கொள்ளலாம் என்பதே என் கருத்து. மேலும் இருவருக்கும் ஏற்புடைய காரியங்களை மேற்கொள்வதாலும் இருவரும் நாட்டம் கொள்ளும் வழிகளைக் கைக்கொள்வதாலும் அடுத்தவர் மனநிலையைப் பாதிக்கும் செயற்பாடுகளைத் தவிர்ப்பதாலும் சுமுக உறவில் குந்தகம் நிகழ்வதைத் தவிர்க்கலாம்.

கணவன் வேலையால் அலுப்புடன் வீடு சேர்கையில்....

கணவன்: "ஏன்? என்ன நடந்தது? ஏன் அழுதுகொண்டிருக்கிறீர்?"

மனைவி: உங்கட தங்கச்சி என்னை மரியாதை இல்லாம பேசினு. உங்களை நான் மயக்கி பிரிச்சுப் போட்டனும். நான் சீதனம் கொண்டு வராததாலே தாங்கள் நடுத்தெருவில் நிக்கினமாம்"

கணவன்: "அப்படியா சொன்னள்" (ஆத்திரத்துடன்)

(தங்கையும் தமையனும் தொலைபேசி சண்டையில் குதிக்கிறூர்கள்)

இதில் சங்கதியாதெனில், ஒருவர் பசி களைப்பில் இருக்கையில் சிறு பிரச்சனை கூட விஸ்வருபம் எடுக்கும் வாய்ப்பு அதிகம். சிந்திக்கும் அவகாசத்தை குறுக்கிக் கொள்ளும் நேரமிது. அதனுல் சிறிதாய் அரும்பும் சினம் பெரும் விருட்சமான வெஞ்சினமாய் பரிணமிக்கும். மாறுக கணவன் உண்டு களைப்பாறிய வேளை பிரச்சனைகளை சமர்ப்பித்தால் அவன் இருதரப்பு நியாயங்களையும் ஆற அமர ஆராய்ந்து சரியான முடிவெடுக்கலாம். இங்கே வீணுன சண்டை தவிர்க்கப்படுகிறது. நிதானிக்க அவகாசம் குறைந்த சந்தர்ப்பங்களில் வாக்குவாதம் முற்றி கணவன் மனைவியை அடிக்கும் நிகழ்வுகள் இன்றும் சாதாரணம். இது கண்டிக்கப்பட வேண்டியது. இதனைத் தவிர்க்க இருவேறு வழிமுறைகளை கையாளலாம். முதலாவதாக வாக்குவாதம் சூடுபிடிக்கையில் இருவரில் ஒருவர் தம் சார்பில் நியாயம் இருப்பினும் மௌனம் காத்தால் மற்றவர் கோபத்தில் இருந்து படிப்படியாக இறங்கிக் கொள்வார். இவ் விட்டுக்கொடுத்தலை பெண்தான் செய்யவேண்டும் என்பதில்லை. அடுத்து தம் நியாயங்களை கோபத்துடன் வெளிவிடும் தன்மையை தவிர்த்தல் வேண்டும். மனதை பழக்கிக் கொண்டால் இவ்விரண்டையும் எவராலும் கடைப்பிடிக்க முடியும். இவ்வழி முறைகளில் இருவரும் தற்காலிகமாகவாவது தம் நியாயம் நிலைநிறுத்தலை பின்வாங்கி சந்தோசமாக சகித்திருக்கும் வேளையில் தம் பக்க நிலைப்பாட்டை குழைவுடன் எடுத்துரைத்தால் மற்றவர் கூடியபட்சம் ஏற்றுக்கொள்வார் அல்லது அவை பற்றி கருத்தில் எடுக்கவாவது தலைப்படுவார். கோபம் மௌன விரதத்தினுல் அதனை இறக்கலாம். இதனை சில மணி நேரமாவது கைக்கொண்டால் அந்நேர அடிபிடியை தவிர்த்து விடுவதுடன் இன்னுமொரு வரவுமுண்டு. ஒருவர் கதைக்காதிருக்கையில் மற்றவர் அவரை கதைக்க வைக்க முயல்வார். இதில் சுவாரிசயமும் உள்ளது. ஆனுல் அதிகம் வீம்பு பண்ணினுல் தகாது. மௌனம் காக்கும் அவகாச வேளையுள் இருவரும் தமக்குள் கருத்தரங்கு நடத்தி தம் தவறுகளை உணரும் சந்தர்ப்பமும் இங்கே உண்டு. காலை அடிவாங்கி அழுதுவிட்டு கோபத்தில் கதைக்காதிருக்கும் அம்மா அந்தி

13ம் பக்கம் பார்க்க..

# சுந்தர ராமசாமியுடன் ஒரு கலந்துரையாடல்

-சாமிநாதன்-

11.9.93 சனிக்கிழமை காலம் இலக்கிய இதழ் ஏற்பாடுசெய்திருந்த இலக்கிய கலந்துரையாடலுடன் என் கே. மகாலிங்கத்தின் 'உள்ளொலி'க விதைத் தொகுப்பு வெளியீட்டு விழா 100 செண் ஜோர்ஜ் வீதியில் University of toronto, Sidney Smith Hall லில் நடைபெற்றது. திரு சுந்தரராமசாமி கவிதை தொகுப்பை வெளியிட்டார். தியானம் சிறுகதை தொகுதிக்கு பின் என். கே. மகாலிங்கத்தின் அடுத்த வெளியீடு 'உள்ளொலி'. இருபத்தி நான்கு சிறு கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத்தொகுப்பு மிகவும் எளிமையாகவும் சிறு புத்தகமாகவும் அச்சிடப் பட்டிருந்தது....

உள்ளொலியில் இருந்து ஒரு கவிதை...

எங்கள் ஊர்

தெற்கு வானில்
கவிந்த முகில்களின்
கீழே உள்ள
எங்கள் ஊருக்கு
என்றோ ஒருநாள்
போயே தீருவேன்!

உயர்ந்த கோபுரம்
ஊரில் உண்டு
உடைந்த பஸ்களும்
சில வேளை உருளும்

கடலில் திரிந்த மீனவன்
வேலியில் வலையை விரித்து
பறியைத் தொக்கி
வீடு திரும்புவான்
மனைவியைக் கண்டு
காதல் பேசுவான்

சூரியன் மறைவான்
வீதிகள் மறையும்
வீட்டுக்குள்
அங்கும் இங்கும்
விளக்குகள் மின்னும்
எனக்குள்ளே எங்கும்
இன்பங்கள் ஊரும்

சந்திரன் கிளம்புவான்
பிம்பங்கள் துள்ளும்
கிழவிகள் ஆங்கே
வானத்தைப் பார்த்துக்
கவிதைகள் சொல்லுவர்
பாக்குரல் இடிக்கும்
பாய்கள் இழையும்

நிலவிலே இருந்து
ஆச்சியும்
தண்ணீர் தெளித்து
ஓலை வாருவார்

மனைவியும் பிள்ளையை
இடுப்பிலே வைத்துச்
சோறு தீத்துவாள்

அடுத்த வளவுக்
குடிசையிலிருந்து
தாலாட்டுக் கேட்கும்
பனையிலிருந்து
புதுசாய் இறக்கிய கள்ளு
மூலையில் மணக்கும்
உணர்ச்சியைக் கூட்டும்

இவையும்
இன்னும் பலவும் கேட்க
பார்க்க சுவைக்க
என்றோ ஒருநாள்...
எங்கள் ஊருக்குப்
போயே தீருவேன்.

என்ற கவிதை மனதை நெருடுகின்றது.... இக்கவிதை தொகுப்பு வெளியீட்டு விழாவினை தொடர்ந்து இலக்கிய கலந்துரையாடல் நடைபெற்றது... முதலில சுந்தர ராமசாமியின் உரையை அடுத்து கலந்துரையாடல் தொடங்கியது.

சுந்தர ராமசாமியின் படைப்புகள் பற்றி ஆரம்பித்த கேள்விகள் பின்னர் பல்வேறு விடயங்கள் பற்றிய அவரது கருத்துக்கள் வரை நீண்டது. 'ஏழாண்டு கால இலக்கிய வரலாறு' என்ற மு. தளையசிங்கத்தின் நூல பற்றிய சுந்தர ராமசாமியின் கருத்துக்கள் பற்றிக் கேட்கப்பட்ட போது தளையசிங்கத்தின் கருத்துக்களுக்கு ஆதரவு தெரிவித்த சுந்தர ராமசாமியிடம் பல கேள்விகள் வேகமாய் அரங்கில் எழுந்தன. கே. டானியல் பற்றிய மு. தளையசிங்கத்தின் கருத்துக்களை சுந்தர ராமசாமி ஆதரித்தது தொடர்பாக சபையிலிருந்து பலத்த ஆட்சேபங்கள் எழுந்தன. அரங்கில் உள்ள சிலர் ஆத்திரமடைய நேர்ந்தது... சாதிப் பிரச்சனைக்காக போராடி துணிந்து எழுதிய எழுத்தாளர் டானியல் தான் என வாதிட்டனர். ஒரு புத்தகத்தை மட்டும் வாசித்துவிட்டு இப்படி எப்படி ஒரு முழுமையான கருத்தை இவரால் சொல்ல முடியும் என்பது பலரின் ஆட்சேபமாக இருந்தது.

பல்வேறுபட்ட கருத்துக்களும் வாதப் பிரதிவாதங்களும் இந்த கலந்துரையாடலை களைகட்ட வைத்தன. நலலதொரு கருத்துப் பரிமாற்றம் நிறைந்த ஒரு கலந்துரையாடலாக இருந்தது என்பது மறுக்க முடியாதது.

---


## குடும்ப உறவில்..

சாய்கையில் கோபம் தணிந்து அப்பாவுடன் ஐக்கியம் கொள்வது ஆச்சரியமானது. ஆனால் உண்மையானது. இந்த தாம்பத்தியச் சூட்சுமந்தான் என்ன?

அப்பா அம்மா சண்டையில் படாத இடத்தில் பட்டதால உயிர்துறந்த அம்மாக்களும் இதனால் சட்டத்தின் தண்டனையில் சிக்கிய அப்பாக்களும் "கொல்லப்பட்ட அம்மாக்களை" கிணற்றுள் தள்ளியும் தீயிட்டும் மாடியில் இருந்து எறிந்தும் அகால மரணமாக்கித் தண்டனைக்குத் தப்பிய அப்பாக்களும் உண்டு. அப்பா அம்மா காலையில் அடிபட்டு மாலையில் சல்லாபம் கொண்டாலும் அடிபடாமலே விலகிக் கொள்வதால் தாம்பத்திய சூட்சுமம் ஒன்றும் மாசு கொள்ளாது. அடிபாட்டுக்கு முன்னைய வாக்குவாதத்தை தவிர்ப்பதால் அல்லது தளர்த்திக் கொண்டால் இது சாத்தியம். அடிபாடு இன்பமானதல்ல. இதைக்காணும் குழந்தைகள் மனதில் இது பீதியைக் கொடுப்பதால் அவர்கள் வளர வளர தாம்பத்தியத்தில் ஏதோ இனம்புரியாத பயமும் விருப்பமின்மையும் தயக்கமும் அவர்கள் மனத்தில் ஏற்படக்கூடும். இந்நிலையில் எத்தனையோ இளைய சமுதாயத்தினர் உள்ளனர். இங்கே ஒருவகையில் சந்ததியின் தாம்பத்திய வாழ்க்கையில் பெற்றோரின் செயல்கள் ஊடுருவிக்கொள்கின்றன.


அடுத்த வாரம் முடியும்

## WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL




**VITAMOL by DR. ROBERT**

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




**DR. ROBERT GLUCOSE**

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.




**NERVOGEN NERVE FOOD**

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




**CHATAK CHATAK CHATAK**

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT 'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED SEASONING, UNSALTED SEASONING.

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-8118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT BUDGET SUPER SAVINGS DISCOUNT 1348 QUEEN ST. WEST (EAST OF LANSDOWNE) PHONE (416) 537-0394

---

# Antony Brothers Peoples Market

## 1472 Queen St West

## Tel:516 3903

**இவ்வார விசேட விலைகள்...**

பல்கன் பஸ்மதி அரிசி 6.99
4 ரூத் மைசூர் பருப்பு 2.49
2 லீற்றர் கொக்கோ கோலா 1.59
சன்யோ T 20 வீடியோ கசட்டுக்கள் 2.99
உள்ளி .99

பால் 2 % 2.99
தயிர் 1.59
மரக்கறி எண்ணெய் 2.99
பத்து ரூத் வெங்காயம் 1.99
கோழிக்கால் ரூத் 79 சதங்கள்
10 கிலோ பார்பொயில் அரிசி 5.99

**எம்மிடம் சகலவிதமான மரக்கறிகளும் மலிவு விலையில்**

# வன்னி மண்



வ.ந.கிரிதரன்

இவ்விதம் வேட்டைக்குப் போகும்போது நாங்கள் பாவிப்பது 'கெட்டர்போல்' தான். குமார் கெட்டர்போல் செய்வதில் வலு சமர்த்தன். சரியான மரக் கொப்பைத் தேடி எடுத்து, றப்பரையும், மிருகத்தோலையும் பாவித்து அழகாக ஒவ்வொருவருக்கும் ஒரு கெட்டர்போல் செய்து தருவான். குறி வைத்து அடிப்பதிலும் அவன் விண்ணன் தான். இவனிடம் ஒரு மூட நம்பிக்கை இருந்தது. ஒவ்வொரு முறையும் வேட்டைக்குப் போகும் போதும் வேலியில் ஒணானைத் தேடுவான். தென்படும் ஒணானின் கதி அவ்வளவுதான். ஒணானை அடித்து அதன் இரத்தத்தை கெட்டர் போலில் கல்லை வைத்து அடிக்கப் பாவிக்கும் மிருகத்தோலில் இலேசாகப் பூசி விடுவான். அவ்விதம் செய்வது செல்லும் வேட்டைக்கு அதிஷ்டத்தைத் தருமென்பது அவனது நம்பிக்கை. இவ்விதம் எத்தனை தடவைகள் எத்தனை உயிர்களை அந்த வயதில் கொன்று குவித்திருப்போம். இன்று நினைக்கும் போதும் சிலவேளை மனதிற்கு வேதனையைத் தரும் நினைவுகள் அவை. அன்று கொன்று குவித்த அப்பாவி உயிர்களை எண்ணி நான் இன்றும் கவலைப்படுவதுண்டு. கேட்பதற்குப் பைத்தியக்காரத் தனமாகக இருக்கிறதா? இருக்கும் ஆனால் உண்மை. மகாத்மா காந்திக்குத் தான் இது போன்ற கனவுகள் வரும் என்பதில்லை. எனக்கும் அத்தகைய கனவுகள் அடிக்கடி வருவதுண்டு. அத்தகைய கனவுகளில் அன்று நாங்கள் கொன்று குவித்த ஒணான்கள், காடைகள், கவுதாரிகள், நீர்க் காகங்களெல்லாம் ஒன்று திரண்டு வந்து நீதி கேட்பது போன்ற காட்சிகள் அடிக்கடி தோன்றத்தான் செய்கின்றன. இப்படித்தான் ஒரு கனவில் ஒரு ஒணானொன்று, மனித உடம்பும் ஒணான் தலையுமானதொரு தோற்றத்தில் வந்து உணவு தேட வந்த இடத்தில் அநியாயமாக என்னைக் கொல்வதற்கு உடந்தையாகவிருந்து விட்டாயேயடா படுபாவி என் குடும்பத்தின் கதி என்னவோ? நல்லாயிருப்பியா என்று சாபம் போட்டது.

இன்னுமொன்றில் அதேவிதமாக நீர்க்காகமொன்று வந்து என் குழந்தைகளிற்கு உணவு தேடி எடுப்பதற்காக வந்த வழியில் என் உயிரை அநியாயமாகப் பறித்து விட்டாயேயடா அரக்கனே. என் குழந்தைகள் என்னைக் காணாமல் எவ்வளவு தூரம் துடியாய்த் துடிதுடித்திருப்பார்களோ?' என்று பிரலாபித்துக் கொண்டது. இத்தகைய கனவுகள் சில சமயம் என்னைத் திக்கு முக்காட வைத்தன. நடந்த பாவங்கள் நடந்தவை தானே. போன உயிர்கள் திரும்பி வரவா போகின்றன. அந்த அப்பாவி உயிர்களின் அழுகைக்கும், துயரத்திற்குமுரிய காரணங்களின் நியாயத்தை மறுக்க முடியுமா என்ன? நடந்த செயல்களிற்கு நான் உடந்தையாகயிருந்து விட்டிருக கின்றேன். சில சமயம் அச் செயல்களை நானே புரிந்துமிருக்கின்றேன் அந்த அப்பாவி உயிர்கள் என்மேல் சுமத்தும் குற்றத்திலிருந்து விலகித் தப்பியோட நான் விரும்பவில்லை. அதற்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்கத் சித்தமாகவிருக்கின்றேன். ஆன்மீகவாதிகள் கூறுவது போல், நரகம் அல்லது சொர்க்கமென்று இருந்தால்கூட நரகத்திற்குச் சென்றுவது என் பாவங்களிற்கான தண்டனையை ஏற்று அவர்கள் கூறுவது போல் மேலும் பல பிறப்புகளிருக்கும் பட்சத்தில் அப்பிறப்புக்களிலாவது சுத்திகரிக்கப்பட்டு வந்து பிறக்க விரும்புகின்றேன்.

இப்போதெல்லாம் நான் வேட்டையை விரும்புவதில்லை. உண்மையில் அன்று கூட வேட்டையால் விளைந்த இன்பத்தை விட, காடுமேடெல்லாம் அலைவதால், இயற்கையின் வனப்பால் விளைந்த இன்பம்தான் அதிகமாகயிருந்தது. இயற்கையை இரசிப்பதிலிருக்கும் இன்பம் இயற்கையை அழிப்பதில் வருவதில்லைதான். இயற்கையை இரசித்து, இயற்கையை விளங்கி, இயற்கையுடனொத்து, வாழும் வாழ்க்கைதான் மனிதப் பிறப்பின் உண்மையான வாழ்வின் நோக்கமோ என்று கூடச் சிலவேளை நான் எண்ணுவதுண்டு.

இவ்விதம் வேட்டை வேட்டையென்று காடுமேடெல்லாம் அலைந்து திரியும்போது கூழாம் பழங்கள், வீரை, பாலைப்பழங்களையும் பறித்து வயிறு புடைக்கத் தின்போம் இதே சமயம் பாடசாலை வாழ்க்கையும் சுவாரஸ்யம் நிரம்பியதாகத் தான் சென்று கொண்டிருந்தது. எங்கள் வகுப்பு மாணவர்களைப் பொறுத்த அளவில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்திருந்தோம். எம்.ஜி.ஆர் கட்சி, சிவாஜி கட்சி அந்தச் சமயத்தில் தான் நகரில் எம்.ஜி.ஆரின் எங்க வீட்டுப் பிள்ளையும், சிவாஜியின் திருவிளையாடலும் ஒடிக் கொண்டிருந்தன. எங்களிற்கு வயசு பத்து தான். நடிகர்களின் ஆதிக்கம் அந்த வயசிலேயே எங்களை ஆட்கொண்டுவிட்டிருந்தது. எம். ஜி. ஆர் கட்சிக்குத்தான் மாணவர்கள் அதிகம். இரு பிரிவுகளாகப் பிரிந்து உதைபந்தாட்டம் விளையாடுவோம். வெற்றி எப்பொழுதும் எம்.ஜி.ஆர் கட்சிக்குத் தான். பாடசாலைக்கு அருகிலிருந்த காட்டினில் ஓய்வுநேரங்களில் கள்ளன் பொலிஸ் விளையாட்டு விளையாடுவோம். கள்ளனாக விளையாடும் போதும் எம்.ஜி. ஆர் கட்சிக்குத் தான் வெற்றி. பொலிஸாக விளையாடும் போதும் வெற்றி எம்.ஜி.ஆர் கட்சியினர் இலகுவாகக் கண்டு பிடித்து அழித்து விடுவார்கள். எம்.ஜி.ஆர் கட்சியினர்

19ம் பக்கம் பார்க்க...

# தீர்வுகளைத் தேடி



என்றும்போல் அன்றும் அதே சத்தம்
இரவின் கருமையிலும், தனிமையிலும்
இதயத்தை பாதாளமாக்கும் அழுகைக்குதல் அபயக்குரல்
சுவர்களுக்கு இந்தப்புறம் நான் கையாலாகாதவளாய்
சுவர்களின் அந்தப்புறத்தில் அவள் வதைபடுபவளாய்
அழுகையும் அடிகளும் நின்றன சடுதியாய்,
கூர்மையாக்கிய என் செவிகளில்
மயான அமைதி ஒலித்தது பயங்கரமாய்
இயக்கமிழந்த உடலை இயக்கி இயக்கி 911
காவலர் வந்தனர், காலனும் வந்தான்
மறுதினம் அவள் வெறும் பத்திரிகைச் செய்தியாய்
இவ்வருடன பலியான பெண்கள் பட்டியலில் 47 வதாய்
கலங்கியவளாய் தெளிவுகாண தாய்நாடு சென்றேன்.
தெளிவுகொண்ட பார்வையுடனும் உறுதிகொண்ட
சிந்தையுடனும்
தேடினேன் தீர்வுகள் கொடுமையின் வேர்கள்
திடீரென இயக்கமிழந்தேன்
அன்று கேட்ட நிசப்தத்தில் மாண்ட அதேகுரல்,
அழுகைக்குரல் அபயக்குரல்
இங்குமா, எங்குமா ஆண்டவனே,
முடிவுகளும் தீர்வுகளும் இறப்பில்தானு?

**துர்க்கா**

# விடியாத விடியல்

வானம் விடிதற்கு
கூவும் சேவல் கூட
இப்போது கூவுவதில்லை
காகங்களும் கரைவதில்லை
குயில்கள் தேன் சிட்டுகள்
கூட ஏன்தானே விடியலை
விளம்பரமுற செய்யவில்லை.
"கூவின பூங்குயில் கூவின கோழி"
மணிவாசகன் வாக்கும்
வீதிவாய் கேட்பதில்லை
எம்பாவைகள் இப்போ
"எம்பாவை"கள் ஆடுவதில்லை
இயற்கை இயற்கை மரணமாம்
ஒருவரும் ஒன்றும் செய்வதில்லை
அவன் ஆட்டுகிறுன்
எல்லாம் நடக்கிறது இந்த
புராணபடன வாத்திகுரல்
ஒலிப்பதில்லை.
"பவளமால் வரையில்
நிலவெறிப்பதுபோல்..."
விடியற்காலையில்
மார்கழி குளிரில் கேட்கும்
அந்த இனிய ஓசை
இப்போ கேட்பதில்லை
என்ன ஊழிக்காலமப்பா
எல்லாம் செத்திட்டுதுகள்
ஆனாலும்
புதிய குரல்கள்
புதிய கூவல்கள்
புதிய விடியல்கள்
புதிய எம்பாவைகள்
புதிய மணிவாசகங்கள்
புதிய படனங்கள்
ஆ.. இத்தியாதி இத்தியாதிகள்
புதிய இயற்கை குறைப்பிரசவம்
பழைய இயற்கையின் ஆவி
சும்மா
இவர்களை விடப் போவதில்லை

**சிதம்பரம்**
**ஞா.வடிவேலனூர்**

சுழலும் பூமியில்
உழலும் மானுடங்கள்....
சிரித்து மகிழும் சிறுசுகள்
வானுயரப் பறக்கும் பறவைகள்
மார்கழியின் கண்ணீருக்காய்
காத்திருக்கும் மரங்கள்...

மகரந்தத்தை காவிச் செல்லும்
வண்டுகள் வேகமாய் பறக்கின்றன
புதிய கண்ணகியொருத்தி
இப்போது நாட்டை எரிக்க முடியாது,
எல்லாம் கொங்கிறீட் கட்டிடங்களாய்
கிடக்கின்றன என சலித்துக்கொண்டாள்...

இளமாலைத்தென்றலில் இன்புறும்
சில வயோதிப தாயுள்ளங்களை கண்டு
என் மனம் நெகிழ்கின்றது.....
ஓடும் நதிக்கரையோரம் என் அன்னை
அமர்ந்து என்னைப்பற்றி சிந்திப்பாளோ....
அவள் கூந்தலில் நரை விழுந்திருக்குமோ!

இருக்காது!
அவள் இன்னும் அப்படியே
இளமையாய் இருப்பாள்.......
என்னைக் காணுத கண்கள் மட்டும்
சோர்வடைந்திருக்கும்.....
இதயம் கனத்திருக்கும்.....
நினைவுகள் நிறைந்திருக்கும்...

மீன்களிடம் கதை சொல்லி
தேம்பி தேம்பி அழுதிருப்பாளோ
பிறர் தன் கண்ணீரை பார்க்கக் கூடாதென
நதிக்கரைக்குள் மூழ்கி அழுதிருப்பாளோ
வெயிலிடம் முறையிட்டு நிழலிடம் ஆறுதல்
அடைந்திருப்பாளோ.....

அவளுக்கு எழுதிய கடிதங்களில் எல்லாம்
அம்மா என்ற வார்த்தையை தவிர
எழுதுவதற்கு வார்த்தைகள் வரவில்லை
முக்காடிட்ட நிலவு ஏன் என்னையே
வெறித்துப் பார்க்கின்றது
அன்னை நான் அணைத்துக் கொள் என்கின்றதா?

இந்த மேப்பிள் மர இலைகளில்
எங்கிருந்து பனித்துளிகள் படர்ந்தன...
இத்தனை வெப்பத்தில் வேர்களுக்கடியில்
கூட உஷ்ணமாய் இருந்திருக்குமே
வானம் அழுதிருக்குமோ....
என்னவளை இந்த காற்று சந்தித்து
கண்ணீரை அள்ளி வந்திருக்குமோ!

**ஜி.மொனிக்கா**

# நீ மாத்திரமே என்னவள்!

நான் பார்க்கும் நிலைக்கண்ணாடிகளில்
உன் விம்பம்தான் தெரிகிறது!
பௌர்ணமி நிலவை
பார்த்தபோதுதான்
நீ வானத்திலிருப்பது புரிந்தது
நேற்று பார்த்த திரைப்படத்தில்
நீ மாத்திரமே நடித்திருந்தாய்!
புத்தக மட்டையொன்றின்மேல்
தனித்திருந்த இரவுப்
பொழுதொன்றில்
உன்னைப்பற்றி நான்
கிறுக்கியவைகள்
அற்புதமான கவிதைகளாம்!
என் இலக்கிய நண்பி சொன்னாள்!
மூன்று நாளாய் நீராடவில்லை
தண்ணீர் தொட்டியிலும்கூட நீ
இருந்ததனால்
தண்ணீரை நான் கலக்கவேயில்லை!
நித்திரையில் உன் பெயரைக்
கூப்பிட்டது
எனக்கே கேட்கிறது!
ஒற்றைவண்டில் மாடு ஒன்று
திசையறியாமல்
போய்க்கொண்டிருப்பதை
நேற்றுக் கனவில் பார்த்தேன்
ஒற்றையாய் பறவையொன்று
முற்றத்தின் மரத்திலிருந்து தவித்து
சோகமாய் கீச்சிட்டு அழுததை
இன்று நேரில் பார்த்தேன்!
என் தலையணைக்குக்கூட
இப்போதெல்லாம்
துணையொன்று தேவைப்படுகிறதாம்!
எனக்கு தேகம் நெருப்பாய் சுடுவது
பிணியாலெல்லாம் அல்லவாம்
நாடி பிடித்து வைத்தியர் செவ்வியது
அம்பிகாவதி அமராவதி கதை
ஆற இருந்து பிடித்துப் பார்த்தேன்
முடிவு பிடிக்கவில்லை எனக்கு!
பெண்பேசி எனக்கொரு
படம் காட்ட வந்தார்கள்!
நான் பார்க்கவே மறுத்து விட்டேன்!
படத்தில் உன் நிலா முகம் தோன்றி
இசகாய் தலையசைத்து
விடுவேனோவென்று
எனக்குள் ஒரே பயம்!
நேற்றைய அந்தி வேளையில்
உனைக் கண்டவுடன் காலைவணக்கம்
சொன்னது
சித்தப் பிரமையினால் அல்ல!
முந்தாநாளின் கடும் குளிரிரவில்
போர்வையில் உனை நினைத்தது
எனக்கு மிகவும் பிடித்திருந்தது!
என் கனவுலகில் தினமும் நீ
வருவதற்காய்
உனக்கு நான் நன்றி கூறுகிறேன்!
என்னோடு நீ நிஜமாயே
கலப்பதற்காய்
நான் தவம்கூட இருப்பேன்!
நான் உனக்காய் எழுதி
வைத்திருக்கும்
கவிதையின் வரிகள் சில
கேட்கிறாயா?!
"விரிந்திருக்கும்
பூஞ்சோலையொன்றிற்கு
போயிருந்தேன்
நீ மாத்திரமே அங்கெல்லாவிடத்தும்
இதழ் விரித்து பூத்திருந்தாய்"
இன்னும் கூட கேட்கிறாயா?
"மானேயுன் மைவிழி செய்யும்
ஜாலங்கள் தேனானது!
பூவேயுன் புன்னகைப்பூக்களில்
பூலோகம் ஜீவிதம் கொண்டது!
உன் கன்னங்கள் செம் மாதுளை
ஓ! என்னென்பேன் நீயென் தாரகை!
வந்துன்னை வாரிக் கொண்டிட
என் நெஞ்சமெல்லாம் ஓராயிரம்
ஆசை!"

இன்னும் இன்னமும்கூட
வேண்டுமா?
வா! இனியவளே வா!
இன்னமும் நெருங்கி வா!
இன்னமும் நெருங்கி எனக்குள் வா
முடிவில்லா கவிதைகளெழுதி நாம்
இணைந்து படித்துப் பார்ப்போம்!
முடிவில்லா வானம் பற்றியும்
அலையெழுப்பும் கடலைப்பற்றியும்
ஆராய்ச்சிகள் செய்து பார்ப்போம்!
இரவெல்லாம் தூக்கம் கெடுக்கும்
ராகங்கள் மீட்டிப் பார்ப்போம்
இனியிருக்கும் ஜீவிதத்தை
இனிமையாக்கி வாழ்வு கொள்வோம்!

ஒவ்வொரு துடிப்பிலும் என்
இதயம் கேட்கிறது!
வா இனியவளே வா!
இன்னமும் நெருங்கி
என் ஜீவனிற்குள் வா!

**அனந்தன்**

# முரண்பாடு

அவன் இறைவனோ இல்லையோ?
நடைமுறையாளன்
சுற்றம் துறந்தான்
அரியணை துறந்தான்
எல்லாம் துறந்தான்

ஆம் அவன்
நடை முறையாளன்
போதனைகள் அழகானவை
அவனை நான் விரும்புகிறேன்
வேஷத்தை மட்டும்
போட்டுக் கொண்டேன்
கோஷங்களை எங்கோ
தொலைத்து விட்டேனோ இல்லை
தொலைத்துக் கட்டினேனோ தெரியலை

அரியணை காக்க
அதனை நான்
தங்க வேலியால் அடைத்துக் காப்பேன்
அது எனக்காக அல்ல
அல்லல் படுவோரை நான்
அலட்டிக் கொள்ளேன்

ஆம்
அழகாக நான் அதனை
அடைத்துக் காப்பேன்
வெளியில் போனால்
வேலை அதிகமெனக்கு
இத்தனைக்கும் நான்
அவனை மனதார பூஜிக்கின்றேன்
பெருமானே எங்கே நீ
வந்து பார் எம் அவலங்களை

**நந்தன்**

**புதுக்க விதை**

# சோமாலியா:
## ஆபத்தை எதிர்நோக்கும் ஐ.நா. அமைதி காக்கும் படை

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படை மேலும் மேலும் அவப்பெயர்களை சம்பாதித்து வருகின்றது. கம்பூச்சியாவில் அமைதி காக்கும் படையின் பாதுகாப்பின் கீழ் தேர்தல்கள் நடந்து முடிந்திருந்தாலும் பொல் பொட்டின் கொலைகார அமைப்பான கமர் ரூச் நிகழ்த்திவரும் அராஜகங்களை கட்டுப்படுத்தும் திறன் இல்லாமல் ஐ.நா. அமைதிகாக்கும் படைகள் இருக்கின்றன. முன்னாள் யூகோஸ்லாவியாவிலோ பொஸ்னிய மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் இந்த நூற்றாண்டின் மிக மோசமான மனிதப் படுகொலையை தடுத்து நிறுத்தும் வலு இல்லாத நிலையில் ஐ.நா. அமைதிப்படைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல அங்கே நிலை கொண்டிருக்கும் ஐ.நா. அமைதிப் படையினர் மீது போதை வஸ்து கடத்தல் வியாபாரம் பாவனை, மற்றும் பொருட்கள் கடத்தல், கறுப்புச்சந்தை வியாபாரம் போன்ற குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன.

ஆனால் சோமாலிய மக்களை பஞ்சத்திலிருந்தும் உள்நாட்டு யுத்தத்திலிருந்தும் பாதுகாப்பதற்காக போன ஐ.நா. அமைதி காக்கும் படையினர் இவற்றைவிட மோசமாக கண்டிக்கப்படும் நிலையிலுள்ளவர்கள். இருவாரங்களுக்கு முன் சோமாலியாவின் மொகடிசு நகரில் மக்கள் கூட்டத்தின்மீது ஐ.நா. படையினர் நடத்திய ஹெலிகொப்டர் தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட சோமாலியர்கள் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலோனோர் பெண்களும், குழந்தைகளும். இதே காலப்பகுதியில் ஜெனரல் அய்டீட்டின் தீவிரவாத அமைப்பு நடத்திய தாக்குதல் ஒன்றில் ஏழு நைஜீரிய துருப்புக்கள் கொல்லப்பட்டனர். கடந்த யூன் மாதத்திலிருந்து இதுவரை 47 ஐ.நா படையினர் சோமாலியாவில் கொல்லப்பட்டுள்ளனர். அதேசமயம் 200க்கும் மேற்பட்ட சோமாலியர்கள் ஐ.நா. படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரே தாக்குதலில் நூற்றை அண்மித்த மக்களை கொலைசெய்த ஐ.நா. படைகளின் நடவடிக்கைகள் குறித்து இன்று ஒரு அழுத்தமான கேள்வி எழுந்துள்ளது. இதற்கு சில நாட்களுக்கு முன்னர் பாகிஸ்தான் படையினர் நடத்திய வெறியாட்டத்திலும் அப்பாவி மக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

சோமாலியத் தீவிரவாத அமைப்பின் தலைவர் ஜெனரல் மொகமட் அய்டீட்டை பிடிக்க அல்லது கொல்லும் முயற்சிகளின் அம்சமாக நடக்கும் தேடுதல் வேட்டைகளின்போதே ஐ.நா. படையினரால் அப்பாவி சோமாலிய மக்கள் கொல்லப் படுகிறார்கள். ஜெனரல் அய்டீட் அப்பாவி மக்களை தனக்கு பாதுகாப்புக் கவசமாக வைத்துக் கொண்டு ஐ.நா. படையினர் மீது தாக்குதல்களை முடுக்குகிறார் என்ற வாதத்தை ஐ.நா.படைகள் முன்வைக்கின்றன.

மொகடிசுவில் வெடிக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டுகளுக்கும், ஒவ்வொரு கண்ணிவெடிகளுக்கும், ஒவ்வொரு மோட்டார்களுக்கும் ஜெனரல் அய்டீட்டே காரணம் என ஐ.நா. படைகள் தரப்பில் கூறப்படுகிறது. கொல்லப்படுபவர்கள் அப்பாவிகள் அல்ல, அய்டீட்டின் ஆட்களே என ஐ.நா. தனது பிரச்சார இயந்திரங்களை பாவித்து பிரச்சாரம் செய்கிறது. அய்டீட்டைப் பற்றிய எதிர்ப்பிரச்சாரங்களை செய்வதற்காக ஒலிபரப்புச் சேவையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஐ.நா பத்திரிகை ஒன்றையும் வெளியிடுகிறது.

அதுமட்டுமல்ல பல மக்கள் ஒரேயடியாகக் கொல்லப்பட்ட சம்பவத்தையும் ஐ.நா. இராணுவ பார்வையுடனேயே பார்க்கிறது. மொகடிசுவில் உள்ள ஐ.நா. இராணுவப் பேச்சாளரான மேஜர் ஸ்ரொக்வெல் நடந்த சம்பவம் பற்றிக் கூறுகையில் யுத்தம் நடக்கும் இடத்தில் நிற்பவர்கள் அனைவருமே யுத்தத்துடன் தொடர்புடையவர்களே, எம்மீது தாக்குதல் ஒன்று நடக்கும் போது நாம் வேறு எதையும் பார்க்க முடியாது என்கிறார்..

ஆனால் பிரகடனப் படுத்தப்படாமல் நடக்கும் இந்த யுத்தத்தில் ஐ.நா படையினர் வெல்வதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு. அது மட்டுமல்ல ஜெனரல் அய்டீட்டுக்கு எதிரான பிரச்சார யுத்தமும் சோமாலியாவில் எடுபடப்போவதில்லை. அதுமட்டுமல்ல ஜெனரல் அய்டீட் குழந்தைகளையும், பெண்களையும் கவசமாகப் பாவித்து ஐ.நா படைகளுக்கெதிரான நகர்ப்புற கெரில்லா தாக்குதல்களை விஸ்தரித்து வருகிறார். ஒருபுறமாக ஐ.நா. படைகளுக்கு ஆத்திரமூட்டி அவர்களை அப்பாவி மக்களுக்கு எதிராக அராஜகம் செய்ய வைப்பது அதன் மூலம் ஐ.நா படையினருக்கெதிரான வெறுப்புணர்ச்சியை சோமாலிய மக்களிடையே பெருகச் செய்வது மறுபுறமாக ஐ.நா. படைகளுக்கெதிரான தனது தாக்குதல்களை விஸ்தரிப்பது இரு வகையிலுமே அய்டீட் முன்னேறிவருவது தெரிகிறது.

அமைதி காப்பதற்கும் உணவு வழங்குவதற்கும் என்று சோமாலியாவுக்குப் போன ஐ.நா. படைகள் இன்று அய்டீட்டை தேடி

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்

அலைவதற்கும் அப்பாவி மக்களை கொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதற்கும் காரணம் ஐ.நா படைகள் மீது அமெரிக்க இராணுவம் செலுத்தும் மேலாண்மையும் அமெரிக்காவின் தவருன வழிநடத்தல்களுமே எனக் கருதப்படுகிறது. அடக்குமுறை மீது கொண்ட அமெரிக்காவின் அரசியல், இராணுவக் கொள்கைகளே இன்றைய இந்த இக்கட்டான நிலைக்கு காரணம் எனக் கருத்து தெரிவிக்கப்படுகிறது. QRF எனப்படும் அமெரிக்காவின் விரைவு அதிரடிப்படையினரின் ஹெலிகொப்டர்களே அப்பாவி மக்களின் மீது தாக்குதல் நடத்திக் கொன்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அய்டீட்டை தேடும் வேட்டையில் அமெரிக்க விசேட படைகளான றேஞ்சேர்ஸ், டெல்ரா படையினர் ஆகியோரும் பங்கு கொண்டுள்ளார்கள். சோமாலியாவிலுள்ள 25 ஆயிரம் ஐ.நா. படையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களிருந்தாலும் அமெரிக்காவே ஆளுமை செலுத்துகிறது. அமெரிக்கப் படையினரின் ஆளுமையையும் தவருன வழிநடத்தல்களையும் இத்தாலிய படைகள் கண்டித்ததுடன் மொகடிசுவில் தாம் நிலைகொள்ளமாட்டோம் என ஆட்சேபம் தெரிவித்தும் இருக்கின்றன.

இராணுவரீதியாக மாத்திரமல்ல அரசியல் சதுரங்கத்திலும் ஐ.நா படைகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. ஜெனரல் அய்டிட்டுக்கு எதிரான இன்னுமொரு சக்தியான ஜெனரல் மொகமட் கெர்ஸி மோர்கனை பலப்படுத்தும் வேலைகளிலும் ஐ.நா. படைகள் ஈடுபட்டுள்ளன. ஜெனரல் மொகமட் கெர்ஸி மோர்கன் சோமாலியாவின் முன்னுள் ஜனுதிபதி காசயத் பார்தேயின் மருமகனும் சோமாலிய தேசிய முன்னணியின் தலைவருமாவார். இவரைப் பலப்படுத்தும் வகையில் கென்யாவில் உள்ள 20 ஆயிரம் சோமாலிய அகதிகளை மீள அழைக்கும் வேலைகளில் ஐ.நா. படைகள் துரிதப்படுத்துகின்றன. இவற்றில் 10 ஆயிரம்பேர் ஜெனரல் மோர்கனின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெனரல் அய்டிட்டுக்கு எதிரான எதிர்ப்பலையை பரவலாக்கி விரைவுபடுத்துவதே ஐ.நா படைகளது அல்லது அமெரிக்காவின் நோக்கமாக இருக்கிறது.

ஆனுல் இது தவருனது. 1 மில்லியன் மக்கள் வசிக்கும் ஒரு நகரில் ஒரு தனிநபருக்கு எதிரான வேட்டையானது என்ன விதமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஐ.நாவும் அமெரிக்காவும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. ராணுவரீதியான பார்வையில் கடந்த டிசம்பர் மாதம் சோமாலியாவின் கெரில்லா அமைப்புக்களை நிராயுதபாணிகளாக்குவதில் ஐ.நா. படைகள் இழைத்த தவறே இன்றைய இந்த நிலைக்கான காரணம் எனக் கருதப்படுகிறது. உதாரணமாக இது குறித்து கருத்துக்கூறிய ஒரு அமெரிக்க இராணுவ அதிகாரி நாங்கள் கட்டடங்களைத் தகர்க்கவும் மக்களைக் கொல்லவும் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறேமே ஒழிய ஆட்களை எப்படி கைதுசெய்வது என்ற பயிற்சி எங்களுக்கு அளிக்கப்பட்டதில்லை என்கிறர்.

இப்போது ஜெனரல் அய்டீட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனையை தணிக்க வேண்டும் என்ற வாதம் ஐ.நா. இராணுவத்தினரிடையே இப்போது பலமாக எழுந்துள்ளது. அதேசமயம் முன்னுள் அமெரிக்க ஜனுதிபதி ஜிம்மி கார்ட்டர் இப்பிரச்சனையில் தலையிட்டு ஒரு சுமுகமான முடிவுக்கு வர உதவவேண்டும் என ஜெனரல் அய்டீட் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனுல் சோமாலியாவின் இன்றைய பிரச்சனைக்கு சுமுகமான முடிவு காண்பது என்பது இலகுவான விடயமல்ல.

## வன்னிமண்...

கட்டும் வீடுகளை சிவாஜி கட்சியினரால் கண்டு பிடிக்க முடிவதில்லை. காரணம் எம்.ஜி.ஆர் கட்சியினர் மரங்களில், வீடென்று தெரியாதவகையில் வீடுகளைக் கட்டிவிட்டு, கீழே வீடு தேடி அலையும் சிவாஜி கட்சியினரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். இதில் அடியேன் எந்தக் கட்சியினைச் சேர்ந்தவனென்று நினைக்கிறீர்கள். சிவாஜி கட்சியென்று நீங்கள் நினைக்காவிட்டால் உங்கள் ஊகம் சரியானதுதான்.

எங்கள் பாடசாலைக்கு அருகிலிருந்த கிணறென்றில் சிலவேளைகளில் தண்ணீர் அள்ளுவதற்காக சிலசமயம் மூடப்படாத சிறிய ஆர்மட் காரில் சிங்கள ராணுவச் சிப்பாய்கள் வருவார்கள். எங்களுடன் விளையாட்டாகக் கதைத்துச் செல்வார்கள். சிலவேளைகளில் இனிப்புகள் கொண்டுவந்து தருவார்கள். கதைக்கும் போது அவர்களின் தமிழில் மழலை மிதக்கும் அப்பொழுது நாங்கள் எங்களிற்குள் வேடிக்கையாகக் கதைத்துக் கொள்வோம். 'தடியன்கள் தின்று தின்றுவிட்டு வேலையில்லாமல் இருக்கிருன்களென்று' ஆனுலும் விரைவிலேயே எங்கள் சிந்தனை பிழையென்பதை உணர்ந்து கொள்ள வைத்து 71 ம் ஆண்டு சேவேரா புரட்சி என்று கூறப்பட்ட சிங்கள இளைஞரின் புரட்சி அதன்பின் தமிழ்மக்கள் மீதான ஆயுதப்படைகளின் அடக்குமுறைகளும், வெடித்தெழுந்த தமிழர்களின் போர்க்குரலும் நிலைமையை முற்றுகவே மாற்றி வைத்துவிட்டன.

இன்னுமொருவிடயம் எங்கள் பாடசாலைக்கு அருகிலிருந்த புத்தவிகாரை ஒய்வு நேரங்களிலெல்லாம், புத்தவிகாரைக்கு அருகிலிருந்த கூழாம்பழ மரத்தில் பழங்கள் பறிக்கச் செல்வோம். அவ்விதம் செல்லும்போது விகாரையினுள் ஆழ்ந்த சயனத்திலிருக்கும் பிரமாண்டமான புத்தர் சிலையினைப் பார்த்து வியப்பதுண்டு. புத்த விகாரைக்குப் பொறுப்பான பிக்கு எங்களுடன் தமிழில் கனிவாகப் பேசுவார். ஆனுல் இன்று நிலைமை மாறிவிட்டது. ஒருகாலத்தில் அமைதி தவழ்ந்த மண் இன்று யுத்த பூமியாக மாறிவிட்டது. மக்களிற்கிடையில் நிலவிய அந்நியோன்யம் சிதைந்து விட்டது. பிரிவுகள் வேரூன்றி விட்டன. அமைதி குலைந்தேபோய்விட்டது. தி.மு.க. வினரின் குறிப்பாகக் கருணுநிதியின் பாசையில் கூறப்போனுல் எல்லைமண் இன்று தொல்லைமண்ணுக உருமாறி விட்டது.

தொடரும்

# விமர்சகத் தகைமை

சி.சிவசேகரம்

குறிப்பிட்ட ஒரு படைப்பை ஒருவர் புகழ்ந்து பேசும்போது அவ்வாறு புகழ்வதற்கு அவருக்கு என்ன தகுதியுள்ளது என்று எவருங் கேட்பதில்லை. படைப்பாளியும் அவரது அன்பர்களும் நீங்கலாக, எவராவது, ஒருவேளை, அப்புகழ்ச்சி மிகையானது எனக் கூறக்கூடும். இது சில சமயம் தனிப்பட்ட காரணங்களாலானதாக இருக்கக்கூடும். அல்லாதவிடத்துத் தைரியமாகக் கருத்துத் தெரிவிக்கும் பண்பு காரணமானதாக இருக்கக் கூடும். எவ்வாறுயினும், இத்தகைய குறுக்கீடு விரும்பப்படுவதில்லை (இவை தொடர்பான சில அனுபவங்களை வேளை கிடைக்கும் போது எழுதலாமென நினைக்கிறேன். ஆயினும் அவை அகச் சார்பின்றி எழுதப்பட வேண்டிய தேவை காரணமாக அவற்றை நிதானமாக எழுதுவதே நியாயமென நினைக்கிறேன்) படைப்புக்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் எழுத்துக்கள் படைப்பாளிகட்கு விருப்பமாயிருக்குமென எதிர்பார்ப்பது பொதுவாக யதார்த்தத்துக்கு இசையாது. கடுமையான விமர்சனங் களின் நியாயமான கருத்துக்களை ஏற்பதற்கும் ஏற்க முடியாத கருத்துக் களையிட்டு நிதானமாகக் கருத்துத் தெரிவிக்கவுமான மனப்பக்குவம் எளிதில் அமைவதில்லை. ஒருவரது கருத்து படைப்புப் பற்றியதா, படைப்பாளி பற்றியதா என்பதும் தனது அகச்சார்பான அபிப்பிராயத்தின் வெளிப்பாடாக தெளிவான ஒரு அடிப் படையிலான மதிப்பீடா என்பதும், அக்கருத்து முறையான ஒரு விமர்சனமா இல்லையா என்று தீர்மானிக்கின்றன. ஒருவர் விமர்சனம் எழுதுவதற்கான தகுதி பற்றிய கேள்விகள் இடைக்கிடை எழுகின்றன. இவை ஏன் எழுகின்றன என்பது பற்றியும் இத் தகுதிகள் பற்றியுஞ் சிறிது எழுதுவது தகும் என்று நினைக்கிறேன்.

ஆரம்ப நிலையில் உள்ள எழுத்தாளர்கள் சில வகைகளிற் குழந்தைகள் போலவே நடந்து கொள்வதுண்டு. தம் படைப்பைத் அச்சிற் காணும் போது மனமகிழ்வதையும் எவரேனும் பாராட்டும் போது உச்சி குளிர்வதையும் குறைகூறும் போது மனம் நோவதையும், ஒரு குழந்தையின் படைப்பைப் பள்ளி ஆசிரியரோ ஆசிரியையோ பொதுப்பார்வைக்கு வைக்கும் போதும் அதை எவரேன் புகழும் போதும் புகழத் தவறும் போதும் ஏற்படும் குழந்தையின் மனநிலைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இங்கு குழந்தைகள் வேண்டுவது அங்கீகாரம். அதன்மூலம் அவர்கள் மேலும் படைக்குமாறு ஊக்குவிக்கப் படுகின்றனர் ஆரம்ப நிலையில் உள்ள படைப்பாளியின் நிலைமையும் அதிகம் வேறுபட்டதல்ல. குழந்தைகள் வளர்கின்றனர். ஒரு கட்டத்தில் வெறும் புகழ்ச்சியால் அவர்களை ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆரம்ப நிலையில் உள்ள படைப்பாளியின் நிலைமையும் அதிகம் வேறுபட்டதல்ல. குழந்தைகள் வளர்கின்றனர். ஒரு கட்டத்தில் வெறும் புகழ்ச்சியால் அவர்களை ஊக்குவிக்க இயலாது போகிறது. அவர்களாற் பிற ஆக்கங்களுடன் தம்முடையவற்றை ஒப்பிட முடிகிறது. பொய்ப்புகழ்ச்சி மனத்தை வருத்துகிற நிலை ஏற்படுகிறது. எவ்வளவு கடுமையான ஒரு விமர்சகருங்கூட ஒரு குழந்தை எழுதிய ஒரு கதையையோ வரைந்த படத்தையோ விமர்சிக்க முயல்வது அருமை. பொதுவாகப் பாராட்டுதல் மட்டுமே அங்கு எதிர்பார்க்கப்படுகிறது, பாராட்டுதலே அங்கு கிடைக்கிறது. அனுபவமுள்ள ஆசிரியரோ, பெற்றோரோ பாராட்டைத் தொடர்ந்து விமர்சனப்பாங்கான கருத்துக்களை உற்சாகமூட்டும் பாங்கிற் கூறவுங்கூடும். இவ் விமர்சனம் குழந்தையின் வளர்ச்சியுடன் சேர்ந்து தன்மையில் மாறுபாடுறும். குழந்தைகள் வளர்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய உண்மை.

ஆரம்ப நிலையிலுள்ள ஒரு ஓவியரையே எழுத்தாளரையோ ஒரு குழந்தையை நடத்துவது போன்று நடத்துவதில் நியாயமுண்டு. ஆயினும் அது எப்போதுமே அவசியமில்லை. (சில குழந்தைகள் படு சுட்டிகள். அவர்கள் வெகு சுலபமாகவே பொய்யுரைகளை இனங் கண்டு விடுகின்றார்கள்). ஆயினும் அந்தப் படைப்பாளியின் வலிமையான அம்சங்களையும் குறைபாடுகளையும் எடுத்துக்காட்டும் தேவையை எவரும் அலட்சியஞ் செய்யவியலாது. எவ்வாறுயினும், நான் இங்கு எடுத்துக்கொண்ட விஷயம், இவ்வாறுன ஊக்குவிப்பு விமர்சனங்களைப் பற்றியதல்ல. இத்தகைய ஊக்குவித்தலுக்குத் தேவையில்லாதவர்களதும் தங்களது ஆக்கங்களைப் பிரசுரிக்கவும் காட்சிக்கு வைக்கவும் களங்களையுடையவர்களதும் படைப்ப ,களை விமர்சிப்பதற்கான உரிமை பற்றியே இங்கு எழுத முற்படுகிறேன். தங்களது ஆக்கங்கள் புகழுரைகளையன்றி வேறெதற்கும் தகுதியற்றவை என்று கருதுவோர், தம் படைப்புக்கள் பற்றிய விமர்சனங்களை பாராமலே இருக்கலாம். பொதுப் பார்வைக்கு வைக்கப்பட்ட ஒரு படைப்பைச் சீர்தூக்கிக் கருத்துரைக்கும் உரிமை எல்லாருக்கும் உண்டு என்பது என் எண்ணம். அக் கருத்துக்கள் மூலமே கலையும் இலக்கியமும் மேனோக்கி வளர்கின்றன. ஆக்க இலக்கியத்தினதும் புலனுணர்வு சார்ந்த கலைப்படைப்புக்களதும் கர்த்தாக்களின் மேம்பாடு, எண்ணிக்கையால் நிர்ணயமாவதில்லை. படைப்புகளின் தரமே முக்கியமானது. படைப்புகளின் விமர்சனம் படைப்பின் நோக்கிற்கும் நுகர்வோரின் நோக்கிற்குஞ் சார்பாக வெவ்வேறு கோணங்களினின்று செய்யப்படக் கூடும். விமர்சனங்களை விமர்சனவியலாளர் இவ்வணுகுமுறைகட்கேற்பப் பலவாறு வகைப்படுத்தியுள்ளனர். க. கைலாசபதியின் "இலக்கியமும் திறனாய்வும்" பரவலாக அடையாளங் காணப்பட்டுள்ள இலக்கியக் கொள்கைப் போக்குகளையும் திறனாய்வுக் கொள்கைகளையும் தற்காலத் தமிழிலக்கியத் திறனாய்வுப் போக்குக்களையுந் தெளிவாக விளக்கும் ஒரு நூல். அதன் உள்ளடக்கத்தை இக்கட்டுரைக்குள் முடக்க நான் முயலவில்லை. இலக்கிய விமர்சனவியல் பற்றி அறியவிரும்புவோருக்கு நான் பரிந்துரைக்கக் கூடிய தமிழ்நூல் அதுவே. ஒரு விமர்சனம் படைப்பின் எந்த

அம்சத்தைப் பற்றிக் கவனஞ் செலுத்துகிறது என்பது, விமர்சகரது இலக்கியச் சூழலாலுந் தீர்மானிக்கப்படலாம். ஒரு படைப்பின் தன்மையையும் நோக்கத்தையும் அடையாளங் காண்பதும், அவற்றின் அடிப்படையில் அப்படைப்பு எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது என்று மதிப்பிடுவதும் விமர்சனத்தின் பொதுவான பண்புகளெனலாம். இதைச் செய்வதற்கான தகுதியை ஒருவர் எவ்வாறு பெறுகிறார்? இன்று விமர்சனவியல் ஒரு அறிவுத்துறையாக விருத்தி பெற்றுள்ளது. அதே வேளை விமர்சனம் கலைத்தன்மையையும் உடையது. விமர்சனத் துறையில் ஒருவருக்குப் பரிச்சயமும் பயிற்சியும் இருப்பது மிகப் பயனுள்ளதேயாயினும் அதுவே ஒருவரது விமர்சகத் தகுதியையுந் தரத்தையும் தீர்மானித்து விடாது. விமர்சிப்பதற்கு உரிமை என்ற வகையில் இத் தகுதியைப் பற்றிக் கூறுவதாயின், ஒரு படைப்புத் துறையில் ஈடுபாடுடைய எவருக்கும் அந்தத் தகுதி இருக்கிறது. இந்த ஈடுபாடு உள்ளவர் பலவேறு படைப்புகளைப் பார்த்தும் ரசித்தும் ஒப்பிட்டும் பிற விமர்சனங்களைப் படித்தும் தன்னை மேம்படுத்திக் கொள்ளலாம். அப்போது தகுதியுடன் தரமும் இணைந்து கொள்கிறது.

படைப்பாளிக்கு மட்டுமே விமர்சிக்குத் தகுதியுந் தரமும் உள்ளது என எவருங் கூறுவது நியாயமாகாது. ஒரு படைப்பாளி படும் சிரமத்தை இன்னொரு படைப்பாளிதான் உணர முடியும் என்ற வாதத்தை எத்தனையோ நுகர்வுப் பொருட்களுக்கும் பயன்படுத்தலாம். படைப்பின் நேர்த்தியை மதிப்பிடும் உரிமையைப் படைப்போருக்குள் வரையறுக்க முடியாது. இந்த வாதத்தை நாம் ஏற்றுக் கொள்வதாயின் பரத நாட்டிய விமர்சனங்களை எழுவோர் பலருக்குத் தடை விதிக்க நேரிடும். எத்தனை இசை விமர்சகர்களை நாம் நல்ல இசைஞர்கள் என்று கருத முடியும்? படைப்பாளிகள் எல்லோருமே, நல்ல படைப்பாளிகளுங் கூட, நல்ல விமர்சகர்களாக அமைய அவசியமில்லை. ஒவ்வொரு படைப்பாளிகளினதும் நாட்டம் மற்றவர்களினதினின்று வேறுபடுகிறது. கவிதை, சிறுகதை, நாவல் போன்ற துறைகளில் நல்ல படைப்புக்களைத் தந்த பலரால் தமது ஆக்கத் துறைகளின் அழகியற் கோட்பாடுகளை விவரிக்க இயலாது. அதே வேளை, பல வேறு வகையான படைப்புகளுடனும் பரிச்சயமும் அழகியல் பற்றிய ஆழமான அறிவும் உள்ள ஒருவர் சுயமாக எதையும் ஆக்கும் முனைப்பற்றவராக இருக்கலாம். எனவே, விமர்சகத் தகைமையை மேற்கூறியவாறு வரையறுக்கும் போக்கு, விமர்சனங்கள் பற்றிய அச்சங் காரணமாக இருக்கக்கூடும்.

விமர்சனங்கள் விமர்சகர்களது அகச்சார்பாலும் தனிமனித உறவுகளாலும் சமுதாய, அரசியல் நிலைப்பாடுகளாலும் பாதிக்கப்படுவது உண்மை. ஆயினும் இவ்வாறான பாதிப்புகள் தவிர்க்கக் கூடியன. 1960. 70 களில் இலங்கையிற் காத்திரமான விமர்சனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட அளவுக்குத் தமிழகத்தில் முன்வைக்கப்படாமைக்கு முன்குறிப்பிட்ட பாதிப்புக்களுங் காரணங்களே. "தமிழகத்து விமர்சனங்களிற் சிலவற்றைப் படித்தால் தற்சமயம் யார் யாருடன் தங்கியிருக்கிறார் என்பதை அறியலாம்." என்ற கருத்தை 1970 களில் வாசித்திருக்கிறேன். கீழ்த்தரமான தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களும் தகுதி மீறிய புகழாரங்களும் தமிழகத்தின் விமர்சனத்

**27ம் பக்கம் பார்க்க..**


## சிவாஸ் ரேடிங் கோ
## மாபெரும் மலிவு விற்பனை

**டின்னில் அடைத்த பழவகைகள்**
**(நுங்கு, கொய்யாப்பழம் போன்றன)**
**50 சதம் மட்டுமே**

சம்பா அரிசி 5 கிலோ 4.99
பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ 7.99
மரக்கறி எண்ணெய் 3l 2.99
மாங்காய் கோடியல் 1.59
மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ 4.99
மிஸ்டர் குடாஸ் All purpose மாவு 10 கிலோ 4.99

கோழிக்கால் ருத் .69
(பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு)
உடன் கோழி
(ஒருவருக்கு ஐந்து மட்டும்) 1.99
ஆட்டுக்கால் ருத் 1.99
வறுத்த மிளகாய்த் தூள் 900 கி 4.99
எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் .48 சதம்
முட்டை (Tray of 30) .99 சதம்
(ஒருவருக்கு இரண்டு மட்டும்)

**இவ்வார ஸ்பெஷல்**
**பஸ்மதி அரிசி 20 கி**
**27.99**

**Fresh frozen King Fish**
**2.99Lb**

மேலதிக விபரங்களுக்கு
பின் அட்டையைப்பார்க்க..

மகத்தான ஆரம்பம்! **Grand Opening**

# 24.9.1993

# அப்சராஸ் ரெஸ்ரோறன்ற்

# APSHARAS RESTAURANT

Eat in! Take away!! Delivery Service!!!


Sri Lankan-Indian-Chinese-Canadian Foods

**You Name it-We Have it**

நகரின் மத்தியில் நவீன வசதிகள் கொண்ட உணவகம்

இடியப்பம், தோசை, கொத்துரொட்டி,
புரியாணி, பேப்பர் தோசை,*Fried rice,*
*Chinese dishes, canadian dishes*
என்பன உடனுக்குடன் செய்து
கொடுக்கப்படும்

★திருமணம்
★பிறந்த நாள்
மற்றும் சகல விதமான
வைபவங்களுக்கும்
*catering service*




*Call us for all your occasions!*

# 412 6164

**Apsharas**

2778 Kennedy Rd (Kennedy/Finch)

Scarborough


# அப்பிளும் நியூட்டனும்; குட்டிக் கம்பியூட்டர்கள்


கிட்டத்தட்ட பதினாறு வருடங்களுக்கு முன் அடிக்கடி வெளிநாடு சென்று வரும் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அப்போது என்னிடம் 'விஞ்ஞானி, நீ கூட்டுற மெஷின் கண்டிருக்கிறியா' என்று கேட்டார். நான் ஏதோ குப்பை கூட்டும் மெஷின் என்ற எண்ணத்தில் 'இல்லையே' என்றேன். அவர் கொண்டு வந்தது கைக்குள் அடக்கமான ஒரு பொருள். என்னவென்று பார்த்தால் கணக்கு கூட்டும் மெஷினும். கல்குலேட்டர். அந்த நேரம் இவையெல்லாம் எமக்கு கம்பியூட்டர்கள் மாதிரி... அபூர்வமானவை.

ஆரம்பத்தில் கல்குலேட்டர்கள் பெருக்கிப் பிரித்து கூட்டிக் கழிக்க மட்டுமே பயன்பட்டன. ஏதோ எண்கள் என்பவை குப்பைகள் என்ற மாதிரி நினைப்பில்... பின்னர் அவற்றின் உருவங்கள் சிறுத்துச் சிறுத்து அவற்றின் செயற்பாடுகள் அதிகரித்தன. ரெக்ஸாஸ் இன்ஸ்ருமெண்ட்ஸ், ஹியூலெட் பக்காட், கசியோ, ஷார்ப் போன்ற நிறுவனங்கள் பின்னாளில் விஞ்ஞானக் கணிப்பீடுகளைச் செய்யும் கல்குலேட்டர்களை உருவாக்கின.

கல்குலேட்டர்களை சிறுவர்கள் பாவிப்பதனால் பிள்ளைகளின் கணித அறிவு குறைவதாக ஆட்சேபம் பிறந்தது. நான் பார்த்த காட்டூன் ஒன்றில் மகனிடம் தாய் 'இப்போது உன்னிடம் ஐந்து கல்குலேட்டர்கள் உள்ளன. இதில் நான் மூன்றை எடுத்தால் மீதி என்ன?' என்று கேட்ட போது பிள்ளை முழிக்கிறது. காரணம் பிள்ளையிடம் கல்குலேட்டர் இல்லை.

ஆனால் பின்னாளில்




கல்குலேட்டர்களை பரீட்சைகளின் போது பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

கல்குலேட்டர்கள் அளவில் கம்பியூட்டர்களை உருவாக்கும் நோக்கில் நிறுவனங்கள் செயற்பட்டன. இதனால் கைக்கடக்கமான அளவில் தொலைபேசி இலக்கங்களையும் வேறு தரவுகளையும் ஞாபகத்தில் வைத்திருக்கும் 'ஞாபகத்திறன்' Memory யை வைத்து இந்த ஆரம்ப கம்பியூட்டர்கள் செய்யப்பட்டன.

இவை விஞ்ஞான ரீதியாக சிக்கலான பல கணிப்பீடுகளை செய்ய உதவின. பின்னர் ஷார்ப், கஸியோ போன்ற நிறுவனங்கள் இந்த 'குட்டிக் கம்பியூட்டர்களில்' அகராதிகள் போன்ற அதிகளவு விடயங்களை ஒரு 'கார்ட்டில்' இலத்திரனியல் முறையில் எழுதி அவற்றை இந்த கம்பியூட்டர்களில் உட்செலுத்துவதன் மூலம் அவற்றின் பயன்பாடுகளை பரவலாக்கின. ஷார்ப் நிறுவனத்தின் Wizard ரக கம்பியூட்டர்கள் இந்த வகையிலானவை. அதன் ஒவ்வொரு விசேட செயற்பாட்டுக்கும் அதற்கென விசேடமான கார்ட்கள் விற்பனையாகின்றன. அவற்றை வாங்கிப் பொருத்துவதன் மூலம் அந்த விசேட செயற்பாடுகளின் பயன்பாடுகளைப் பெற முடியும்.

கைக்கடக்கமான கம்பியூட்டர்கள் வந்த போதும் அவற்றில் keyboard சிறியதாய் இருப்பதால் இலகுவாக எழுத்துக்களை டைப் செய்ய முடியாத அசௌகரியம் ஏற்பட்டது. இதனால் பேனா மூலம் எழுதுவதன் மூலம் காரியமாற்றக் கூடிய pen based கம்பியூட்டர்கள் உருவாகின.

இந்த வரிசையில் இப்போது அப்பிள் நிறுவனம் நியூட்டன் எனப்படும் PDA ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. Personal Digital Assistant எனப்படும் இந்த கருவியை இந்த வாரம் ரொறன்ரோவில் நடைபெற்ற MacWorld வர்த்தகக் கண்காட்சியில் காண நேர்ந்தது. கல்குலேட்டர் அளவில் காணப்படும் டி. வியின் தோற்ற அமைப்பு கொண்ட இந்தக் கருவிகள் வெறும் கணிப்பீடுகளுடன் இல்லாமல் பல்வேறு செயற்பாடுகளை ஆற்றும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக நீங்கள் நண்பர் ஒருவரின் தொலைபேசி இலக்கத்தை இந்த கருவியின் மேற்பகுதியில் பேனாவினால் எழுதும் போது அது தானாகவே உங்களின் எழுத்தை கிரகித்து அதை கம்பியூட்டரின் உள்வாங்கி ஞாபகத் திறனில் சேமித்துக் கொள்கிறது.

இதில் கலண்டர், தொலைபேசி அட்டவணை, செய்ய வேண்டிய விடயங்களின் அட்டவணை என பல விடயங்கள் சேமிக்கப்பட முடியும். அத்தோடு படங்களைக் கூட சேமிக்க முடியும். உதாரணமாக நண்பரின் விலாசம் தொலைபேசி இலக்கத்துடன் அவரது வீடு இருக்கும் வீதிப்படத்தையும் கீறி சேமிக்க முடியும். அத்தோடு பல எண்களின் மொத்தத் தொகையைக் கூட்ட வேண்டுமாயின் அந்த இலக்கங்களை எழுதி சக அடையாளம் இட்டதும் பதில் வருகிறது.

# இப்படியும் செய்திகள்

## ஜனமித்திரன்

*(1993 ஆகஸ்ட் 21 ம் திகதி மு.ப. 9:30 மணிக்கு அநுராதபுரம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அநுராதபுர மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின் விவகாரங்கள் பற்றி அதன் செயலாளரும் வட மத்திய மாகாண சபை சுகாதார, போக்குவரத்து, கலாச்சார அமைச்சருமான ஜயசேன திசாநாயக அவர்களால் ஐக்கிய தேசியக் கட்சியின் செயளாளர் நாயகத்துக்கு அனுப்பப்பட்ட அறிக்கையிலிருந்து எடுக்கப் பட்ட பகுதி.)*

தபால் தந்தி தொடர்பு அமைச்சர் திரு ஏ.எம்.எஸ். அதிகாரி அவர்கள் அநுராதபுர மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின்போது வட மத்திய மாகாணசபை முதலமைச்சர் திரு G.D மகிந்தசோமவைப் பார்த்து இவ்வாறு கூறினர்,

"மகிந்தசோமவுடன் ஒருகாலத்தில் நான் மிக நெருங்கிய நண்பனுக இருந்தேன். ஆனல் தற்போது அவ்வாறுன நட்பு எதுவும் இல்லே. இன்றிலிருந்து நான் சாகும் வரை மகிந்தசோம எனது வைரி. இந்தக் கோபம் இனி ஒரு நாளும் தணியப் போவதில்லே. இன்றைக்கோ நாளேக்கோ உன்னேயும் கொலே செய்து விட்டு பிரேமதாச போன உலகத்துக்கு நானும் போவேன்."

திரு அதிகாரி தனது உரையில் மேலும் இவ்வாறு கூறினர்:

"அன்று பலகைச் சோமே, மரக் குத்தி சோமே என்றெல்லாம் பிரதேச மக்களால் அழைக்கப்பட்ட மகிந்தசோமவை முதல் தடவையாக அரசியலுக்கு கொண்டு வந்ததும் முதலமைச்சர் பதவிக்கு பிரேரித்ததும் நானே தான். அப்படிச் செய்த என்னே அழிப்பதற்கு இன்று சதி செய்கின்றர். எனது மனேவி ராணி அதிகாரியை மாகாணசபைத் தேர்தலில் தோல்வி அடையச் செய்வதற்கும் சதி செய்தார். ராஜாங்கனேப் பிரதேசத்திலுள்ள பஹல மாரகஸ்வேவவைச் சார்ந்த கன்டமண் என்பவருக்கு என்னே கொலே செய்வதற்காக ஐம்பது இலட்சம் ருபாய் கொந்தராத்து வழங்கப்பட்டது. பொலீஸ் சேவையிலுள்ள ஒருவருக்கு அனுப்பப்பட்ட கடிதம் எனக்கு கிடைத்தது. அக்கடிதத்தின்படி சபையில் பொய் குழப்பம் ஒன்றை உண்டாக்கி "மிஸ் பயர்" மூலமாக எனது மனேவி ராணியையும் என்னேயும் கொலே செய்வதற்கு சதி செய்யப்பட்டது" எனக் கூறிய திரு.அதிகாரி கடிதத்தை சபையில் சமர்ப்பித்தார்.

அதற்குப் பின்னர் வடமத்திய மாகாண முதலமைச்சர் மகிந்தசோமாவின் ஊழல்களேப் பற்றியும் சட்ட விரோதச் செயல்களேப் பற்றியும் திரு அதிகாரி சபையில் கூறினர், இவற்றைக் கூறிய பின்னர் தன்வசமிருந்த பயணப் பையை கையில் எடுத்து அதற்குள் இருந்த இரண்டு பிஸ்டல்களேயும் எடுத்து மேசையில் வைத்து "நான் உன்னேக் கண்டு பயப்படவில்லே.. இன்றைக்கு சாவதற்குத் தான் வந்திருக்கிறேன்...... பொறுமைக்கும் ஒரு எல்லேயுண்டு.... உன்னேயும் கூட்டிக்கொண்டு பிரேமதாச போன உலகத்துக்கு போகத்தான் நான் வந்திருக்கிறேன்" எனக் கூறினர்.

அருகில் இருந்த திரு ஆரியதாச, திரு டயஸ் ஆகியோரது தலேயீட்டால் அதிகாரியிடமிருந்த இரண்டு பிஸ்டல்களும் பயணப் பையும் அகற்றப்பட்டன.

திரு அதிகாரியின் உரைக்குப் பின்னர் வடமத்திய மாகாண சபை முதலமைச்சர் திரு G.D. மகிந்தசோமவுக்கு கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதிலும் அவர் எதுவுமே கூறவில்லே.

(தகவல்: ராவய செப்டம்பர் 12, 1993)

---

### நியூட்டன்..

உங்களுக்கு வசதியாக கம்பியூட்டர் கீபோர்ட்டின் படமும் உள்ளே இருக்கிறது. அதில் உள்ள எழுத்துக்களே அழுத்துவதன் மூலமும் தரவுகளே உட்செலுத்தலாம்.

கம்பியூட்டர் போலவே இதற்கும் புரோகிராம்கள் விற்கப்படுகின்றன. இவை கார்ட்களில் உள்ளன. இந்த புரோகிராம்களின் உதவியுடன் படம் கீறவோ, கணிப்பீடுகளே செய்யவோ முடியும்.

இத்துடன் இந்த கருவிகளே பெரிய கம்பியூட்டர்களுடன் இணேத்து தகவல்களேப் பரிமாறவும் முடியும். கம்பியூட்டர் பிரிண்டர்களுடன் இணேத்து உங்கள் தரவுகளின் அச்சுப்பிரதியையும் பெற முடியும்.

இன்னெருவருக்கு அவசரமாக ஃபாக்ஸ் அனுப்ப வேண்டுமாயின் அதற்கான கருவியைப் பொருத்தி அனுப்பலாம். கம்பியூட்டர்கள் மூலமாக தகவல் அனுப்பும் E-mail முறை மூலம் தகவல்களே மற்றவர்களுக்கு அனுப்பலாம்.

நியூட்டன் கருவி அப்பிள் நிறுவனமும் ஜப்பானிய ஷார்ப் நிறுவனமும் சேர்ந்து தயாரித்தவை. தற்போது ஷார்ப் நிறுவனம் தனது கருவியை விரைவில் வெளியிட உள்ளது.

இதைப் போலவே கஸியோ நிறுவனமும் ராண்டி நிறுவனமும் Zoomer எனப்படும் கருவியை வெளியிட உள்ளன. இது நியூட்டன் போன்றே செயற்படும்.

AT&T நிறுவனம் EO Personal Communicator எனப்படும் கருவியை வெளியிட உள்ளது. இது நியூட்டனே விட அதிக செயற்பாடுகள் கொண்டது. இதில செலுலர் போன் வசதியும் உண்டு.

எதற்கும் ஒன்றை வாங்கி கையில் வைத்துக் கொள்ளுங்களேன். நானும் தான் பார்க்கிறேன்.. கல்யாண வீடுகளில் நடனமாடும் போது கூட ஸ்டைலாக செலுலர் போனில் பேசுபவர்களே... அவ்வப்போது இவ்வாறுன வேலேகளுக்கு.. உதவக் கூடும்.

**விஞ்ஞானப் பிரகாசன்**

# நல்ல நாள்



அனந்தன்

இன்று எனக்கு இன்டர்வியூ அவள், எனது மனைவி மல்லிகா, பரபரப்பாய் கிச்சினிற்குள்ளும் ஹாலிற்குள்ளும் ஓடித் திரிகிறாள்.. பின்னே இருக்காதா? மூன்று வயதில் ஒரு பையனைப் பெத்து வைத்திருந்தால் தான் உங்களிற்கும் புரியும். கொஞ்சம் அசந்தால் வீட்டையே தலைகீழாக்கிப் போடும் சாமர்த்தியம் (?) எங்கிருந்துதான் அவனிற்கு வந்ததோ தெரியவில்லை ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமான நிச்சயம் என்னிடமிருந்து அல்ல! நான் ஒரு அமைதிப் பிராணி சும்மா நானுண்டு என் வேலையுண்டு(?) என்று வீட்டோடையே இருப்பவன். அடுத்தாத்து பிரச்சனைகளை ரெலிபோனில் கதைப்பதற்கே அபலையாய் யோசிப்பவன் ரொம்பவும் சென்டிமென்ட் பாப்பவன் அதையும் விட சகுனம், வாரபலன் பத்திரிகைக்கு பத்திரிகை (ஒரே மாதிரி இல்லாவிட்டாலும் கூட) பார்த்து, அப்படியே நம்பியும் விடுபவன்.

சகுனம், சாஸ்திரம், எண் சோதிடம் எல்லாம் சும்மா மூடநம்பிக்கை என்று பேசிற கூட்டம் என்னைப் பார்த்து எள்ளி நகையாடுறது எனக்குப் புரியாமலில்லை. நான்கூட முன்பெல்லாம் நம்பாமல் கேலி செய்தவன்தான் வாழ்க்கையின் கோலம் மாறியதில், கோணங்கள் மாதிரித்தான் போய் விட்டன. வாழ்க்கை ஓட்டத்தில் அடிபட்டு, தெளிந்து, இப்ப அந்த நம்பிக்கைகளில் சீராய் வாழ்க்கையை ஓட்டுபவன்.

எனக்கு முன்பு, நடந்தவைகளையெல்லாம் கெட்ட கனுக்கள்தாம். சகுனம் பார்க்காமல் நான் பட்ட அவஸ்தைகளும், சாஸ்திரங்கள் பார்க்காமல் நான் பட்ட துன்பங்களும் சொல்லில் அடங்காது. எனக்கு மல்லிகா வாய்த்தது, நான் செய்த அதிஷ்டம்தான். அவள் மட்டும் கிடைத்திராமல் போயிருந்தால், இண்டைக்கு மட்டும் நான் இவற்றையெல்லாம் நம்பியிருக்கப் போறெதென்பது பொய்., முன்பு மாதிரியே "லோ, லோ" முக்கில அப்பின கதைதான்.

ஒரு சின்ன உதாரணம் சொல்லவேணும், போன கிழமையும் ஒரு இன்டர்வியூ, எனக்கு கனடா வந்து இரண்டு வருஷம் முடியப் போகுது. இன்னும் வேலையொன்று கிடைக்கவில்லையே என்ற மன உளைச்சலில எட்டாம் திகதியெண்டும் பாராமல் வெளிக்கிட்டு போனனான் மல்லிகா அப்பவும் சொன்னவள், எட்டில ஒண்டும் இந்த வீட்டிற்கு வேண்டாமென்று. நான் கடைசியில கெஞ்சி மண்டாடா குறையாய்தான் வெளிக்கிட்டுப் போனனான். என்ன நடந்தது? எட்டாம் திகதி விளையாட்டு எனக்கு மீண்டுமொருமுறை உண்மையாய்ப் போயிற்று. நான் இன்டர்வியூவிற்கு போய் கொண்டிருக்க சப்வே றெயின் அண்டைக்கெண்டு பாத்து ஒண்டரை மணித்தியாலம் இடையில Stop ஆய் போச்சு. பிறகு முடிவு நான் சொல்லத் தேவையில்லை.

வெளிக்கிடேக்கை எனக்கும் பெரிசாய் விருப்பமில்லைத்தான். ஆனாலும் இந்த ஊர் உலகத்தின்ரை கதைகேட்டு என்னுடை காது அவிஞ்சு போனதில, திகதி பாக்கிறதை மனமறிஞ்சு தவிர்த்தனான். எங்கு போனாலும், "என்ன, இன்னும் வேலையில்லையோ?" என்று இந்த ஏறி உழக்கும் சமுதாயச் சந்தையில நான் மிதிபட்டு ரணம்பட்டு போயிருந்தேன். அதனால்தான் என்ரை கலியாண வீட்டு கதையெல்லாம் சொல்லி மல்லிகாவை சமாளிச்சுப் போனனான்.

சொன்னா நம்ப மாட்டீங்கள், எனக்கு கலியாணம் நடந்தது ஒரு எட்டாம் திகதியிலதான். ஆனா அதில ஒரு விஷேசம் இருக்கு நான் தாலி கட்டேக்கை மணி பின்னேரம் மூண்டு ஆச்சு. அப்ப அமெரிக்காவிற்கும் எங்கடை நாட்டிற்குமிடையில் பத்து மணி நேர வித்தியாசம் அப்ப ஒன்பதாம் திகதி கணக்குத்தானே அதை விடவும் தமிழுக்கு அண்டைக்கு இருபத்தி நாலு அப்ப அதுவும் ஆறும் நம்பர்தானே. எங்கடை கலியாணம் திடீர் கலியாணம் எண்டதாலை, ஒண்டும் செய்யேலாமல் போச்சு, பிறகு ஒரு மாசச் சொச்சத்திற்கு ஒரு நாளும் இல்லை. ஒரு மாதம் பொறுக்கிறது பிரச்சனையல்ல, அடுத்த மாதம் மல்லிகாவிற்கு இருபத்தாறு தொடங்குது. அதுக்கு முன்னாலை கலியாணம் முடிய வேணும். இதெல்லாம் என்னுடைய ஐடியாக்களல்ல. எல்லாம் மல்லிகா வீட்டுக்காரர் இரவு பகலாய் சாஸ்திரிமாரிட்டை கதைத்து எடுத்த முடிவு. எனக்குத்தான் அந்த நேரத்தில உந்த நம்பிக்கைகளொண்டும் இல்லையெண்டு சொன்னனான்.

நான் சொல்ல வந்த விஷயத்தை விட்டிட்டு வேறுகதைகள் சொல்லிக் கொண்டிருந்தால், உங்களிற்கு போரடிக்கக்கூடும் அதனாலை விஷயத்திற்கு நேரேவருகிறேன். இன்றைக்கு ஆறும் திகதி பொதுவான நாள். ஆறும் திகதி girls ஐ ஒருமாதிரியெண்டு மல்லிகா சொல்விறவளெண்டாலும், மற்ற

விஷயங்களில் எனக்கு ஆறு o.k தான். பல நல்ல காரியங்கள் ஆறில்தான் எனக்கு நடந்திருக்கு உதாரணத்திற்கு எனக்கு லான்டட் பேப்பர் இங்கை கிடைச்சது ஒரு ஆறும் திகதியில்தான். இமிக்கிறேசனில் போய் ஒரு பதினைந்து நிமிடத்தில் பேப்பர் கையில தந்திட்டாங்களெண்டா நம்ப மாட்டீங்கள். ஆனா உண்மை அதுதான் ராஜ மரியாதையோடை இருக்க வைச்சு ஒரு கேள்வி கிடையாது. கையை குலுக்கி Good luck என்று அந்த வெள்ளைக்காரி officer சொல்லி விட மகா சந்தோஷமாயிருந்தது. இதே என்ரை மச்சான் இரண்டு நாள் கழிஞ்சு இருபத்தாறில போனவர் மச்சான் வந்து எனக்கு சொன்னார், இவங்கள் லான்டட் தந்திருக்காட்டியும் பரவாயில்லை, தன்னை திருப்பி அனுப்பி யிருக்கலாமெண்டு. ஊரிலை ஆமி பிடிச்சாலே கேளாத ஊத்தைக் கேள்வியெல்லாம் கேட்டு துளைச்செடுத்துப் போட்டாங்களெண்டு மச்சான் அழுது வடிச்சது பாவமாயிருந்தது எனக்கு. நம்பருகளிலை விஷயம் இல்லாமலில்லை பாருங்கோ.

ராகுகாலம் முடிய இன்னமும் முப்பது நிமிடம் இருக்குது மல்லிகா கிச்சினிற்குள் ஏதோ செய்து கொண்டிருக்க, மகன் நடு ஹாலிற்குள் ரயில் பெட்டி தள்ளிக் கொண்டிருந்தான். நான் றிமோட்டை எடுத்து T.V ஐ ஒன் பண்ணி, வெதர் போற சனலில் விட்டிட்டு சோபாவில் சாய்ந்து மெதுவாய் இருந்தேன். T.V யின் சத்தத்தை முழுவதும் குறைத்து விட்டிற்று, T.M.S இன் பழைய பக்திப் பாடலை ரேடியோவின் கசற் பிளேயருக்குள் செருகி, தட்டி விட்டேன். இந்தப் பக்திப்பாடல்களில் ஒரு பரமசுகம் இருக்கிறது பாருங்கோ அதை அனுபவிச்சாத்தான் தெரியும் முந்தி முந்தி நானும் கறுவலுகளின்ரை, "ya man,ya man" எண்டதை மாத்திரமே பாட்டாக்கி விட அதைக் கேட்பதே பரமசுகமாகி துள்ளிக் கொண்டு திரிந்தவன்தான். இப்பத்தைப் பெடியளிற்கு சொன்னாப் புரியாது. என்னைமாதிரி அனுபவத்தில் கண்டு, ஒய்ந்து, இந்த நிலைமைக்கு வந்தால்தான் இவையெல்லாம் புரியும்.

"இஞ்சேருங்கோ, போய் சுவாமி கும்பிட்டுட்டு வந்து சாப்பிட்டுற்று இருங்கோவன். நேரமாகிக் கொண்டிருக்கெல்லே"

மல்லிகாதான் கூப்பிடுகிறாள் நான் எழும்பி சுவாமிப் படத்திற்குப் போய், கண்மூடி தியானித்து திருநீறு பூசினேன் இன்றைக்காகுதல் வேலை கிடைக்க வேணும்.

"அப்பனே சிவனே, முருகா பிள்ளையாரே, சரஸ்வதி, லஷ்சுமி....."

கண்களைத் திறந்து மீண்டுமொரு முறையாய் எல்லாப் படங்களையும் மெதுவாக குவிந்திருந்த எனது விரல்களால் தொட்டு, கண்ணுக்குள் ஒற்றிக் கொண்டேன். இருக்கும் தெய்வப் படங்களில் ஒன்றைக்கூட தவற விடக்கூடாது என மல்லிகா அடிக்கடி சொல்லுவாள். ஒன்றைத் தொட்டு ஒன்றை விட்டு விட, தெய்வப்பழி வந்து விடுமென்று மல்லிகா சொல்லுவதிலொன்றும் ஞாயம் இருக்காமல் போகாதுதான்.

தெய்வ வழிபாடு முடிந்து, சாப்பிட்டுமாயிற்று. இன்னமும் கால் மணி நேரமிருந்து புறப்பட்டாலும், நேரத்திற்கே போய்விடலாம்., அதிகம் தூரமில்லை, டவுன் ரவுன்தான்.

பைலை எடுத்து வந்து சரிபார்த்துக் கொண்டேன். இரண்டு முழுப் பக்கங்களில் ரெசுமி, கொம்பியூட்டர் பிறின்ட் ஊரில யூனிவாசிற்றி, பிறகு எக்கவுண்டன்சி, பிறகு அமெரிக்காவில் CMA Second Part மட்டும் முடித்தது, கனேடிய இவாலுவேசன், என்னுடைய social activities,........ இத்யாதிகள். உந்தக் club உகள், social சம்பந்தப் பட்ட விஷயங்களில் எனக்கு அவளவாய் நாட்டமில்லை. இருந்தும் இங்கை வேலைக்கு இவைகளெல்லாம் கூட பாக்கிறாங்களெண்டதாலை சும்மா இங்கை இருக்கிற தமிழ் சங்கமோ, கிளப்போ ஒன்றிரண்டிலையும் ஒரு golf club இலயும் சேர்ந்து mebership எடுத்ததோடை சரி. எல்லாம் மல்லிகாவின் ஐடியாக்கள் தான் அவள் ஐஞ்சாம் நம்பர்காரி. உந்த பிசினஸ் மூளையெல்லாம் அவளிற்கு நல்லாய் ஒடும்.

நேரம் எட்டு நாற்பது காட்ட, நான் மல்லிகாவைக் கூப்பிட்டேன்.

"இஞ்சேரும், கலண்டரைப் பார்த்து நல்ல நேரம் தொடங்கிவிட்டதோ என்று சொல்லும்" என்றேன்.

அவள் கலண்டர் பார்த்தாள்.

"ஒமப்பா, இப்ப நேரம்தான் இப்ப வெளிக்கிட்டாதான் போய்ச் சேர சரியாயிருக்கும்" என்றாள்.

நான் பைலைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டேன். வாசல் கதவுவரை மல்லிகா பின்னால் வந்தாள். நான் மகனிற்கு "பை" சொல்லி விட்டு "போயிற்று வாறேன்" என்றேன்.

"இண்டைக்கு நேரமும் நாளும் நல்லாயிருக்கு. இந்த வேலை எப்படியும் உங்களிற்கு கிடைச்சிடும்" என்றாள்.

நான் தலையாட்டி விட்டு புறப்பட்டேன். மல்லிகா சொன்னதைப் போலவே எனக்குந்தான் இன்று வேலை கிடைக்குமென்பதில் கொஞ்சம் அதிக நம்பிக்கையாயிருந்தது. இந்தமாதிரி நாளும் நேரமும் ஒன்றாய் எல்லா இன்டர்வியூவிற்கும் அமைந்த தில்லைதான்.

டவுன் ரவுனிலிருக்கும் அந்த சிறிய அலுவலகத்திற்கு நான் போய் சேர்ந்தபோது ஒன்பது முப்பது. பஸ் stop இற்கு போய் சேர பஸ்சும், சப்வேயில் இறங்க றெயின் வந்து கதவு திறக்கவும் சரியாயிருந்ததில், சிறிது நேரத்திற்கே வந்து விட்டேன். இவையெல்லாம் நல்ல நாட்களின் பலன்கள்தானே என நான் நினைத்துக் கொண்டேன்.

சிறியதாயிருந்த அந்த அலுவலகத்தில் ஒரு பதினைந்து பேர் வரை வேலை செய்யக்கூடும் போல தெரிந்தது. நான் வரவேற்பில் இருந்து அந்த வெள்ளைக்காரப் பெண்ணிடம் போய் அப்பொயின்றமென்ற் இருப்பதைச் சொல்ல, அவளும் ஒரு சோபாவிள் இருக்கும்படி கூறிவிட்டு உள்ளே போய், சிறிது நேரத்தில் திரும்பி வந்தாள்.

"In a mintue manager will see you" என்று விட்டு போனாள்.

நான் என்னை தயார் செய்து கொண்டேன். மனசு சிறிது அடித்துக் கொண்டாலும் நான் பதட்டப்படவில்லை. இன்று நல்ல நாள், எப்படியும் இந்த வேலை கிடைக்கத்தான் போகிறது என அடிமனம் எனக்கு

சொல்லிக் கொண்டிருந்தது. ஐந்து நிமிடமளவில், மனேஜர் என்னிடம் வந்தார்.

"Hello, I am singh. How do You do" என்று கைகுலுக்கினுர் மனேஜர் இந்தியன் என்றதில் எனக்கு மனசிற்கு தெம்பு கூடிற்று. தலைப்பா கட்டியிருக்கும் இந்திய மனேஜர்!

"Let's go to my office" என்று போக நான் பின்தொடர்ந்தேன். அவரது office சிறியதாயிருக்க, மூலையில் ஒரு சுவாமிப்படம் தொங்கியது. தெய்வ நம்பிக்கையுள்ளவர் போலும் என நான் நினைத்துக் கொண்டேன். எதிரேயிருந்த கதிரையைக் காட்டி இருக்கச் சொல்ல நான் இருந்து கொண்டேன்.

"you're orignally from .........?" என கேட்க நான் சொன்னேன். உத்தியோகப்பூர்வ சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு சிறிது சிந்திப்பவர் போல காணப்பட்டார். பிறகு என்னை சங்கடமாக்கிய கேள்வியொன்றை கேட்டார்.

"If you dont mind can I ask you you something personal" என நான் தலையாட்டினேன்.

"Do you believe in any superstition?" என நான் குழப்பமாகிப் போனேன். ஓமென்பதா, இல்லையென்பதா என எனக்குள் முழிப்பாய் போயிற்று. என்ன பதில் சொல்வதென்பதில் ஒருகணம் நான் குழம்பிப் போனேன். மறுகணம் பொய் சொல்வதென எனக்குள் முடிவாயிற்று. என்ன நடந்தாலும் பரவாயில்லையென தீர்மானித்தபடி "No. I don't" என்றேன். மனேஜரின் முகத்தில் மலர்ச்சி தோன்றி மறைந்தது, மனசிற்கு தெம்பாகிப் போனது ஒரு அரை நிமிடம் யோசித்து விட்டு, "that's very good" என்ருர். "அப்பா பிள்ளையாரே" என எனக்கு மனசு சாந்தமாயிற்று.

சாந்தமடைந்த எனது மனசின் சாந்தம் ஒரு அரை நிமிடம் தானும் நீடிக்கவில்லை, ஒரு அரை நிமிடமளவில் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மனேஜர் சொன்னது இடியாய் வந்து என் தலையில் இறங்கிற்று.

"you see, its good that you dont belive these things but I have to tell you that I have some believes myself" என்று விட்டு என்னைப் பார்த்து சிரித்தார். நான் பதிலிற்கு சிரித்தேன். நான் கூட இவற்றையெல்லாம் நம்புபவன். ஏன் இந்த இன்டரவியூவிற்குக் கூடதான் நான் நேரம் பார்த்துத்தான் வந்தேன் என சொல்லி விடலாமா என மனசு ஒரு கணம் சஞ்சலப்பட்டு, பொய் சொன்னது பிடிபட்டுப் போய் விடுமேயென்பதில் மாறிக் கொண்டது. நான் நம்புவதில்லையென்று சொன்னுலென்ன, எனது தகுதிகளிற்கு இந்த வேலை பொருத்தமானதுதானே, அதை விடவும் இன்று அதிசயமான நல்ல நாள். எனக்கு இந்த வேலை கிடைப்பது நிச்சயம்தான் என மனசு கலக்கம் விட்டு தெம்படைய, நான் மனேஜரை பார்த்து,"It's o.k with me" என்று விட்டு சிரித்தேன்

அவர் "Thanks" என்றுர் அமைதியாக. நான் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்., யோசிப்பவன்போல

பிறகு அவர் சொன்னவற்றையெல்லாம் உங்களிற்கு சொல்லுவதற்கு முன்னுல் எனக்கு தலையிடி பிடித்துக் கொண்டது தவிர்க்க முடியவில்லை. அவரது நம்பிக்கைகளில் இன்றும், நாளையும் கூடாத நாட்களாம், வியாபாரத்தில் எதுவும் புதிதாய் தொடங்குவதில்லையாம் அவரது செக்கிரட்டரி அவரைக் கேளாமல் அப்பொயிண்ட்மென்ற் தந்து விட்டாளாம் எனவே, இன்றும் நாளையும் அவரால் புதிதாய் வேலைக்கு எடுக்கும் நல்ல காரியம் செய்ய முடியாதாம். இரண்டு நாள் கழித்து எட்டாம் திகதி வரும்படியும், என்னை முதலாவதாகப் பார்ப்பதாயும் சொன்னுர்.

எட்டாம் திகதி, எட்டாம் திகதி, எட்டாம் திகதி!

எனக்கு தலைவெடிக்கும் போலிருந்தது எட்டாம் திகதி எனக்கு, என் மனைவிக்கு பிடிக்காத, கூடாத நாள் என சொல்ல முடியவில்லை, நான்தான் பொய் சொல்லி பாவியாகிவிட்டேன்.

"I am really sorry about this inconvenience. I'll see you on 8th" என்று கையை நீட்டினுர். நான் கையை குலுக்கி விட்டு புறப்பட்டேன். அவர் போனெடுத்து அப்பொயின்ற் மொன்றை கொம்பனிக் கார்டில் எழுதிக் கொடுக்கும்படி செக்கிரட்டரிக்கு சொல்லிக் கொண்டிருக்க, நான் வெளியில் சோர்ந்து போய் வந்தேன்.


எனக்கு இன்று மிகவும் நல்ல நாள். இந்த வேலை இன்று கிடைக்கவில்லையென்பது, சிலவேளை களில், இல்லை, நிச்சயமாக எனது நன்மைக்காய் தானிருக்கும். சிந்தித்தபடியே நான் வாசல் கதவை திறக்க செக்கிரட்டரி கூப்பிட்டாள். "Sir here is your appointment card" அவள் சொன்னது நான் சாத்தி விட்ட கதவுகளிற்குள் அடைபட்டு போனதை நான் பொருட்படுத்தவேயில்லை!

## விமர்சனத்தகைமை...

துறையில் ஓங்கியிருந்த காலம் அது. இன்னமும் அப்போக்கு ஓழியவில்லை இவ்வாருன போக்கை இன்று புலம்பெயர்ந்தோர் மத்தியிற் காணமுடிகிறது. இலங்கையில், விலக்காக ஒரு சிலர் போக, வளர்ச்சிபெற்று வந்த விஷயச்சார்பான விமர்சனப் பார்வையைப் புலம்பெயர்ந்தோர் ஏடுகளிற் காண்பது அரிதாகவுள்ளது. பரஸ்பர முதுகு சொறிதலும் படைப்பாளியை மனதிற் கொண்டு படைப்பைப் பழிப்பதும் பரவலாகக் காணக்கூடியன இப் பண்புகள் விமர்சகத் தகைமைக்குத் தீங்கானவை.

பன்னிரண்டு வருடங்கள் முன்பு "அலை"யில் வந்த ஒரு விவாதத்தின் போக்கிற் சொல்ல நேர்ந்த கருத்தையே இன்றும் வலியுறுத்த விரும்புகிறேன். நம்மிடையே நூற்றுக்கணக்கான விமர்சகர்கள் வேண்டும். ஒவ்வொரு வாசகரும் ரசிகரும் தம்முன் வைக்கப்படுவனவற்றைத் தரம் பிரிக்கவும் மதிப்பிடவும் ஆற்றல் பெற வேண்டும். நம் ஒவ்வொருவரதும் விமர்சன ஆற்றலும் காய்தல் உதவத்தலின்றிக் கருத்துரைக்கும் நெஞ்சுரமும் ஊக்குவிக்கப்படவேண்டும். அரசியல்வாதிகளே அரசியலைப் பெருமளவுக்கும் விமர்சிக்கும் நிலைமையை நாம் நீண்ட காலமாக அனுமதித்துள்ளோம். அதன் விளைவாகவே நம்மிடையே ஒரு விதமான செம்மறிப்போக்கு உருவாகியுள்ளது. இதனின்று நாம் விடுபடவேண்டும். "எல்லாமே விமர்சனத்துக்குரியன, எவருமே விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவரல்லர், எல்லாருக்கும் விமர்சிக்கும் உரிமை இருக்கிறது." என்பதை நாம் சகல துறைகட்கும் ஏற்புடைய பொது விதியாக்க வேண்டும்

# “இது புனிதமானது சுத்தம் அவசியம்”



## சிவப்பிரகாசம்

கோவில்களைப் பற்றியும் இந்து மதம் பற்றியும் சிலவாரங்களாக "தாயகத்தில்" அடிக்கடி வருவது பலருக்கு அதிருப்தியை அளித்திருக்கிறது. இந்து மதக் கருத்துகள் வாதப்பிரதி வாதங்களிலும் விமர்சனங்களினாலும் செப்பனிடப்பட்டிருந்தும் இன்றைய மதவாதிகள் தமது மதத்தைப் பற்றியோ வழிநடத்துனர்கள் பற்றியோ எழுதப்படுவதை கிஞ்சித்தும் ஏற்பதாய் இல்லை. அன்று நாயன்மார்கள் சமணர்களுடனும் புத்தர்களுடனும் வாதாடியதும் ஆறுமுகநாவலர் போன்றவர்கள் கிறிஸ்தவ சமய தத்துவங்களுடனும் முரண்பட்டுக் கொண்டதும் பலர் அறியாதிருக்கலாம். இந்த எதிர்வாதங்களால் இந்து மதத்தில் உள்ள பல விஷயங்கள் தெளிவாகியது. இந்து மதத்தின் உட்பிரிவுகளான வைஷ்ணவம், வீரசைவம் சித்தாந்தம் மாயாவாதம் போன்றவைகள் அடிக்கடி எழுந்த வாதப்பிரதிவாதங்களால் மேலும் புடம் போட்டன. அந்தக்காலத்தில் ஏற்பட்ட விமர்சனங்கள் தத்துவம் பற்றியது. அப்போது மதத்தின் நோக்கம் பக்தர்களினால் ஓரளவு தெளிவாக அறியப்பட்டிருந்ததே அதற்கான காரணம். இப்போது இந்துக்கள் என உள்ளவர்கள் உண்மையிலே பௌராணிகர்களே. அதாவது புராணக் கதையை மையமாக வைத்து எழுந்த நம்பிக்கையின் பாற்பட்டவர்களே. இந்து மதத்தின் பொருள் புதைந்த உண்மைகள் இவர்கள் அறிய முற்படாமையே வேற்று மதத்தினருடனும் உள்ளுக்குள்ளே தமக்குள்ளேயும் பொருதிக் கொள்வதற்கு மூல காரணம்.

கோவில் என்பது மனத்தை ஒருநிலைப்படுத்தி இறைவனைத் தியானிப்பதற்குரிய இடமாக மட்டுமன்றி பலரும் கூடி சந்திக்கும் ஒரு பொது இடமாகவும் விளங்குகிறது.. இதனால்தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என அன்றைய பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வளவு பணத்தை கோவில் என்ற பெயரில் வீணடிக்கவேண்டுமா? என்ற பகுத்தறிவுவாதிகளின் கருத்து எம்மால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோவில்களும் அதனுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களும் மக்களின் விருப்பத்தின் பேரினால் எழுந்தமையால் அவை உதாசீனம் செய்யப்படக் கூடியவை அல்ல. பொன்னையும் பொருளையும் மட்டுமன்றி தமது வாழ்க்கையையே கோவிலுக்காக அர்ப்பணித்தவர்களும் இருக்கிறார்கள். இது பைத்தியக்காரத்தனம் போல தெரிகிறதா? அர்ப்பணிப்பும் அதனால் உண்டாகும் மனநிறைவும் எழுதி உணரவைக்கக்கூடியவை அல்ல. ஒரு துண்டு கௌபீனத்துடன் சருகையும் காற்றையும் மட்டும் உட்கொண்ட வண்ணம் காட்டிலும் மலையிலும் இப்போதும் பாரத நாட்டில் சிலர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கந்தசஷ்டியின் போது வெறும் நீராகத்துடன் செல்வச்சன்னதி மடத்தில் மண்தரையில் படுத்தே விரதம் அனுஷ்டிப்பவர்களை கண்டிருக்கிறோம். இவர்கள் எல்லாம் பைத்தியக்காரர்கள் அல்ல. நம்பிக்கையின் அத்திவாரத்தில் எழுந்தது தான் பக்தி. இந்த நம்பிக்கையை தமக்கு சாதகமாக சிலர் உபயோகிப்பது ஒரு பாவ காரியம். இந்தப் பாவ காரியங்களை எவர் செய்தாலும் அதை தட்டிக் கேட்க அடியார்கள் விரும்பாவிடினும் சமூக முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர்கள் கட்டாயம் வினவத்தான் வேண்டும். எவருமே கண்டுகொள்ள மாட்டார்கள் என்றால் தவறு செய்பவர்கள் தொடர்ந்தும் செய்து கொண்டுதான் இருப்பார்கள்.

"தாயகம்" இதைப் பற்றி எழுதிய போது இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என ஒரு கேள்வி பிறக்கிறது. ஏய்ப்புகள் ஏமாற்றுகள் எங்கே நடந்தாலும் அதை கேட்க, சுட்டிக்காட்ட எந்த ஒரு மனிதனுக்கும் உரிமை இருக்கிறது. மதம் என்று பலகை தொங்க விடப்பட்டால் உள்ளே எவரும் எட்டிப்பார்க்க கூடாதா? இங்கு நடைபெறும் சின்னத்தனமான செயல்களை பார்த்தால் நினைத்தால் வெட்கமாக இருக்கிறது. இதனால்தான் என்னவோ பலரும் எதையும் காணவோ கேட்கவோ விரும்புவதில்லை. "இவங்கள் என்னத்தையும் செய்துட்டு போகட்டும். கும்பிட வசதியிருந்தால் காணும்" என்பதே பலரின் நிலை.

ஆனால் மதத்தின் பெயரைச் சொல்லி வாராவாரம் துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்துகொண்டு இருக்கிறது. அதில் வெறும் பொய்களை எழுதுவது மட்டுமல்லாமல் பக்தர்களை மிகக் கேவலமாக நினைத்து ஏய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கோவிலில் ஒரு துண்டுப்பிரசுரம் வைக்கப்பட்டிருந்தது. அதில் மற்றொரு கோவிலில் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறவிருப்பதாக நேரகாலம் எல்லாம் போட்டு எழுதியிருந்தது. கோவில் கூட்டத்தில் ஏதாவது நல்ல விஷயமாக இருக்குமென நினைத்துச் சென்றால் அந்தக் கோவிலைச் சேர்ந்தவர்கள் தாம் ஏதும் அப்படி துண்டுப்பிரசுரம் வெளியிடவில்லை என்று சொன்னார்கள். அன்று கூட்டம் நடைபெறும் என்று நம்பி வந்தவர்கள் ஏமாந்து சென்றனர். அவ்வாறாயின் அந்த துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டது யார்? எந்தவொரு பாவமும் அறியாத பக்தர்களை இப்படி ஏய்ப்பது யார்? இதற்கான பதிலை என்றைக்குமே நாம் பெற்றுக்கொள்ள முடியாது.

சில வாரங்களின் முன் இரண்டு துண்டுப்பிரசுரங்கள் ஒன்றாக பலருக்கும் விநியோகம் செய்யப்பட்டது. ஒன்றில் கோவில் அர்ச்சகர் ஒருவர் வீட்டில் பல இலட்சம் காசுகளை பொலிசார் கைப்பற்றி உள்ளதாகவும் அவர் கைது செய்யப்பட்டார் எனவும் இருந்தது. ஆனால் அப்படி எதுவும் நடந்ததாக எந்தவொரு பத்திரிகையிலும் வரவும் இல்லை. அந்த அர்ச்சகர் தொடர்ந்து

கோவிலில் பூசை செய்து கொண்டுதான் இருக்கிருர். அதே துண்டுப்பிரசுரத்தில் அந்த அர்ச்சகருக்கு மொழிப்பெயர்ப்பாளராய் இருந்த காரணத்துக்காக இன்னெருவரை துாற்றியது மட்டுமன்றி அவரின் உறவினரான முதுபெரும் அமைச்சரையும் இழிவுபடுத்தி எழுதியிருந்தார்கள். இதைப் படித்து பார்த்தபோது மிக மனவருத்தமாய் இருந்தது. என்ன காரணத்துக்காக இந்த துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது என்பதுவும் மர்மமாகவே உள்ளது. அர்ச்சகரின்மீது தவறு இருப்பதை மக்களுக்கு எடுத்துக்காட்ட விரும்பினுல் ஏன் பொய்யை எழுதவேண்டும்? அர்ச்சகருடன் ஒத்துழைத்தமைக்காக மற்றவர்களேயும் அவர்களின் உறவினர்களேயு,ம் அந்த உறவினர்களின் இனத்துக்கான பணியையும் கேவலப்படுத்தலாமா? இதையெல்லாம் மதத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு செய்கிருர்கள். இது மதத்தையே அவமானப்படுத்துவதற்கு ஓப்பானதல்லவா. உண்மையை சொல்லி உண்மையை எழுதி நல்லதைச் செய்வதைவிட்டு பொய்யின் துணையை ஏன் நாடவேண்டும்?

கனடாவிலும் இந்து மதத்தை பேணிக் காப்பாற்ற வேண்டும் என அறைகூவல் விட்டு சில பெரியோர்கள் மன்றம் ஒன்று அமைக்க கூட்டம் கூடினுர்கள். இதன் நல்ல நோக்கத்துக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என எண்ணி போனுல் ஏமாற்றமே அங்கும். கூட்டம் நடந்தது. பதவிகள் தெரிவு செய்யப்பட்டன. எல்லோரும் கல்விமான்கள். திடீரென்று ஒருவர் மேடையில் வந்து அந்த கூட்டத்தில் நடந்ததை வெளியில் ஜயரிடம் சொன்னுல் ஏதோ செய்து விடுவதாக சொல்லி மிரட்டினர். பொதுமக்களே வரவழைத்து இந்து மன்றம் அமைப்பது நோக்கம் எனச் சொல்லிவிட்டு இப்படி செய்கிருர்களே என மனம் நொந்து கொள்வதை மட்டும் எம்மால் செய்யமுடியும்.. இவர்கள் கூட பக்தர்களுக்கு பொதுமக்களுக்கு என்ன மரியாதை தந்திருக்கிருர்கள்? பிராமணர்களின் கொட்டத்தை அடக்கவேண்டும் என பெரியவர் ஒருவர் கூறினுர். பிராமணர்களே துாக்கி வைத்திருப்பது யார்? இந்தியா விலிருந்தும் இலங்கையில் இருந்தும் இவர்களே இறக்குமதி செய்தது யார்? இவர்கள் சொல்வதைப் பார்த்தால் பிராமணர்கள் எங்களுக்கு கூலிக்காரர் என்பது போலிருக்கிறது. இனி எங்களது பெயரைச் சொல்லி இவர்கள் செய்யப்போகும் காரியங்கள் எல்லா வற்றுக்கும் இந்துமதம் பொறுப்பேற்க வேண்டும் என்பது நியதியோ!

இந்துமக்களுக்கான மன்றம் தொடங்கி சில நாட்களில் மன்றத்தின் தலேவரின் பெயருடன் இன்னெரு துண்டுப்பிரசுரம் கிடைத்தது. அர்ச்சகர் பற்றி அவதூருன விஷயங்களுடன் வந்த பிரசுரத்துக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லேயென்றும் அவ்வாருன அவதூறுகளில் எவ்வித உண்மையும் இல்லேயென்று கூறப்பட்டிருந்தது. பின்னர் சில நாட்களில் அவரின் பெயரில் வந்த வேருெரு பிரசுரத்தில் முன்பு தன் பெயரில் எழுதப்பட்ட அறிவித்தல் உண்மையில் தன்னுல் எழுதப்படவில்லே என அதில் இருந்தது. பின் சில தினங்களில் அந்த மன்றத்தின் தலேவர் இராஜினுமா செய்ததாக அறிவித்தல். எத்தனேயோ பல பதவிகளில் இருந்து "நற்பணிகள்" செய்த இந்த தலேவருக்கும் அப்படி நெருக்கடியான நிலேமை என்று பேசப்படுகிறது. இப்போது கிடைக்கும் தகவல்களில் இருந்து அந்த இரண்டு பிரசுரங்களும் அவரால் எழுதப்பட வில்லேயாம். இது உங்களுக்கு குழப்பமாக இல்லே? இவை எல்லாம் மதத்தின் பெயரால் நடக்கும் திருக்கூத்துகள். இது வாராவாரம் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இப்போது சொல்லுங்கள் இதைப் பார்த்துக்கொண்டு வாளாவி ருக்கலாமா?

சில வாரங்களின் முன் கோயில் குருக்கள் ஒருவர் பற்றிப் பேசப்படும் சில அபிப்பிராயங்கள் பற்றி எழுதி அவை ஆராயப்படவேண்டியவை என "தாயகத்தில்" எழுதப்பட்டது. இவ்வாருன அபிப்பிராயங்கள் நிலவுகின்றது என்பதை சுட்டிக்காட்டி அது உண்மையானுல் அவர் திருத்திக்கொள்ள வேண்டும் என்பதே நோக்கம். ஒரு தனி நபரை வைதல் நோக்கமல்ல. தனிநபரின் மீது மக்கள் மத்தியில் குற்றப்பத்திரிகை நீண்டு கொண்டு சென்ருலும் (அது உண்மையோ பொய்யோ) அந்தக்கோவிலில் குற்றப்பத்திரிகை நீண்டு கொண்டு சென்ருலும் (அது உண்மையே பொய்யோ) அந்தக்கோவிலில் பூஜை புனஷ்காரங்கள் முறையாக நடப்பதாக சொல்லப்படுகிறது. கோவில் எந்த நோக்கத்துக்கு கட்டப்பட்டிருந்தாலும் அது பக்தர்களாகிய எமது அபிலாஷைகளே நிறைவேற்றி வைப்பதையே நாம் எதிர்பார்க்கிருேம்.

கோவிலின் துரிதவளர்ச்சியில் பொருமை கொண்ட சிலரின் திட்டமிட்ட துர்ப்பிரசாரமே இந்த அவதுாறுகளுக்கு காரணம் என கோவிலேச் சார்ந்தவர்கள் பேசிக்கொள்வதை நாம் உதாசீனம் செய்யவில்லே. உண்மையிலே அந்த அவதுாறுகள் பொய்யானதால் பக்தர்களாகிய எம் மனதில் குடைந்து கொண்டிருக்கும் இரணங்கள் மறைந்துவிடும். நிறைந்த மனத்துடன் கோவிலுக்கு போகிருேம் என்ற திருப்தி ஏற்படும். தன்மீது தவறில்லே, எல்லாமே வேண்டாதவர்களின் பிரச்சாரம் என கோவிலில் பிரதம குருவின் வாய்மொழி அறிக்கை வரவேற்கத்தக்கது. இது வெறும் வார்த்தையாக மட்டும் இல்லாமல் என்ன, எந்தக் கூத்தாய் இருந்தால் என்ன எம்மை எவரும் ஏய்க்காத வண்ணம் பார்த்துக் கொள்வது எம் கடமை. எவருக்காயினும் சரி ஆதரவுகளே பணமாக நல்கும் போது ஒரு முறைக்கு இரு முறை அது எங்கே செல்கிறது எனச் சிந்தித்து நம்பிக்கை ஏற்பட்டபின் நடைமுறைப் படுத்துங்கள். குளறுபடிகள் எங்கு நடப்பினும் எப்போ நடப்பினும் அதை சமுக நன்மைக்காய் அம்பலப்படுத்தும் நல்ல நோக்கத்தை "தாயகம்" போன்ற பத்திரிகைகளுக்கு வழங்க இறைவன் அருள்பாலிப்பாருக. கோவில் களுக்கு இடையில் ஏற்பட்ட வருமானப் போட்டிதான் இவையெல்லாவற்றுக்கும் பின்னணிக் காரணம் என சிலர் கதைப்பது வெறும் பொய் வதந்தியாக இருக்கவேண்டும் என்றே நம்புகிருேம். இந்து மதத்தின் தொன்மையும் புனிதமும் என்றும் காக்க அருள்பாலிக்குமாறு வரசித்திவிநாயகனே போற்றி வணங்குவோம்.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக் பெர்னாண்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

*1983 ஜூலையில் ஜேவிபியை தடை செய்தலும் தடைக்குப் பின்னர் செயல் முறைகளும்*

1983 ஜூலையில் இடம் பெற்ற வெறித்தன்மை கொண்ட தமிழர் விரோத கொடுமைகளை அரசாங்கமே வழி நடாத்தியது. இவ் வன்செயல்களின்போது சிறில் மத்தியூ முன்னணியிலிருந்தார். பௌத்த பிக்குகளாக தம்மை வெளிக்காட்டும் காவி அணிந்த ஒரு சில பிக்குகள் இக்கொடுமைகளின் போது முன்னணி வகித்ததின் மூலம் நேர்மையான பௌத்த குருமாருக்கு இழிவை தேடிக் கொடுத்தனர். சிறைக்கூடங்களில் பாதுகாப்பின் கீழ் இருந்த தமிழ்கைதிகள் தொகுதியாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் சிங்கள இனத்தவர் மீது முழு உலகத்தாரதும் வெறுப்பைச் சம்பாதித்தது. ஒரு தடவை அல்ல, இருதடவைகள் அவ்வாருன படுகொலைகள் சிறைச்சாலைக்குள் இடம்பெறும்போது ஆட்சியாளர் உறக்கத்தில் இருந்தனர். சிறைச்சாலைக்குள் கைதிகளை படுகொலை செய்த கொலைகாரர்களை கண்டு பிடிக்க அரசாங்கத்தால் இன்னமும் முடியவில்லை என்பதிலிருந்து இப்படுகொலைகளை ஆட்சியாளர் சகித்துக் கொண்டனர் என்பதே தெரிகிறது.

கறுப்பு ஜூலை என அழைக்கப்படும் இக் களங்கம் நிறைந்த சம்பவங்கள் உலகம் பூராவும் வெறுப்பையே ஏற்படுத்தின. நாகரீகமடைந்த ஒவ்வொரு மனிதனும் இச்சம்பவங்களைக் கண்டு வெறுப்படைந்தான். ஆட்சியாளரால் கட்டவிழ்த்துவிட்ட இனவாதம் என்னும் பூதத்தால் ஆட்சியாளருக்கே பிரச்சனை ஏற்பட்டது. அரசாங்கத்துக்கு அவசியப்பட்ட அளவையும் தாண்டி நிலமை மோசமடைந்தது.

வன்செயல்கள் தொடர்பான தமது பொறுப்புகளிலிருந்து தமது இருகரங்களையும் உடனடியாக துாய்மைப்படுத்தவேண்டிய நிலமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. ஜூலை வன்செயல்களுடன் தொடர்பானவர்கள் இவர்கள்தான் என மூன்று இடது சாரிக் கட்சிகளைச் சுட்டிக்காட்டி முழு உலகத்தையுமே சிரிக்க வைத்ததோடு அம் மூன்று கட்சிகள் மீது தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. 1983 ஜூலை 30 ம் திகதி விசேட வர்த்தமானி மூலமாக இத் தடை உத்தரவு அறிவிக்கப்பட்டது. ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, ஜனமா விமுக்தி பெரமுன ஆகிய மூன்றுமே இவ்வாறு தடைவிதிக்கப்பட்ட கட்சிகளாகும்.

இம் மூன்று கட்சிகள் மீதான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவைப் பேச்சாளர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தொலைக் காட்சி வானொலி மூலமாக உரையாற்றினர். இவரது உரையில் ஜூலை வன்செயல்கள் தொடர்பாக அரசாங்கத்தால் சோடிக்கப்பட்ட கதைகளை மக்களுக்கு கூறினர். ஜூலை சம்பவங்கள் வெறுமனே சிங்களவர் தமிழர்களுக்கிடையேயான கலவரம் என்பதை விட ஆழமான சதி எனக் கூறிய அவர் நன்ருக திட்டமிடப்பட்ட நான்கு கட்டங்களைக் கொண்டதே இச் சதி எனவும் கூறினர். முதலாவது கட்டமாக சிங்களவர் தமிழர் மத்தியிலான கலவரம் மூலமாக கொந்தளிப்பு நிலமையை ஏற்படுத்தல் இரண்டாவது கட்டமாக சிங்களவர் முஸ்லீம்களுக்கிடையே கலவரத்தை ஏற்படுத்தல் மூன்ருவது கட்டமாக சிங்களவர் மத்தியிலேயே பிளவுகளை ஏற்படுத்தல், நான்காவது கட்டமாக பாதுகாப்பு படையினர் மத்தியிலே பிளவை ஏற்படுத்தி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுதல் என்பதாகும். இச் சதிக்குப் பின்னுல் வெளிநாட்டுச் சக்திகள் செயல்படுவதாகவும் இக் கட்சிகள் வடக்கிலுள்ள பயங்கரவாதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தியுள்ளதாகவும் கூறிய திஸ்ஸ டி அல்விஸ் இச் சதிகாரர்கள் உணவு வினியோகத்திற்கு தடையை ஏற்படுத்தி கிளர்ச்சி செய்ய தயாராக இருந்ததாகவும் கூறினர். வதந்திகளைப் பரப்ப வேண்டாமெனவும் அமைதியாக இருந்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கத்துக்கு உதவி அளிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். சதியில் ஈடுபட்டவர்களே மாற்ருர் மீது சதிக்குற்றம் சுமத்தி சமாதானத்தை நிலைநாட்ட உதவுமாறு மக்களிடம் கோரினர். அதிக காலம் செல்ல முன்னரே கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி மீதான தடை நீக்கப்பட்டது. ஆனுல் ஜேவிபி மீதான தடை நீக்கப்படவில்லை. எதிர்காலத்தில் ஜேவிபியால் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம் எனக் கருதியது மட்டுமன்றி மேலும் அனேக துர்நோக்கங்களை மனதில் கொண்டே ஜேவிபி மீதான தடையை நீக்காதிருந்தனர்.

புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட பட்ட போதிலும் ஜேவிபி மீது தடைவிதிக்கப்படும்போது ஜேவிபி தனது வளர்ச்சிப் பாதையில் இக்கட்டான காலகட்டத்திலேயே பயணம் செய்து கொண்டிருந்தது. இக் காலகட்டத்தில் கட்சி ஏற்றத்தில் அல்ல, இறக்கத்திலேயே பயணம் செய்தது. தடை விதிக்கப்பட்டது இந் நிலமையை மேலும் தீவிரப்படுத்தியது.

பொதுசன தொடர்பு சாதனங்கள் மூலமாக தடை உத்தரவு பற்றி அறிவிக்கப் படும்போது விஜேவீர மொரட்டுவையில் இருந்தார். இவ் அறிவித்தல் காதில் விழுந்தவுடனேயே மொரட்டுவையில் இருந்து புறப்பட்டு தங்காலைக்குச் சென்று அங்கிருந்து தனமல்வில என்னும் இடத்துக்கும் அங்கிருந்து கித்துல்கோட்டேயில் உள்ள சேனைக்கும் சென்று அங்கு தங்கினர். பகிரங்கமாக வேலை செய்த காலங்களில் அடக்குமுறை பற்றி மோப்பம் பிடித்தவுடன் ஒரு சில பாதுகாப்பு பிரதேசங்களில் இவ்வாருன இடங்களை தயார் படுத்தியது பிற்காலத்தில் ஜேவிபி தலைவர்கள் ஒளிந்து கொள்வதற்கு பெரும் உதவியாக அமைந்தது ஏறக்குறைய முழு கட்சியுமே இக்காலகத்தில் மொனராகலை, அம்பாந்தோட்டை பதுளை ஆகிய பிரதேசங்களுக்கு பின் வாங்கியது. கமநாயக புத்தல என்னும் இடத்தில் சேனையொன்றில் மறைந்திருந்தார்.

அக்காலகட்டத்தில் ஜேவிபியின்

பொதுச் செயலாளராக இருந்த லயனல் போபகே அரசியல் குழு உறுப்பினர் சோமரத்ன களுஆராச்சி ஆகிய இருவரும் உட்பட ஜேவிபி ஊழியர்கள் ஆதரவாளர்கள் சுமார் 30 பேர் தடை விதிக்கப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டனர். ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அரசாங்கத்துக்கு அவசியமானவர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டனர். நவசமசமாஜக் கட்சித் தலைவர்கள் அகப்படாமல் தப்பித்துக் கொண்டு செயல்பட்டனர்.

கட்சித் தடைக்குப் பின்னர் ஜேவிபி யின் அனேக தொடர்புகள் சிதறிப் போயின. மத்திய கமிட்டியைச் சார்ந்த அம்பல மாகாத இரத்னயக, ஷெல்டன், ஜீவா ஆகிய மூவரும் 1983 ம் ஆண்டு ஆகஸ்ட் 02 ம் திகதி ஷெல்டனுடைய வீட்டில் கூடினர். ஏற்பட்டுள்ள நிலமைகளைப் பற்றி உரையாடியதோடு மறைந்திருக்கும் தலைவர்களின் ஆலோசனையைப் பெற்று வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்காக மாவட்டங்களை தமக்கிடையே பகிர்ந்து பொறுப்பேற்றனர். அம்பாறை, மொனராகலை, பதுளை, அம்பாந்தோட்டை. மாத்தறை இரத்தினபுரி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களை ஜீவாவும் கொழும்பு, கம்பஹ, களுத்துறை, காலி, புத்தளம் ஆகிய மாவட்டங்களை ஷெல்டனும் அநுராதபுரம், பொலன்நறுவை, திருகோணமலை, கண்டி, மாத்தளை, குருநாகலை ஆகிய மாவட்டங்களை இரத்னயகவும் என பொறுப்பேற்றனர். சகல அங்கத்தவர்களுடனும் தனித்தனி தொடர்புகளைப் பேணுவதாகவும் உயர்ந்த பட்சம் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுமாறு சகல ஊழியர்களுக்கும் அறிவிக்க வேண்டுமெனவும் தீர்மானித்தனர். எவ்வாறுயினும் தடை விதிக்கப்பட்டபின் ஜேவிபியின் செயற்பாடுகள் நீண்ட காலத்துக்கு தடைப்பட்டன.

தடைவிதிக்கப்பட்டு மூன்றுமாத காலத்திற்குப் பின்னர் விஜேவீர ஜனாதிபதி ஜெய்வர்தனவுக்கு கடிதமொன்றை அனுப்பினார், இக்கடிதத்தில் ஜேவிபி மீதான தடை அநீதியானதும், உண்மைக்குப் புறம்பான விபரங்களை அடிப்படையாகக் கொண்டது எனவும் குறிப்பிட்டதோடு, ஜூலை மாதம் இடம்பெற்ற அநாகரீக சம்பவங்களுக்கும ஜேவிபிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும், ஜேவிபிக்கும் ஜூலை இனக் கலவரத்துக்கும் இடையே தொடர்புண்டு, ஆயுதப் படையைச் சார்ந்தோரில் குறிப்பிட்ட சில பகுதியினரை அரசாங்கத்துக்கு எதிராக ஜேவிபி தூண்டியது, பொய்த் தகவல்களையும் வதந்திகளையும் ஜேவிபி பரப்பியது, ஜேவிபி அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்கிறது, ஜேவிபி நாட்டை துண்டிக்க செயல்படுகிறது, ஜேவிபிக்கும் வடக்கிழக்கிலுள்ள பயங்கர வாத இயக்கங்களுக்கும் இடையே தொடர்பு உண்டு, 1982 ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஜேவிபி தனது கொள்கைகளை மாற்றியுள்ளது ஆகிய குற்றச் சாட்டுகளை உறுதியாகவும் பூரணமாகவும் நிராகரிப்பதாக அக்கடிதத்தில் கூறப்பட்டது. அக்கடிதத்தில் விஜேவீர மேலும் இவ்வாறு கூறியிருந்தார். ஜேவிபி ஜனநாயக ரீதியான அரசியல் கட்சி, அதற்கு விஞ்ஞான சோஷலிச அடிப்படையில் அமைந்த தீவிர முன்னேற்றத்திற்கான வேலைத் திட்டம் உண்டு. இலங்கை குடியரசின் பெரும்பான்மையோரது விருப்பத்துடன் இலங்கையில் நிலவும் முதலாளித்துவ சமூக பொருளாதார அமைப்பு முறையை மாற்றி அமைப்பது மட்டுமே அதன் அவசியமாகும் பெரும்பான்மை மக்களது விருப்புக்கு மாறாக செல்லும் நோக்கம் எதுவுமே ஜேவிபிக்கு கிடையாது. பெரும்பான்மையான மக்கள் ஜேவிபியின் சோஷலிச வேலைத்திட்டத்தையே தாமாகவே விரும்பி ஏற்றுக் கொள்ளாவிட்டால் அது ஜனநாயக ரீதியான எதிர்க்கட்சியாகவே செயல்படும், பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்தை பலாத்காரமாக கவிழ்க்கும் நோக்கமோ, ஆசையோ, திட்டமோ, ஆற்றலோ ஜேவிபிக்கு கிடையாது. ஜேவிபி சதி வேலைகளில் ஈடுபடும் ஸ்தாபனம் அல்ல. அது வன்முறையை பிரச்சாரம் செய்யவில்லை. மேன்மை தாங்கி ஜனாதிபதியின் அரசாங்கம் பதவி வகித்த கடந்த ஆறு வருட காலத்தில் இடம்பெற்ற சகல தேர்தல்களிலும் ஜேவிபி பங்கு பற்றியது 1981 மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் ஆறு மாவட்டங்களில் 15 இடங்களைக் கைப்பற்றியது. ஜேவிபி மத்திய கமிட்டியும் அரசியல் குழுவும் 1982 ம் ஆண்டு வெளியிட்ட தமது கொள்கைப் பிரகடனத்தில் ஜனநாயக செயல்முறைகளுக்கு, ஜனநாயக நிறுவனங்களுக்கு, ஜனநாயக வாழ்க்கை முறைக்கு பொதுத் தேர்தல்களுக்கு தம்மை அர்ப்பணம் செய்துள்ளதாக திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

விஜேவீரவால் ஜனாதிபதி ஜெயவர்தனவுக்கு அனுப்பப்பட்ட இக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் பிரதம நீதியரசர், சட்ட மா அதிபர், உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம், அனைத்துலக மன்னிப்புச் சபை, சர்வதேச ஜூரிமார் ஆணைக்குழு, செஞ்சிலுவை சங்கம், சோஷலிஸ்ட் அகிலத்தின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

ஜூலை வன்செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி ஜேவிபி நவசமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றை அரசாங்கம் தடை செய்ததன் நோக்கம் இவ் வன்செயல்களுடன் தொடர்பான பொறுப்புகளிலிருந்து தாம் தப்பித்துக் கொள்வதற்காகவேயாகும். ஆனாலும் இந் நடவடிக்கை பயனளிக்காது என அறிந்தவுடன் ஜேவிபி தவிர்ந்த ஏனைய இருகட்சிகள் மீதான தடையை நீக்கியது.

ஜேவிபி மீதான தடையை தொடர்ந்தும் நீடித்து ஏனைய இருகட்சிகள் மீதான தடையை நீக்கியதன் மூலம் சில நோக்கங்களை நிறைவேற்றலாம் என அரசாங்கம் எண்ணியது. ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கும் ஜூலை வன்செயல்களுக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை என்பது நிருபணம் ஆனவுடன் அவற்றின் மீதான தடையை நீக்கியதாகவும் ஜேவிபிக்கும் ஜூலை சம்பவங்களுக்குமிடையே தொடர்பு இல்லை என்பது நிருபிக்கப்படாததால் தடையை தொடர்ந்தும் நீடிப்பதாக காண்பிப்பதன் மூலம் ஏதோ ஒரு இடதுசாரி இயக்கம்தான் இவ்வன்செயல்களுக்கு பின்னால் செயல்பட்டது என தொடர்ந்தும் கூறுவது ஒரு நோக்கமாகும். இக் கட்சிகள் மீது தடை விதித்த போது தவறு இழைக்கப்பட்டபோதிலும் கலவரத்துடன் தொடர்பில்லை என விளங்கியவுடன் தடையை நீக்கினோம் எனக் கூறி தாம் நேர்மையானவர்களே எனக் காண்பிக்கவும் அரசாங்கம் யோசித்திருக்கலாம்.

தொடரும்

# உலகை மாற்ற முயலும் சினிமா உலகத்தினர்

## அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

தாயகgum வாசgun ஆன சுதர்son ஆட்சேபம்... தாயகம் பத்திரிகை வெளியானவுடன் முதலில் விரித்துப் படிக்கும் பகுதி அறு(சு)வைப் பகுதிதான். அந்தளவுக்கு அப்பகுதியில் வரும் கட்டுரைகள் (விமர்சனங்கள் என்று கூடச் சொல்லலாம்) மிகவும் யதார்த்தமாகவும் உண்மை நிறைந்ததாகவும் இருப்பதே இதற்கு காரணம். திருத்தல புராணம் என்ற பெயரில் வந்த விமர்சனங்கள் மிகவும் உண்மையானது. எனினும் கியுறியஸ் ஒரு இந்துவாக இருந்து எழுதியிருப்பின் ஜீரணிக்க கூடியதாக இருந்திருக்கும். (கியுறியஸ்க்கு எம்மதமும் சம்மதம் என்று தப்பிக்க நினைக்க வேண்டாம்) ஆனால் ஒரு மதத்திலிருந்து இருந்து வேற்றுமதத்தின் கொள்கைகளை எழுதியிருப்பது சில தாயகம் வாசர்களால் விமர்சிக்கப் பட்டது. மனிதரால் வகுக்கப்பட்ட ஒவ்வொரு மதத்திலும் நிறைகுறைகள் உண்டு. நடுநிலையிலிருந்து விவாதிப்பவர்களுக்கு இது நன்கு புரியும். எனவே மனித இனத்தில் ஆண்டாண்டு காலமாக சர்ச்சைக்குள்ளாகி வரும் ஜாதி, மதம் போன்றவற்றை விமர்சிக்க முற்படும் போது எல்லா மதத்திலும் உள்ள குறை நிறைகளை எழுதுவது தான் நடுநிலைப் பத்திரிகையாளனுக்கு அழகு.

இவ்வாறு எழுதியிருக்கிறார். ஆனால் இதற்கான பதிலை நான் சொல்ல முன்னர் இது குறித்து இன்னொரு வாசகரான காங்கேயசர்மா எழுதியது இதோ.... எல்லா கோயில்களையும் எழுதியுள்ளீர்கள் ட்ரஸ்டி என்று ஒரு குழு வைத்து அர்ச்சனை என்று ரிக்கற் கொடுக்கிறார்கள். பல பக்தர்கள் தமது பணம் கடவுளிற்கு சேரவேண்டும் என்ற நம்பிக்கையில் குறைந்த பணத்திற்கு ரிக்கற் எடுத்து கூடிய பணத்தை குருக்கள் கையில் கொடுத்து அர்ச்சனை செய்கிறார்கள். மொன்றியாலிலும் 1/2 மைலிற்கு ஒரு சேர்ச் இருப்பதை காணமுடிகிறது அவற்றைப் பற்றி தாங்கள் ஒன்றும் எழுதவில்லை மொன்றியாலிற்கு வரவில்லையா?

துர்க்கை அம்மன் கோயில் பனை அடைப்பும் நாயுண்ணிப்பற்றை சூழலில் கோயில் இருந்தபோது இருந்த அமைதி பக்தி இன்று இல்லையே! இன்று ஆடம்பரத்தையும் வருமானத்தையும் தானே எதிர்பார்க்கிறார்கள். இபபோ கடவுளும் சில முதலாளிமாரின் வருமானப்பொருள் தானே.

இதை வைத்து தானே கொழும்பில் துர்க்கை அம்மன், நல்லூர் கந்தன், மாவிட்டபுரம் உற்சவங்களை செய்கிறார்கள். முறிகண்டிப்பிள்ளையார் இன்று வரை ஓலைக்கொட்டிலில் இருப்பதால் தானே ஒரு ஷெல்லும் விழாது புதுமை குறையாது எல்லா சமய பக்தர்களும் நேர்த்தி செய்து வழிபட்டு நம்பிக்கையுடன் நடக்கிறார்கள்.

கண்ணதாசன் இந்து மதத்தைப் பற்றி எழுதினார் தாங்கள் இந்து கோயிலைப்பற்றி எழுதுகிறீர்கள். சாது செல்லப்பா கிறிஸ்'தவ சமயத்தைப்பற்றி.. அவரவரின் மனக்கட்டுப்பாடுதான் கடவுள்.

★ ★ ★

குறிப்பிட்ட மதத்தை இழிவுபடுத்தும் நோக்கம் எதுவும் எனக்கு இல்லை. ஏன் கியூறியஸ் கூட இந்துப் பரம்பரையில் வந்தவன் தானே. . கியுறியஸின் தாயார் கூட இந்துவாக இருந்து ம(ன)தம் மாறியவர்தான்.. தந்தை வழியில் கூட கியூறியஸின் கொள்ளுப்பேரனார் கூட மதம் மாறியவர் தான்.. இந்த மத மாற்றங்கள், வெளிநாடுகளில் கிறிஸ்தவ மத மாற்றங்கள் பற்றியும் கியூறியஸின் கட்டுரையை தாங்கள் விரைவில் எதிர்பார்க்கலாம்.. stay tuned..

★ ★ ★

சென்ற வாரம் ரஜனியின் வள்ளி பார்த்தேன். இயக்குனர் மனச்சாட்சி நடராஜன்... மூன்று முடிச்சு படத்தில் ரஜனியின் மனச்சாட்சியாக வருபவர்.. ரஜனியோடு திரைப்படக் கல்லூரியில் ஒன்றாக படித்தவராம்.. இப்போது தன்னுடன் படித்தவர்களுக்கு உதவ வேண்டும் என்று கூறி அவர்களை வைத்து வள்ளியை எடுத்திருக்கிறார். படத்தில் விளம்பரம் பூராவும் ரஜனிக்கே அன்றி வேறு யாருக்கும் இல்லை. யார் அந்தப் புதுமுகம்? அசப்பில் சீதா போலவே இருக்கிறார்.

★ ★ ★

தான் முழுமையாக நம்பி தன் 'கற்பை' கொடுக்க, தன்னை ஏமாற்றுபவனை



பழிவாங்கும் பெண்ணின் 'புரட்சிக்கதை'. பரவாயில்லை. இதுவரையும் படங்களில் ஏற்கனவே எத்தனையோ பெண்களைக் கெடுத்தவர்களை கதாநாயகர்கள் தங்கள் தங்கைமாருக்கு கட்டிக் கொடுத்து தீர்வு கண்டார்கள். அந்த வில்லர்களால் பாதிக்கப்பட்ட மற்றப் பெண்களுக்கு எந்த தீர்வுமே இல்லை. இதனால் அந்தப் பெண் பழிவாங்குவதாக கதை..

★ ★ ★

படத்தில் ரஜனிகாந்த் ஒரு நாடோடியாக வருகிறார். கிட்டத்தட்ட வாடைக்காற்று படத்தில் சுடலையில் வாழும் ஜவாகர் மாதிரி... அடிக்கடி வந்து தத்துவ முத்துக்களை உதிர்த்துச் செல்கிறார். முதல்வராக இன்னொருவர் வருகிறார். அசல் ரஜனியின் தோற்றத்திலேயே.. தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து நடிகர்களுக்கு எல்லாம் முதல்வராகும் கனவு, ஒட்டோமட்டிக்காகவே வந்து விடுகிறது.

சிவாஜி காங்கிரஸ் கட்சிக்கு தானே தூண் என்று நினைத்து ஏமாந்தார். இறுதியில் ஜானகிக்கு ஆதரவு, ஜனதா தளத்திற்கு ஆதரவு என்று போய் இறுதியில் இடமில்லாமல் அலைகிறார். தற்போது காங்கிரசில் சேரக் கூடும் என்று எதிர்பார்ப்பு..

பாக்கியராஜ் பாவம்.. எம்.ஜி.ஆர் கலையுலக வாரிசு என்றதும் அதை நம்பி ஏமாந்தார். இறுதியில் தனக்கு கொம்பு சீவி விட்டவர்களைத் திட்டிக் கொண்டார்.

கரடி ராஜேந்தரும் கட்சி அமைத்து மனைவியை போட்டிக்கு விட்டார். இறுதியில் சேர்த்த பணத்தை சீரழித்தது தான் மிச்சம்.. இப்போது சிம்புவுக்கு முதல்வராவதற்கான கனவு தொடங்கியிருக்கும்.

கிராமராஜன் பாவம்.. கரகாட்டக்காரன் ஓடியதை நம்பி ஏமாந்து இறுதியில் அன்னை பராசக்தியின் கோபத்துக்காளாகி விலாசம் இல்லாமல் இருக்கிறார்.

கமல் மட்டும் தான் இந்த சேற்றுக்குள் அகப்படாமல் தப்பித்து நிற்கிறார்.

சினிமாவும் அரசியலும் தமிழ்நாட்டில் பிரிக்க முடியாத அம்சங்களாகி விட்டன. என்றாலும் தங்கள் படங்கள் ஓடுகின்றன என்றதும் அவர்கள் எல்லாம் தமக்கு வாக்களிப்பார்கள் என்று கனவு காண்கின்ற முட்டாள் கூட்டத்தை என்ன செய்வது?

★ ★ ★

ரீகனை உதாரணம் காட்டி, எம்.ஜி.ஆரை உதாரணம் காட்டியும் தான் இவர்கள் கொடி பிடிக்கிறார்கள். ரீகன் சினிமாவை விட்டு நாளாச்சு. ரீகனின் கவர்ச்சிக்காக யாரும் வாக்களித்ததாக தெரியவில்லை.

வாத்யார் நிலை வேறு.. வாத்யார் நீண்ட காலத் திட்டத்தை மனதில் வைத்திருந்தார். கணிப்புகள் சரியானதுடன் கருணாநிதியின் கணிப்புகள் தவறானதும் இதற்கு காரணம்..

ஜெயலலிதா கூட வாத்யாரின் நிழலாக இருந்ததால் தான் பதவிக்கு வந்தார்.

பாத்திரங்களும் பாடல்களும் வாத்யாரை புனிதராக்கியிருந்தன. தனக்கு என விசுவாசமான கூட்டத்தை வைத்திருந்தவர் அவர்.

★ ★ ★

ஆந்திராக்காரர்கள் புத்திசாலிகள்.. என்.டி.ஆரை கிருஷ்ணர் என்று நம்பி ஓட்டுப் போட்டார்கள். காவியுடையும் துண்டும் உடுத்த ராமராவ் இப்போது துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓட்டம் தான்.. ஏதோ கிருஷ்ணர் மாதிரி எல்லாம் அற்புதமாகக் கொண்டு வந்து குவிப்பார் என்று வாக்களித்தார்கள். எதிர்பார்ப்பில் மண் விழுந்தது. என்.டி.ஆர் பிழைப்பிலும் மண் விழுந்தது. சினிமா மாயை உடைந்து இப்போது என்.டி.ஆரும் இன்னொரு அரசியல்வாதி என்றளவில் தான் கணிக்கப்படுகிறார்.

★ ★ ★

வாத்யாரும் இறுதிக் கட்டத்தில் செல்வாக்கை இழந்தவர் தான். ஆனால் வாத்யார் அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற போது சத்துணவு போட்ட மகான் பாண் சாப்பிடக்கூட முடியாத நிலையில் இருக்கிறார் என்று வீடியோவைப் போட்டு, இவர் மீண்டும் வரும் போது முதல்வராகப் பார்க்கப் போகிறீர்களா? இல்லையா? என்று ஆளும் கட்சி கேட்டதால் மீண்டும் வாக்குக் கிடைத்தது. இறுதி வரை வாத்யாருக்கு இதனால் தான் வெள்ளித்திரை..

★ ★ ★

தமிழன் முட்டாள் என்பது இதனால் நிரூபணம்.. ஆந்திராக்காரன் விழித்துக் கொண்டான். தமிழன் வால் பிடித்தான்.

★ ★ ★

இப்போ ரஜனி நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்க்க வள்ளியை விட்டிருக்கிறார். இந்த வள்ளியின் பெயர் முள்ளும் மலரும் படத்தில் ரஜனியின் தங்கையாக வரும் ஷோபாவின் பெயர்.

ரசிகர் குழாமும் அண்ணனுக்கு முதல்வர் ஆசனத்தைக் கொடுக்க வேண்டும் என்று துடியாய் துடிக்கின்றது. அண்ணனும் என்ன செய்வார்? மெதுவாய் மனம் துடிக்கிறது. தெளிவாக சொல்லவும் முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை.

★ ★ ★

பத்திரிகைகளும் விடுவதாக இல்லை. முன்பு ரஜனிக்கு லதாவுக்கும் காதல் என்று செய்தி வந்ததும் எம்.ஜி.ஆர் அவரைத் தண்டித்ததாக கதை.. இதன் பின்னர் தான் ரஜனிக்கு பைத்தியம் என்று பத்திரிகைகள் எழுதின. அதே பத்திரிகைகள் இன்று ரஜனியை புகழ்ந்து எழுதுகின்றன. அதே ரஜனிகாந்தின் ராகவேந்திரர் பக்தி பற்றி எழுதுகின்றன. முதல்வராவார் என்று எழுதுகின்றன. காலமடா தம்பி!

★ ★ ★

இப்போது ஜெ யிற்கும் ரஜனியின் பிரவேசம் பயத்தைத் தருகிறதோ என்னவோ, ரஜனியைச் சந்தித்ததற்காக வீரப்பன் ஒதுக்கப்பட்டார். அண்ணாமலையில் பாலசந்தர் இதை வைத்து தனக்கு பிழைப்பு தேடிக் கொண்டார். இப்போது தனது நிலைப்பாட்டை 'தெளிவாக்க' வள்ளி படம்...

முழுக்க முழுக்க தனது சொந்த தத்துவங்களை உதிர்த்திருக்கிறார்.. தனக்கு அரசியலுக்கு வர விருப்பமில்லை என்று தான் சொல்கிறார். முதல்வர் பதவியில் யார் உட்கார்ந்தாலும் எதுவும் பண்ணமுடியாது. நடக்க விட மாட்டாங்க என்கிறார்.

சரி.. எதைத் தான் பண்ணப் போகிறார் இவர்? செய்யக் கூடியதைச் செய்வதற்குள்ளேயே ஊழல் பண்ணி உள்ளதையும் கெடுக்கிறார்கள்.. செய்ய

கூடியதை செய்வதே எவ்வளவு மேலானது. பிறகு புரட்சி வரவேண்டும் என்கிறுர். மகாத்மா மாதிரித் தலைவர் வர வேண்டும் என்கிறுர். தலைவர் சர்வாதிகாரியாக இருக்க வேண்டும் என்கிறுர். அரசியலமைப்பு மாற வேண்டும் என்கிறுர். அவசர கால சட்டம் வரவேண்டும் என்கிறுர். நிலத்தை அனைவரும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்கிறுர்.

எல்லாம் குழப்பமாயும் முன்னுக்குப் பின் முரணுயும் இருக்கிறதே.

சரி.. நிலமும் சொத்துக்களும் பணக்காரர்களிடமும் அரசியல் வாதிகளிடமும் இருக்கின்றன. படம் நடிப்பதற்காக லட்சக் கணக்கில் வாங்கியதுவே பாதாதென்று சில ஏரியாக்களை வினியோகிக்கும் உரிமை தங்களுக்கு வேண்டும் என்று ரஜனி போன்றவர்கள் முரண்டு பண்ணியதால் தானே சினிமாத் துறை கொஞ்சக் காலம் முடங்கிக் கிடந்தது.

மற்றவர்களின் நிலங்களை பிரித்துக் கொடுக்குமாறு கேட்கும் ரஜனி முதலில் தன் சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கட்டும்.... ஒரு முன்மாதிரிக்காக

இப்படி அரசியல் பேசிய எத்தனை பேரைத் தான் தமிழகம் கண்டிருக்கிறது.

★ ★ ★

ஈழத்தமிழர் பிரச்சனை தொடர்பாக இந்திய நட்சத்திரங்கள் சென்னையில் ஊர்வலம் போன போது.. ஒரு நடிகையைக் கேட்டார்களாம்.. ஏன் ஊர்வலம் போகிறீர்கள் என்று..

சிலோனில் தமிழர்களை எரிக்கிறுங்க.. ஜெயவர்த்தனே என்ற கொடியவன் தான் காரணம்.. ஆட்சியை பறித்து முதலியாரிடம் கொடுத்தால் எல்லாம் சரி என்றுர்களாம்..

யார் அந்த முதலியார்? அத்துலத் முதலிதான். இது எப்படி இருக்கு..

★ ★ ★

இதையெல்லாம் மாக்ஸிஸம் மாதிரி மண்டைக்குள் சொருகிக் கொண்டு உலகம் மாற புதிய பாதை என்று ரஜனி ரசிகர் கூட்டம் அலையப் போகிறது.

உலக ரஜனி ரசிகர்களே ஒன்றுபடுங்கள்!

★ ★ ★

புரட்சி வரும். விடியும். உலகமெல்லாம் ரஜனியின் படம் பட்டொளி வீசிப் பறக்கும். ரஜனி ரசிகர்களின் கையில் ஆட்சி வரும். தளபதி, மாவீரன், உழைப்பாளி, பால்காரன் எல்லாம் பொல்லாதவன்களை ஒழித்து...

★ ★ ★

தளபதி மாவீரன் என்றதும் நம்ம ஆட்கள் ஞாபகம் வருகிறுர்கள். கிட்டுவின் இறுதிச் சடங்குகளை தரிசனம் வீடியோவில் பார்த்தேன். கிட்டுவின் அம்மாவைப் பார்க்க கவலையாக இருந்தது. தாயுள்ளம்... கதறி அழும் போது கண் கலங்கச் செய்கிறது.

இருந்தாலும் எத்தனை தாயுள்ளங்கள் எரியும் தணலில் தங்கள் பிள்ளைகள் கருகியதைக் கண்டிருக்கக் கூடும்? அந்தக் கண்ணீரை எந்த வீடியோ தான் சுமந்து வரும்?

வினை விதைத்தவன்....

★ ★ ★

அப்பனும் அண்ணனும் போரில் இறந்து விட்டார்கள் என்று பால் மணம் மாருப் பாலகனை போருக்கு அனுப்பிய தாயைக் கண்ட புறநானூறு...

மகன் இறந்த சேதி கேட்டு தலைவனைக் கட்டியணைத்து அழுகிறுர்.

★ ★ ★

புறநானூறு என்றதும் ஞாபகம் வருகிறது. கணையாழியில் சமீபத்தில் சுஜாதா எழுதியிருந்தார். மெயின்லாண்டு தமிழர்கள் அகத்துறையையும் ஈழத்தமிழர்கள் புறத்தையும் கடைப்பிடிக்கிறுர்கள் என்று இன்னெருவர் எழுதியதை சுஜாதா பாராட்டியிருக்கிறுர்.

புறநானூற்றை பற்றித் தானே பேராசிரியர் வேலுப்பிள்ளை எழுதியிருந்தாரே.. தனது இனத்தையே கொன்று அதில் வெற்றி கொண்டாடுகின்ற முட்டாள்தனமான இனம் தமிழினத்தைத் தவிர வேறில்லையே...

ஒரு புறத்தில் புறநானூற்றுத் தலைவனை.. போரில் தனது மகனை இழந்த தாய் கண்ணீர் மல்க கட்டியணைத்து அழுவதைத் தானே பார்க்கிறேம்.

மறுபுறத்தில் கரும்புலிகளின் குடும்பத்தினர் தங்கள் மகன்மாரின் வீரமரணம் பற்றி பெருமிதப்படுவதையும் பார்க்கிறேம்.


**This newspaper is published by**
**Georgicka communications.**
**A member of**
**Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F",**
**Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்:
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறேம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**

**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

ANTONY BROTHERS

516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அந்தனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்


லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ்,ஹிந்தி,
மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப்
பெறலாம்

- முத்திரை, சிகரெட்,
  *TTC Tickets, Lottery Tickets*
- ஃபாக்ஸ், போட்டோக்கொப்பி வசதிகள்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**



SIVA'S TRADING CO LTD
321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

**சிவாஸ் ரேடிங் கோ**

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

**P.S.S.T**

எக்கோ, தொம்சன் கசட்டுகள் 1.99
8 லேசர் இசைத்தட்டுக்கள் 29.99
வீடியோ பிரதி வாடகைக்கு 99 சதம்
VIDEO TRANSFER (ANY SYSTEM) 8.99

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**TEL:609-0141**

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்